ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

# பெரிய திருமொழி.

[பெருமாள் கோயில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

---

## பதினோராம்பத்து—முதல் திருமொழி,

## குன்றமொன்றெடுத்தேந்தி.

உரையவதாரிகை:—* வாடினேன் வாடி தொடங்கி இவ்வளவாகப் பத்துப்பத்தாலே திவ்ய தேசங்களின் அநுபவத்தைத் தலைக்கட்டின ஆழ்வார் அதற்குப் பிறகு பரமபதஞ்செல்லவேணுமென்னும் விருப்பங்கொள்ளப்பெற்று 'எம்பெருமான் இனி நம்முடைய அபிமதத்தைத் தலைக்கட்டியல்லது நில்லான்' என்கிற நிச்சயமுந்தோன்றிப் பரமபதத்திற்குப் பயணம் புறப்படுவதாகவே பாவித்துக்கொண்டு பிறந்தகத்தில் நின்றும் புக்ககம்போகப் புறப்படுகின்ற பெண்பிள்ளை தான் நெடுநாள் வசித்த விடத்திலே தன்னோடு மிகவும் பழகியிருந்த பரம ப்ரேமாஸ்பதமான சில பெண்பிள்ளைகளைச் சென்று பணிந்து, 'தங்காய்! நான் போய்வருகிறேன், மாதே! நான் போய்வருகிறேன்' என்று சொல்லுதற்குச் சில குறிகள் எழிறக்குமாபோலே ஆழ்வாரும் தம் புக்ககமாகிய பரமபதத்தின் பயணத்திற்குப் பூர்வாங்கமாகத் தமது மிக்க ஸ்நேஹத்திற்கிடமான சில திருப்பதிகளிலே சொல்லிக்கொள்வதாக நினைந்து நினைந்து புறப்பட்டார்—கீழ்ப் பத்தாம்பத்தின் முதற்பதிகத்திலே. பெண்பிள்ளை மணக்கோலங்கள் செய்துகொண்டு தன்னைக் கூடிய வண்டாறுங்கோதையெல்லாம் செய்து முடித்தாலும் தாலிகட்டினவன் தகவில்லாமையில் அதுதனக்காக வெல்லாம் பழகினபோலே இன்னமும் இவ்வாழ்வானைக்கொண்டு லோகோஜ்ஜீவநமாகப் பல பாசுரங்கள் பாடுவிக்கத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் இவருடைய அபிமதத்தைச் செய்து தலைக்கட்டாதே தன்னுடைய திவ்யாவதார சேஷ்டிதங்களையே மேன்மேலும் அநுபாவ்யமாகக் காட்டிக்கொடுக்க, அவற்றையெல்லாம் ஒவ்வொரு படியாக அநுபவித்துப் பேசினார் "இரக்கமின்றியெங்கோன் செய்த தீமை" என்னுந்திருமொழி முதலாக, "காதில் கடிப்பிட்டு" என்னுந்திருமொழியளவும்.

அவ்வளவிலே பழைய அபிநிவேசமே மிகுந்தது. மேல், எம்பெருமானைப் பிரிவாற்றாமையின் மிகுதியை மேலிட்டு திருமொழிகளாலே அநுபவிக்கப்

பாசுரமுகமாக வெளியிட்டார். இத்திருமொழியிலே, தென்றல் முதலான பாதக பதார்த்தங்களாலே மிகவும் நோவுபடுகிற வொருபிராட்டி பாசுரத்தாலே தம்முடைய விரஹ வேதனையை விளங்கக்காட்டுகிறார். ராமக்ருஷ்ணாதி அவதாரங்களாலே பல படியாலும் உலகத்தை வாழ்வித்த பெருமான் நம்மை இப் பாடுபடுத்துவதே! என்கிறாள். .... .... .... *

குன்றமொன்றேடுத்தேந்தி * மாமழை
அன்றுகாத்த வம்மான் * அரக்கரை
வென்ற வில்லியார் வீரமேகொலோ *
தென்றல்வந்து தீவீசுமென்செய்கேன். (க)

| | | | |
|---|---|---|---|
| அன்று | முன்பொருகால் | அரக்கரை | ராக்ஷஸர்களை |
| குன்றம் ஒன்று | (கோவர்த்தனமென்கிற) ஒருமலையை | வென்ற | கொன்றொழித்த |
| எடுத்து | (குடையாக) உயரவெடுத்து | வில்லியார் | வில்லையுடையருமான பெருமானுடைய |
| ஏந்தி | (ஏழுநாள் ஓய்வின்றிப்) பிடித்துக் கொண்டிருந்து | வீரமே கொலோ | பராக்ரமத்தினலோ |
| மா மழை | (இந்திரன் பெய்வித்த) பெருமழையில் நின்றும் | தென்றல் வந்து தீ வீசும் | தென்றற்காற்று வந்து நெருப்பை வீசுகின்றது! |
| காத்த | (அடியார்களைக்) காப்பாற்றி யருளின | என் செய்கேன் | (இதற்கு) என்ன பண்ணுவேன்! |
| அம்மான் | ஸ்வாமியும் | | |

* * *—இந்திரன் பசிக்கோபத்தினால் ஏழுநாள் விடாமழை பெய்வித்த வன்று கோவர்த்தன மலையையே குடையாக வெடுத்துப் பிடித்து ஆயரையும் ஆநிரையையும் காத்தருளின பெருமான் அப்படிப்பட்ட ரக்ஷகத்வத்தை என்னிடத்திலும் காட்டவேண்டியிருக்க அது செய்யாதே ஒரு தென்றற் காற்றைவிட்டுத் தீ வீசும்படி செய்கிறானே! இது வென்!!; ஒரு பிராட்டிக்காக ராக்ஷஸ ஜாதியையெல்லாம் அழியச்செய்து அவளைக் கைக்கொண்ட பெருமான் அங்ஙனம் என்னையும் கைக்கொள்ளாவிடினும் தென்றலைவிட்டுத் தீ வீசுதலையுஞ் செய்திட வேணுமோ வென்கிறாள்.

[தென்றல் வந்து தீ வீசும்; (இது)........வில்லியார் வீரமே கொலோ] தென்றலோ வென்னில் பொதுவாக எல்லார்க்குங் குளிர்ச்சியைப் பண்ணுநின்றது; அதுதானே என்னளவில் நெருப்பை உமிழாநின்றால் இதுதனக்கு ஒரு ஹேது இருக்கவேணுமே; குன்றெடுத்து மழைதடுத்து, வில்லெடுத்து அரக்கரை மடித்தவர் இந்திரனிடத்திலும் அரக்கரிடத்திலும் காட்டின வீர்யத்தை என்னிடத்திலுங் காட்டவேண்டி இத்தென்றலைத் தீ வீசுமாறு ஏவினர் போலும்; "பீஷாஸ்மாத் வாத: பவதே" என்ற உபநிஷத்தின்படி அவர்க்கு அஞ்சி நடுங்கி உலாவக்கடவதன்றோ காற்று; அது தீ வீசும்போதைக்கு அவருடைய ஸங்கல்பமே அடியாயிருக்கவேணுமிறே என்கிறாள். ... .... (க)

காரும்வார் பனிக்கடலு மன்னவன் *
தாருமார்வமுங்கண்ட தண்டமோ? *
சோருமாமுகில் துளியி னூடேவந்து *
ஈரவாடைதான் ஈரு மென்னையே. (௨)

| | |
|---|---|
| சோரும் | வர்ஷிக்கின்ற |
| மா முகில் | காளமேகத்தினுடைய |
| துளியினூடே வந்து | துளியினுள்ளேயிருக்கிற குளிர்ச்சியை கூட்டிக்கொண்டுவந்து |
| ஈரம் வாடைதான் | (அதனால்) குளிர்ச்சிமிக்க வாடைக்காற்றானது |
| என்னை ஈரும் | என்னை ஹிம்ஸிக்கின்றது; (இது) |
| காரும் வார் பனி கடலும் அன்னவன் | காளமேகத்தையும், பரந்த குளிர்ந்த கடலையும் ஒத்திருக்கின்ற எம்பெருமானுடைய |
| தாரும் | திருத்துழாய்மாலையையும் |
| மார்வமும் | திருமார்பையும் |
| கண்ட | காணவேணுமென்று ஆசைப்பட்டதற்கான |
| தண்டமோ | சிக்ஷையோ? |

* * *—தென்றல்வந்து நோவுபடுத்தினமை சொல்லிற்று கீழ்ப்பாட்டில்; வாடைவந்து நோவுபடுத்துகின்றமை சொல்லுகிறது இப்பாட்டில். பெய்கின்ற மழைத்துளியைத் துணையாகக்கொண்டு வீசுகின்ற வாடைக்காற்றானது, எற்கனவே விரஹத்தாலே இளைத்திருக்கின்ற என்னுடலை நற்கொலையாக முடித்திடாதே உயிர்க்கொலையாகச் சித்திரவதம் செய்யாநின்றதே!, இதற்கு யாது காரணம்? என்று ஆராய்ந்தால், அப்பெருமானுடைய திருமார்பு திருமாலையுமான அழகைக்காணவேணுமென்று ஆசைப்பட்டேனே, அதற்காக நேர்கின்ற சிக்ஷை போலும் இது-என்கிறாள். இதனால், பகவத் விஷயத்தில் ஆசை கொள்ளாதார்க்கு மாமுகில்துளியும் வாடைக்காற்றும் இனிதாயிருக்கும்; பகவத் விஷயத்தை ஆசைப்பட்டுப் பெறாதார்க்கு லௌகிக பதார்த்தங்களெல்லாம் பாதகமாயிருக்கும் என்றதாயிற்று. "மன்னு பெரும்புகழ் மாதவன் மாமணிவண்ணன் மணிமுடி மைந்தன்றன்னை யுகந்தது காரணமாக என் சங்கிழக்கும் வழக்குண்டே" என்ற நாச்சியார் திருமொழியின் கருத்துக் காண்க.

ஈர்தல்—அறுத்தல். .... ... .... (௨)

சங்குமாமையுந்தளரு மேனிமேல் *
திங்கள்வெங்கதிர் சீறுமென்செய்கேன்? *
பொங்குவெண்டிரைப் புணரிவண்ணனார் *
கொங்கலர்ந்ததார் கூவுமென்னையே. (௩)

| | |
|---|---|
| சங்கும் | கைவளைகளும் |
| மாமையும் | நிறமும் |
| தளரும் | சோர்ந்திருக்கப்பெற்ற |
| மேனி மேல் | (எனது) உடம்பின்மேலே |
| திங்கள் | சந்திரனுடைய |
| வெம் கதிர் | கொடிய கிரணங்களானவை |
| சீறும் | சீறுகின்றன; |
| பொங்கு வெண் திரை புணரி வண்ணனார் | கிளர்கின்ற வெளுத்த அலைகளையுடைய கடல் போன்ற நிறமுடையரான பெருமானுடைய |

| | | | |
|---|---|---|---|
| கொங்கு அலர்ந்த தார் | பரிமளம் விரிகின்ற திருத்துழாய்மாலையானது | என் செய்கேன் | என்ன பண்ணுவேன்!. |
| என்னை கூவும் | என்னோடே போர்செய்ய அறைகூவாநின்றது!, | | |

* * *—கையில்வளைகளும் தங்கமாட்டாதே நிறமும் நிலைநிற்கமாட்டாதே மாறும்படியாய்த் தளர்ந்து கிடக்கின்ற எனது உடம்பின்மேலே சந்திரன் தானும் தனது நெருப்புப்போன்ற நிலாவையிட்டு நிக்ரஹிக்கின்றானே! இதற்கென் செய்வேன்!. இவ்வளவேயோ? இன்னமும், கடல்வண்ணனுடைய திருத்துழாய் மாலையும் மார்பு நெறித்து வந்து 'என்னோடே ஒரு கைபார்க்கவல்லையோ?' என்று அறை கூவுகின்றதே!, இதற்குத்தான் என் செய்வேனென்கிறாள்.

விரஹிணிகட்கு நிலா பாதகமென்பது "மேவுதண்மதியம் வெம்மதிய மாலோ" என்ற திருவாய்மொழியாலும் விளங்கும்.

"கொங்கலர்ந்த தார் கூவும்" என்றதன் கருத்து யாதெனில்; "தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர் முடிமேலும், தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடை யம்மான்" என்கிறபடியே அவயவங்கள் தோறும் அப் பெருமான் திருத்துழாய் மாலை அணிந்துகொண்டிருக்குமழகை ஆராயுங்கால், ஸ்த்ரீத்வத்திற்குத் தக்கபடி உள்ளே பதுங்கியிருக்கவேண்டிய அடக்கத்தையும் அப்பால் தள்ளிவிட்டு வீதியேறப் புறப்பட்டுச்சென்றாகிலும் கண்டு களிப்பதே கருமம் என்று துணிவு உண்டாகின்றதேயென்றவாறு. "காரிகையார் நிறைகாப்பவர் யாரென்று கார்கொண்டின்னே மாரி கையேறி அறையிடுங்காலத்து" என்ற திருவிருத்தத்தை அடியொற்றி "கூவும்" என்பதற்குக் கருத்துக் கொள்க. (௩)

அங்கோராய்க்குலத்துள்வளர்ந்துசென்று *
அங்கோர்தாயுருவாகி வந்தவள் *
கொங்கைநஞ்சுண்ட கோயின்மைகொலோ?
திங்கள்வெங்கதிர் சீறுகின்றதே. (௪)

| | | | |
|---|---|---|---|
| திங்கள் | சந்திரனுடைய | அங்கு ஓர் தாய் உரு ஆகி வந்தவள் | அங்குத்தாயாகியயசோதைப் பிராட்டியின் வடிவு பூண்டுவந்தவளான பூதனையினுடைய |
| வெம் கதிர் | கொடிய கிரணங்கள் | | |
| சீறுகின்றது | சீறுவதானது,— | | |
| சென்று | (மதுரையில்நின்றும்) போய் | கொங்கை நஞ்சு உண்ட | முலையில் தடவியிருந்த விஷத்தை உறிஞ்சியுண்ட |
| அங்கு ஓர் ஆய் குலத்துள் வளர்ந்து | அந்த விலக்ஷணமான இடைக் குலத்திலே வளர்ந்து கொண்டிருக்கையில், | கோயின்மை கொலோ | பராக்ரமமடியாகவோ?. |

* * *—குளிர்ச்சியையே இயல்வாகவுடைய சந்திரன் இப்போது என் திறத்திலே தன் தன்மைமாறி வெக்காயம் காட்டுவது வெறுமனன்று; "இன்ன இன்ன பதார்த்தங்கள் இன்ன இன்னபடி வர்த்திக்கக்கடவன" என்று முதலிலே ஸங்கல்பித்தவன் ஸர்வேச்வரனுகையாலே அவனுடைய ஸங்கல்பாதீநமாகவே

குளிர்ச்சியை இயல்வாகவுடையனாயிருக்க சந்திரன் இப்போது அந்தளப்பெருமானுடைய ஸங்கல்பத்தினாலேயே இப்படி சுடவேண்டும். அவன்றான் * ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனாயொளித்து வளர்ந்தருளுங்காலத்திலே தன்னை நலிவதாகத் தாயுருக்கொண்டுவந்த பூதனையென்னும் பேய்ச்சியின் முலையை உயிரோடே உறிஞ்சியுண்ட பராக்ரமத்தையே பாவியேனிடத்திலுங் காட்டவேண்டி அதற்காக இங்ஙனே சந்திரனை ஏவினன் போலும் என்கிறாளென்க.

[அங்கு ஓர் ஆய்க்குலத்துள்.] கண்ணபிரான் பிறந்த இடமோ கம்ஸனுக்கு மிகவுமஞ்சவேண்டிய இடம்; அந்தோ! என் செய்வதென்று வஸுதேவரும் தேவகியாரும் நோவுபடுகிற ஸமயத்திலே ஒதுங்கி வளர்தற்கு ஓர் புகலிடம் வாய்த்ததே! என்ற மகிழ்ச்சியினால் 'அங்கு ஓர்' என்றது.

கோயின்மை=கேட்பாரற்ற செயல். "குழகி யெங்கள் குழமணன் கொண்டு கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை" என்ற திருவாய்மொழிப் பிரயோகமுங்காண்க. இச்சொல் வேறு பொருளிலேயும் வருவதுண்டு; "அடிமையென்னும் அக்கோயின்மையாலே" என்ற பெரியாழ்வார் திருமொழி காண்க. .... .... .... .... ... (௪)

அங்கோ ராளரியா யவுணனை *
பங்கமா இருகூறு செய்தவன் *
மங்குல்மாமதி வாங்கவேகொலோ?
பொங்குமாகடல் புலம்புகின்றதே. (௫)

| | | | |
|---|---|---|---|
| அங்கு | ப்ரஹ்லாதாழ்வான் 'எங்குமுளன் கண்ணன்' என்று சொன்னவப்பொழுதே | இரு கூறு செய்தவன் | இருதுண்டமாகக் கிழித்த பெருமான் |
| ஓர் | ஒப்பற்ற | மங்குல் மா மதி | ஆகாசத்திலே விளங்குகின்ற சிறந்த சந்திரனை |
| ஆள் அரி ஆய் | நாரஸிம்ஹ மூர்த்தியாக அவதரித்து | வாங்கவே கொலோ | (தன்னிடத்தில் நின்றும்) அபஹரித்ததனாலேயோ |
| அவுணனை | (இரணியனென்னும்) அசுரனை | பொங்கு மா கடல் | திரைக்கிளப்பத்தையுடைய கருங்கடலானது |
| பங்கம் ஆ | மானபங்கமாகி | புலம்புகின்றது | கோஷிக்கின்றது!. |

* * *—விரஹிகளுக்குக் கடலோசையும் பாதகமாகையாலே அதற்கு நோவுபட்டுச் சொல்லுகிறாள். இக்கடல் எதுக்கு இங்ஙனே புலம்புகின்றது? என்று ஆராய்ந்து பார்த்தாள்; எம்பெருமான் இக்கடலிடத்தில் நின்றும் மாமதியை வாங்கிவிட்டதனாலேயோ இது இங்ஙனே புலம்புகின்றது! என்று தன்னில்தான் அநுமானித்துச் சொல்லிக்கொள்ளுகிறாள். இங்கு மாமதி என்றது சிலேடை; (இரண்டு பொருள்பட நின்றது.) நல்ல புத்தி என்று ஒரு பொருள்;

சந்திரன் என்று மற்றொரு பொருள். நல்லபடுத்தியிருந்தால் இக்கடல் இங்ஙனே புலம்ப மாட்டாது; மதியையிழந்ததனாலாயிற்று இங்ஙனே புலம்புகின்றது! என்று ஒரு சமத்காரமாகச் சொல்லுகிறபடி. மதியையிழந்தது மெய்யோ? என்னில்; எம்பெருமான் அமரர்களுக்காக இக்கடலைக் கடைந்தருளின காலத்தில் "ஸுராஸுரைர்விஷமிதவாரிஜாதஜீர்ண்ணாத் ஸநா வமிணஸோ ஜலதி வெஹ்லேவ = அச்வாப்ஸரோவிஷஸுதாவிது பாரிஜாத லக்ஷ்ம்யாத்மநா பரிணதோ ஜலநிர்ப் பபூவ." (அதிமாநுஷஸ்தவம்.) என்கிறபடியே, ஐராவதயானை, உச்சைச்ரவஸ் என்னுங் குதிரை, காலகூட விஷம், அம்ருதம், கல்பவிருக்ஷம், லக்ஷ்மி முதலிய பதார்த்தங்களுடனே மதியும் வெளிப்பட்டதின்றே. (மதி—சந்திரன்.)

ஆக, ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பரிந்து இரணியனை இருபிளவாக்கிப் பங்கப்படுத்தின பெருமான் கடல்கடைகிற வியாஜத்தாலே மாமதியை வாங்கிவிட்டதனாலேயோ இது கீழ்மண் கொண்டு மேல்மண்ணெறிந்து ஆரவாரிக்கின்றது! என்றதாயிற்று. ஒருவன் நல்ல சரக்கைப் பறிகொடுத்து விட்டால் புலம்புகை ப்ராப்தமேயன்றே.

இங்கே வியாக்யான வாக்கியங்கள் காண்மின்;—"தன்னை நெருக்கிக் கடைந்து உள்ளுண்டான மதியை வாங்குகையாலோ இக்கடல் இங்ஙனே கிடந்து கூப்பிடுகிறது!; என்னைப்போலே மதியிழந்தோ இக்கடலுங் கூப்பிடுகிறது!; * மதியெல்லா முள்கலங்கியிறே இவளுங் கிடக்கிறது!. ஒன்றுக்கும் விக்ருதையாகாத நான் கலங்கிக் கூப்பிடுகிறாப்போலேயிருந்ததீ! இக்கடலும் தன் காம்பீர்யமெல்லாம் அழிந்து கூப்பிடுகிறபடியும்." .... .... (ரு)

சென்றுவார்சிலைவளைத் திலங்கையை *
வென்றவில்லியார் வீரமேகொலோ?
முன்றிற் பெண்ணைமேல் முளரிக்கூட்டகத்து *
அன்றிலின்குர லடருமென்னையே. (சு)

| | | | |
|---|---|---|---|
| சென்று | எதிரிகளிருக்குமிடந் தேறச் சென்று | முன்றில் பெண்ணை மேல் | வாசலிலுள்ள பனைமரத்தின்மேலே |
| வார் சிலை | பெரியவில்லை | முளரி கூட்டகத்து | தாமரைப் பூவாலே இயற்றப்பட்ட கூட்டிலே கிடக்கிற |
| வளைத்து | (நாணேற்றி) வளையச் செய்து | அன்றிலின் | அன்றிற்பறவையினுடைய |
| இலங்கையை | லங்காபுரியை | குரல் | தொனியானது |
| வென்ற | அழித்த | என்னை அடரும் | என்னை வருத்துகின்றதே!. |
| வில்லியார் | வில்வல்லவரான பெருமானுடைய | | |
| வீரமே கொலோ | பராக்ரமமடியாகவோ | | |

* * *—அன்றில் என்பது ஒரு பறவை; அது எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்கும்; கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்றுதரம் கத்திக் கூவி அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்துபடும்: இப்பறவையை வடநூலார் க்ரௌஞ்சமென்பர். ஆணும்பெண்ணுமான அந்த அன்றிற் பறவை இணைபிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக்கொண்டு உறங்கும்பொழுது அவ்வுறக்கத்தில் வாயலகு தன்னில் நெகிழ்ந்தவளவிலே துயிலுணர்ந்து அந்த நெகிழ்ச்சியையும் பொறாமல் மெலிந்து பெருந்தொனியாகக் கத்துகிற மிக இரக்கத்தக்க சிறுகுரல் காமோத்தீபகமாய்ப் பிரிவாற்றாமைத் துயரை வளர்த்து விரஹிகளை மிக வருத்துமென்பர். "பெண்ணை மேல் பின்னுமவ்வன்றில் பெடைவாய்ச் சிறு குரலும், என்னுடைய நெஞ்சுக்கு ஓர்வாளா மென்செய்கேன்" என்பர் பெரிய திருமடலிலும். இங்கும் இவ்வன்றிலின் குரலினால் தான் நோவுபடுகிறபடியைக் கூறுகின்றாள் பரகாலநாயகி.

* உண்ணாது உறங்காது ஒலி கடலையூடறுத்து இலங்கை சென்று சிலை வளைத்து அம்பு எய்து செய்த செயலெல்லாம் என்னைப் போன்றவொரு பிராட்டிக்காகவேயன்றோ; அவளிடத்துப்போலே என்னிடத்தும் இரக்கங் காட்டிக் காரியஞ் செய்ய வேண்டியிருக்க அது செய்யாதே எதிரிகளிடத்திற் காட்டின வீரத்தையே என்னிடத்திலுங்காட்டவேண்டி இங்ஙனே அன்றிலின் குரலையிட்டு அடர்க்கிறார்போலும்! என்கிறாளாயிற்று. பரிவுக்கு இலக்காக்காதே பராக்ரமத்துக்கோ என்னை இலக்காக்கிற்று! என்கிறாள்.

முன்றில்—இல்முன். பெண்ணை—பனைமரம். முளரிக் கூட்டகத்து= "தாமரைப் பூவாலும் தாதாலும் தண்டாலும் செய்த கூட்டிலே கிடக்கிற" என்பது வியாக்கியானம். .... ... .... (சு)

பூவைவண்ணனார் புள்ளின்மேல்வர *
மேவிநின்றுநான் கண்டதண்டமோ? *
வீவிலைங்கணைவில்லி அம்புகோத்து *
ஆவியேயிலக்காக வெய்வதே! (எ

| | | | |
|---|---|---|---|
| ஐங்கணை வில்லி | மன்மதனானவன் | பூவை வண்ணனார் | காயாம்பூவண்ணரான பெருமான் |
| வீவு இல் | இறைப்பொழுதும் ஓய்வில்லாமல் | புள்ளின் மேல் வர | பெரியதிருவடியின் மீது எழுந்தருள, |
| அம்பு கோத்து | பாணங்களைத் தொடுத்து | நான் மேவி நின்று | நான் விரும்பிநின்று கொண்டு |
| ஆவியே இலக்கு ஆக எய்வது | என் உயிரையே லக்ஷியமாகக் கொண்டு பிரயோகிப்பதானது. | கண்ட தண்டமோ | கண்டதற்கான தண்டனையோ?. |

* * *—"தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கு, ஓர் மீனாப் கொடி நெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ?" என்று திருவாலிப் பதிகத்திற் பேசியது போலவே இங்கும் பேசுகிறாள்.

பஞ்சபாணனாகிய மன்மதன் தனது கருப்புவில்லிலே மலரம்புகளைத் தொடுத்து என் ஆவியையே இலக்காகக்கொண்டு பிரயோகிப்பதானது, எம்பெருமான் பெரிய திருவடியின்மீது எழுந்தருள ஒருகால் நான் ஸேவிக்கப் பெற்றதற்கு இட்ட தண்டனையோ என்கிறாள். பகவத்விஷயத்தில் ஆசை கொள்ளாதார்க்குச் சாமவேதனை கிடையாதென்றும், பகவத் விஷயத்தில் ஈடு பட்டது காரணமாகவே தமக்கு இக்காமநோய் உண்டாயிற்றென்றும் தெரிவித் தாராயிற்று.

பூவை—காயாம் பூவின் ஒருசாதியென்பர். .... .... (எ)

மாலினந்துழாய் வருமென்னெஞ்சகம் *
மாலினந்துழாய் வந்தென்னுட்புக *
கோலவாடையுங்கொண்டு வந்ததோர் *
ஆலிவந்ததா லரிது காவலே. (அ)

| | | | |
|---|---|---|---|
| என் நெஞ்சகம் | எனது நெஞ்சானது | வந்தது ஓர் ஆலி | (ஏற்கனவே தனியே) வந்து பார்த்துப்போனவொரு சிறு துளியானது |
| மால் இனம் | (அப்பெருமான் பக்கலுண்டான) வியாமோஹத்திற்குத் தகுதியாக | கோலம் | அழகிய |
| துழாய்வரும் | அலைந்துகொண்டு வாரா நின்றது; | வாடையும் | வாடைக்காற்றையும் |
| மாலின் | (அந்த) எம்பெருமானுடைய | கொண்டு வந்தது | துணைகூட்டிக் கொண்டு வந்து விட்டது; |
| அம் துழாய் | அழகிய திருத்துழாய் மாலையானது | ஆல் | அந்தோ! (இனி) |
| என்னுள் வந்து புக | என்னுடைய நினைவுக்குவர, | காவல் | (உயிரைக்) காப்பாற்றிக் கொள்ளுதல் |
| | | அரிது | முடியாதகாரியம். |

* * *— 'என் நெஞ்சகம் மால் இனம் துழாய்வரும்' என்று முதலடியைப் பிரித்து அந்வயிப்பது. என்னுடைய நெஞ்சானது தான் கொண்டிருக்கிற வியாமோஹத்திற்குத் தகுதியாகக் கவலைகொண்டிருக்கின்றது என்றபடி. துழாய்—துழாவி; "கடலும் மலையும் விசும்புந்துழாய்" என்ற திருவாய்மொழிப் பிரயோகமுங்காண்க. இனி இரண்டாமடியை, 'மாலின் அம் துழாய்வந்து என் உள்புக' என்று பிரித்து அந்வயிப்பது. அந்த எம்பெருமானுடைய அழகிய திருத்துழாயானது எனது உள்ளத்திற்புக; (அதாவது) அத் திருத்துழாயை நான் நெஞ்சால் நினைத்தமாத்திரத்திலே என்றபடி. [வந்ததோர் ஆலி கோல

வாடையுங் கொண்டு வந்ததால்.] ஆலிபாவது சிறுதுளி. (மழைத்துளி.) இது விரஹிகளுக்கு உத்தீபகமெனப்படும். இது ஏற்கனவே வந்து என்னை நலிவதற்கு நிலம்பார்த்துப் போயிற்று; தருந்த துணைகூட்டிக்கொண்டு வந்து நலியவேணுமென்று பண்டே பார்த்துப் போயிற்று; அது இப்போது வாடைக்காற்றைத் துணைகொண்டு வந்திட்டது; இனி என்னைக் காத்துக்கொள்ளுதல் எளிதன்று என்கிறாள்.

முதலடியும் இரண்டாமடியும் யமகம். (அ)

கெண்டையொண்கணுந் துயிலும்* என்னிறம்
பண்டுபண்டுபோ லொக்கும்* மிக்கசீர்த்
தொண்டரிட்ட பூந்துளவின்வாசமே *
வண்டுகொண்டுவந்தூதுமாகிலே. (௯)

| | |
|---|---|
| மிக்க சீர் தொண்டர் | அநந்யப்ரயோஜநரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் |
| இட்ட | ஸமர்ப்பித்த |
| பூ துளவின் | திருத்துழாய் மலரின் |
| வாசம் | பரிமளத்தை |
| வண்டு | வண்டானது |
| கொண்டு வந்து | முகந்துகொண்டு வந்து |
| ஊதும் ஆகில் | (என்னருகில்) ஊதுமானால் |
| கெண்டை ஒண் கணும் | கெண்டை மீன்போன்று அழகிய (எனது) கண்களும் |
| துயிலும் | உறக்கங்கொள்ளும்; |
| என் நிறம் | எனது மேனிநிறமும் |
| பண்டு பண்டு போல் ஒக்கும் | முன்னைய வண்ணமாகும். |

* * *—எம்பெருமானுடைய திருவடியிணைகளிலே பரம பாகவதர்கள் ஸமர்ப்பித்த திருத்துழாய் மலர்களின் பரிமளத்தைக் கொய்து கொண்டுவந்து இங்ஙனே வண்டு ஊதுமாகில் என்னுடைய கண்களும் துயில்கொள்ளும், என்னுடைய மேனியும் பழையநிறம் பெறும் என்கிறாள்.

'என்நிறம் பண்டுபோலொக்கும்' என்னாதே "பண்டுபண்டுபோ லொக்கும்" என்றதில் ஒரு விசேஷார்த்தமுண்டு; கேண்மின். இப்போதைய என் அவஸ்தைக்கு முற்பட்டதான யாதொரு அவஸ்தையுண்டோ, அதற்கும் முற்பட்டதான யாதொரு அவஸ்தையுண்டோ, அவ்வவஸ்தையில் நான் எப்படியிருந்தேனோ அப்படி ஆவேன் என்றபடி. இதனை விவரிப்போம்;— இப்போதைய அவஸ்தையாவது விரஹாவஸ்தை (பிரிவுநிலைமை); இதற்கு முந்திய அவஸ்தையாவது ஸம்ச்லேஷாவஸ்தை (கூடிக்களித்திருந்த நிலைமை); அதற்குமுந்திய அவஸ்தையாவது—பகவத் விஷய வாஸனையே தெரியாமல் அந்யபரமாகப் போது போக்கின காலம்; * உண்டியே உடையே உகந்திருந்த காலம். அப்போது சரீரம் வாடாமல் வதங்காமல் மாமை குன்றாமல் பசுருபசுருகென்றிருக்குமிறே. ஒரு விசாரமுமின்றி உண்டுடுத்துத் திரியுங் காலத்திலே மேனி நித்ய புஷ்டமாயிருக்கும். பகவத் விஷயத்தில் வாஸனை பண்ணிப் போந்தது முதலாக "ஸம்யோகா

விப்ரயோகாந்தா: :" என்கிறபடியே க்ஷணகாலம் ஸம்ச்லேஷமும் நெடுங்காலம் விச்லேஷமுமாய் வ்யஸநமே மீதூர்ந்து செல்லுகையாலே, இப்போதைய விரஹாவஸ்தைக்கு முந்தியதான ஸம்ச்லேஷாவஸ்தையிலுள்ள நிறத்தைப் புகழ்ந்து கூறுதல் சிறவாதென்று, அதற்கும் முந்தியதான அந்யபரத்வாவஸ்தையில் இருந்த நல்ல நிறத்தை உத்தேசித்துப் பண்டுபண்டுபோலொக்கும் என்றது. இங்கே பெரிய வாச்சான் பிள்ளையின் மிக அழகிய திவ்ய ஸூக்திகள் காண்மின்; "அவன் வாய் புலற்றும் நிறம் அறப்பண்டுபோலேயாம்; கலக்கையாகிறது பிரிவுக்கு அங்குரமிறே; கலந்து பிரிந்து லாபாலாபங்களறியாதே பூர்ணையாயிருந்தபோதை நிறம்போலேயாம்"—என்று.

நாச்சியார் திருமொழியில் "பாணியாதென்னை மருந்து செய்து பண்டு பண்டாக்க வுறுதிராகில்" என்றதும் நோக்கத்தக்கது; அங்கும் இதுவே கருத்தென்க.

[மிக்க சீர்த் தொண்டரிட்ட] தொண்டர், சீர்த்தொண்டர், மிக்க சீர்த் தொண்டர் என மூவகைப்படுவர் கைங்கர்ய பரர்கள். க்ஷுத்ர பலன்களை விரும்பி அடிமைபூண்டிருப்பவர்கள் தொண்டர்; சிறந்த புருஷார்த்தத்தை விரும்பி அதற்கு உபாயாநுஷ்டாநம்போல அடிமையைப் பூண்டிருப்பவர்கள் சீர்த்தொண்டர்; ஒரு பலனையும் பேணாதே ஸ்வயம்ப்ரயோஜநமாகக் கைங்கரியம் செய்துவரும் அநந்ய ப்ரயோஜநாதிகாரிகள் மிக்க சீர்த்தொண்டர். அப்படிப்பட்டவர்கள் ஸமர்ப்பித்த புஷ்பங்களின் பரிமளத்தையாயிற்று இங்கு விரும்புவது.

வாசம்—வாஸநா என்ற வடசொற் சிதைவு. .... .... .... (௯)

அன்றுபாரதத்து ஐவர் தூதனாய் *
சென்றமாயனைச் செங்கண்மாலினை *
மன்றிலார்புகழ் மங்கை வாட்கலி
கன்றி* சொல்வல்லார்க் கல்லலில்லையே. (௧௦)

அன்று — முன்பொருகால்
பாரதத்து — பாரதயுத்தத்திற்குப்பூர்வாங்கமாக
ஐவர் தூதன் ஆய் — பஞ்சபாண்டவர்கட்குத் தூதுவனாய்
சென்ற — எழுந்தருளின
மாயனை — ஆச்சரிய சக்தியுக்தனும்
செம் கண் மாலினை — செந்தாமரைக் கண்ணனுமான ஸர்வேச்வரன் விஷயமாக,

மன்றில் ஆர் புகழ் — நாற்சந்திகள் தோறும் நிறைந்தபுகழையுடையரும
மங்கை — திருமங்கை நாட்டையுடையவரும்
வாள் — வாட்படை கொண்டவருமான
கலிகன்றி — ஆழ்வார் (அருளிச்செய்த)
சொல் — இந்த ஸ்ரீஸூக்திகளை
வல்லார்க்கு — ஓதவல்லவர்களுக்கு
அல்லல் இல்லை — ஒரு துன்பமும் உண்டாக மாட்டாது.

* * *—துரியோதநாதியரையும் பாண்டவர்களையும் பொருந்தவிடவேண்டித் தூதுநடந்த எளிமைக் குணமுடைய புண்டரீகாக்ஷனை ஆசைப்பட்டுத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இத் திருமொழியைக் கற்று வல்லவர்களுக்கு இங்ஙனே எம்பெருமானைப் பிரிந்து வருந்துகையாகிற துன்பம் நேரிடாதென்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று.

[தூதனாய்ச் சென்ற செங்கண்மாலினை] கண்ணபிரான் தூது எழுந்தருளின போது விதுரர் திருமாளிகையிலே அமுது செய்து ஸபைக்குச் சென்றவாறே "𑌭𑍀𑌷𑍍𑌮𑌦𑍍𑌰𑍋𑌣𑌾𑌵𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌮𑌾𑌂𑌚𑍈𑌵 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨। 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷! 𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍃𑌷𑌲𑌭𑍋𑌜𑌨𑌮𑍍?—பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந!—கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்?" [குலத்தாலும் கல்வியாலும் செல்வத்தாலும் மேன்மைபெற்ற பீஷ்மரும் த்ரோணரும் நானுமிருக்க எங்களைவிட்டுப் பள்ளிச்சோறு ஏன் தின்றாய் கண்ணனே!] என்று துரியோதனன் நிந்தித்துச் சொல்லுகிற ஸமயத்திலும் 'புண்டரீகாக்ஷ!' என்று திருக்கண்ணழகிலே யீடுபட்டு வாழ்த்தவேண்டும்படி யிருந்ததனால் "தூதனாய்ச் சென்ற செங்கண்மாலினை" என்றது. .... .... .... (௧௦)

அடிவரவு:—குன்றம் காரும் சங்கு துங்கோமாய் துங்கோமாளரி சென்று பூவை மாலினம் கொண்டல் அன்று குன்றமெடுத்து.

முதல் திருமொழி உரைமுற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—இரண்டாந்திருமொழி,

# குன்றமெடுத்து மழைதடுத்து.

உரையவதாரிகை :—இத்திருமொழியும் நாயகிஸமாதியாலே செல்லுகிறது. விரஹவ்யஸநம் மீதூர்ந்து அன்றில் தென்றல் முதலிய பதார்த்தங்களும் நோவு படுத்துகிறபடியைப் பன்னியுரைப்பது இத்திருமொழியும். ... ... *

குன்றமெடுத்து மழைதடுத் திளையாரோடும் *
மன்றிற்குரவைபிணைந்தமால் என்னைமால்செய்தான் *
முன்றிற்றனிநின்ற பெண்ணைமேற்கிடந்தீர்கின்ற *
அன்றிலின்கூட்டைப் பிரிக்ககிற்பவரார்கொலோ. (க)

| | |
|---|---|
| குன்றம் | கோவர்த்தனமலையை |
| எடுத்து | குடையாகவெடுத்துப் பிடித்து |
| மழை தடுத்து | மழையைத்தடை செய்தவனும் |
| இளையாரோடும் | இளம் பெண்களோடே |
| மன்றில் | நாற்சந்தியிலே |
| குரவை பிணைந்த | கைகோத்துக் குரவைக் கூத்தாடினவனுமுள்ள |
| மால் | கண்ணபிரான் |
| என்னை மால் செய்தான் | என்னை மதிமயக்கப் பண்ணிவிட்டான்; |
| முன்றில் | வாசலிலே |
| தனி நின்ற | தனியேநின்ற |
| பெண்ணை மேல் | பனைமரத்தின் மீது |
| கிடந்து | இருந்துகொண்டு |
| ஈர்கின்ற | ஹிம்ஸிக்கின்ற |
| அன்றிலை | அன்றிற்பறவையை |
| கூட்டின் | கூட்டில் நின்றும் |
| பிரிக்க கிற்பவர் ஆர் கொலோ | பிரித்துவிடவல்லவர்யாரோ (அறியேன்)? |

* * *—கோவர்த்தன மலையைக் குடையாக வெடுத்துப்பிடித்து ஏழுநாள் ஒருபடியாகத்தாங்கிநின்று கோவலரையும் கோநிரைகளையும் காத்தருளினவனும், ஆயர்மங்கையரோடே பலர்காணக் குரவைக்கூத்தாடினவனுமான எம்பெருமான் என்னை இப்படிப்பட்ட வியாமோஹத்திற்கு ஆளாக்கிவிட்டான் என்பன முன்னடிகள். ஆனைத்தொழில்செய்தும் அடியார்களைக் காத்தருளினவனன்றோ? உகந்தாரோடே ஒருநீராகக் கலந்துபரிமாறுவதற்குப் பாங்காகப் பலவடிவுகள் கொண்டு ("[illegible] அங்கநாமங்கநாமந்தரே மாதவோ மாதவம் மாதவஞ் சாந்தரேணாங்கநா." என்னும்படியே) ராஸக்ரீடைசெய்தருளின ரஸிகனன்றோ? இப்படிப்பட்டவன் நம்மைக் கைவிடுவனோவென்று நம்பியிருந்து மோசம் போனேன்

என்பது உட்கருத்து. தன்னுடைய திருக்குணங்களைக்காட்டி என்னை யீடுபடுத்தி இங்ஙனே சந்தியில் நின்று திண்டாட வைத்தானென்கிறாள்.

இதுவேஸமயமாகக் கண்ணெதிரே பனைமரத்தி லிருந்துகொண்டு அன்றிற் பறவையும் மெல்லிய தழுதழுத்த குரலாலே ஒப்பின்றி கலிகின்றது; எம்பெருமானைக் கொண்டுவந்து என்னோடே கூட்டாதொழியினும் இவ்வன்றிற்பறவையைக் கூட்டிலிருந்து துரத்தவல்லாரையாவது கிடைக்கப்பெறுமோ வென்பன பின்னடிகள்.

அன்றிலின்கூட்டை—உருபுபிரித்துக் கூட்டியுரைக்கப்பட்டது. அன்றிலைக் கூட்டில் நின்றும் பிரிக்கவேணுமென்கை. .... ... .... (௧)

பூங்குருந்தொசித் தானைகாய்ந் தரிமாச்செகுத்து *
ஆங்குவேழத்தின்கொம்பு கொண்டுவன்பேய்முலை
வாங்கியுண்ட * அவ்வாயன் நிற்க இவ்வாயன்வாய்
ஏங்குவேய்ங்குழலென்னோ டாடுமிளமையே. (௨)

| | | | |
|---|---|---|---|
| பூ குருந்து ஒசித்து | பூத்திருந்த குருந்தமரத்தை முறித்தொழித்தவனும் | வாங்கி | கையிற்பிடித்து |
| ஆனை காய்ந்து | ரிஷபங்களைச் சீறிமுடித்தவனும் | உண்ட அவ் வாயன் | உறிஞ்சியுண்ட அப்படிப்பட்ட திருப்பவளத்தையுடையனுமாயிருக்கிற கண்ணபிரான் |
| அரி மா | (கேசியென்கிற) சத்ருவான குதிரையை | நிற்க | உதாஸீனனாயிருக்க, |
| செகுத்து | கொன்றவனும் | ஆயன் | அந்த கோபால கிருஷ்ணனுடைய |
| ஆங்கு | கம்ஸனது அரண்மனை வாசலிலே | வாய் | வாயிலே |
| வேழத்தின் | (குவலயாபீடமென்கிற) யானையினுடைய | ஏங்கு | ஒலிக்கின்ற |
| கொம்பு கொண்டு | தந்தத்தைப்பறித் தெறிந்தவனும் | இ வேய் குழல் | இந்த வேய்ங்குழலானது |
| வன் பேய் | (பூதனையென்னும்) வலிய பேய்ச்சியினுடைய | என்னோடு | என்திறத்திலே |
| முலை | (நஞ்சுதீற்றிய) முலையை | இளமை ஆடும் | சில சிறுச்சேவகங்கள் செய்யாநின்றது. |

* * *—கண்ணபிரானுடைய வேணுகானம் செவிப்பட்டுப் பிரிவாற்றாதே வருந்திப்பேசுகிற ஒரு ஆய்ப்பெண்ணின் நிலைமையிலே நின்று பேசும் பாசுரமாயிற்றிது. ஸர்வசக்தனான எம்பெருமான் வாளாகிடக்க, அவனுடைய வேய்ங்குழல் என்னோடே தோள்வலிகாட்டி வருகின்றதே யென்கிறாள்.

கம்ஸனாலேவப்பட்ட ஒரு அஸுரனால் ஆவேசிக்கப்பட்டிருந்த குருந்த மரத்தை அவ்வஸுரனுட்பட ஒசித்தொழித்தவனும், நப்பின்னைப்பிராட்டியை மணந்து கொள்ளுதற்காகக் காளைகளேழையும் செரித்தவனும், (அன்றியே, எருது வடிவுகொண்டு வந்து நலியவந்த அரிஷ்டநேமியென்னு மசுரனைக் கொன்றவனும்

கேசியை முடித்தவனும், குவலயாபீட மதயானையின் கொம்பை முறித்துத் தொலைத்தவனும் பேய்ச்சிமுலைசுவைத்துறிருண்ட வாயனுமான அக்கண்ணபிரான் என்னை நேர்கொடுநேரே வந்து நலிந்தானாகில் 'ஸர்வ சக்தனான அவனாலே நாம் நெருக்குண்பது ப்ராப்தமே' என்று ஒருவாறு ஆறியிருக்கலாம்; அவன் நம்மை நெஞ்சிலும் இட்டெண்ணாதிருக்க, அவன் வாயில் வைத்து ஊதுகிற அசேதனமான இந்த வேய்ங்குழல் என்பாடே மீசைமுறுக்கி வருகின்றதே! இது என்ன போராதகாலமோவென்று பரிதபிக்கிறாள். "மங்கல நல்வனமாலை மார்விலிலங்க மயில்தழைப் பீலிசூடிப், பொங்கிளவாடை அரையில் சாத்திப் பூங்கொத்துக் காதில் புணரப்பெய்து, கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழலினிதூதிவந்தாய், எங்களுக்கே யொருநாள் வந்தூத உன் குழலினிசை போதராதே." [பெருமாள் திருமொழி 6-9.] என்றாப்போலே, நம்மை இங்ஙனே பிரிவாற்றாமைத் துயரத்திலே தள்ளித் தனக்கு இனியரான சில பெண்களோடே அவன் குழலூதிக் களித்துத் திரிகின்றானே!, நம்மையுங் கூட்டிக்கொண்டு குழலூதுவது எப்போதோ! என்கிற நிர்வேதம் இப்பாசுரமாகப் பரிணமித்ததாயிற்று. முதலடியில், 'ஆனைகாய்த்து' என்றதில், ஆன் என்றசொல் இரண்டனுருபுவுற்று வந்துள்ளது; 'ஆனைக் காய்த்து' என வலிமிகாதது வழுவன்று; வடமொழியில் சாந்தஸப்ரயோகம்போலக் கொள்ளத்தக்கது. .... .... (௮)

மல்லோடு கஞ்சனுந்துஞ்ச வென்ற மணிவண்ணன் *
அல்லிமலர்த்தண்டுழாய் நினைத்திருந்தேனையே *
எல்லியின் மாருதம் வந்தடுமே துவன்றியும் *
கோல்லைவல்லேற்றின் மணியுங் கோயின்மைசெய்யுமே. (௯)

| | | | |
|---|---|---|---|
| மல்லொடு | மல்லர்களும் | எல்லியில் மாருதம் | அந்திப்போதில் வீசும் காற்றானது |
| கஞ்சனும் | கம்ஸனும் | வந்து | நானிருக்குமிடத்திலே வந்து வீசி |
| துஞ்ச | முடியும்படி | அடும் | நலிகின்றது; |
| வென்ற | வெற்றிபெற்ற | அது அன்றியும் | அதுவுந்தவிர |
| மணி வண்ணன் | நீலமணிவண்ணனான கண்ணபிரானுடைய | கொல்லை வல் ஏற்றின் மணியும் | வெளி நிலங்களில் நின்றும் மீண்டுவருகிற வலிய காளைகளின் கழுத்துமணி யோசையும் |
| அல்லி தண் துழாய் மலரையே | இதழ்களையுடையதாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாய் மாலையையே | கோயின்மை செய்யும் | தொந்தரவுபடுத்தாநின்றது. |
| நினைத் திருந்தேனை | சிந்தித்துக்கொண்டிருக்கின்ற என்னை | | |

* * x—சாணூரன் முஷ்டிகன் முதலான மல்லர்களையும் கம்ஸனையும் நிர்க்கநிக்கிரை செய்யும்படியாகக் கொன்றொழித்த கண்ணபிரானுடைய கலவி கிடைக்கப் பெறாதொழியினும் அவனது திருமேனியில் ஸம்பந்தம் பெற்ற திருத்துழாய் மாலையாகிலும் எளிது கிடைக்குமோ வென்று அல்லும்பகலும்

இதுவே சிந்தனையாகக் கிடக்கிற என்னை அந்தக்காற்றும் மாட்டின் கழுத்து மணியோசையும் வருத்துகின்றனவே யென்கிறாள்.

எம்பெருமானுடைய திருத்துழாய்ப் பிரசாதத்தை நான் கருதாமல் ஊராரோடொப்ப உண்டுடுத்துக் களித்துத் திரிந்தேனாகில் தென்றலுக்கும் நான் வருந்த வேண்டியிராது; அதில் ஆசை வைத்தமையாலன்றோ பிறர்க்கு இன்பமளிப்பவற்றால் நான் துன்புறவேண்டிற்றாயிற்று என்கிறாள்.

மாருதம்—வடசொல். .... .... .... (௫)

பொருந்துமா மரமேழு மெய்தபுனிதனார் *
திருந்து சேவடியென் மனத்து நினைதோறும் *
கருந்தண் மாகடல் கங்குலார்க்குமதுவன்றியும் *
வருந்தவாடை வருமிதற்கினி யென்செய்கேன். (௬)

| | | | |
|---|---|---|---|
| பொருந்து | தம்மில்தாம் பொருந்துகின்ற | கரு தண் மா கடல் | கறுத்துக் குளிர்ந்து பெரிதான கடலானது |
| மா மரம் ஏழும் எய்த | பெரிய ஸாலவ்ருக்ஷங்களேழையும் அம்புசெலுத்தித் துளைபடுத்தின | கங்குல் | இரவுமுற்றும் |
| புனிதனார் | பரமபரிசுத்தரான பெருமானுடைய | ஆர்க்கும் | ஆரவாரிக்கும்; |
| திரு உந்து | ஐச்வர்ய ப்ரகாசகமான | அது அன்றியும் | அதுவுந்தவிர, |
| சே அடி | திருவடிகளை | வாடை | வாடைக்காற்றும் |
| என் மனத்து | என்னெஞ்சிலே | வருந்த | நான் பரிதபிக்கும்படியாக |
| நினை தோறும் | அநுஸந்திக்கும்போதெல்லாம் | வரும் | வந்து வீசுகின்றது; |
| | | இதற்கு | இதற்குப் பரிஹாரமாக |
| | | இனி என் செய்கேன் | இனி என்ன பண்ண வல்லேன்?. |

* * *—ஆச்ரிதனான ஸுக்ரீவ மஹாராஜனுக்கு அரியன செய்தும் விச்வாஸத்தைப்பிறப்பித்துக் காரியம் செய்த மஹாநுபாவர் ஏற்கனவே விச்வாஸங் கொண்டிருக்கிற நம்மைக் கைவிடமாட்டாரென்று அவருடைய திருவடிகளையே தஞ்சமென்றிருக்கை நமக்கு ப்ராப்தம் என்று அத்யவஸாயங்கொண்டு அத்திருவடிகளைச் சிந்திக்கும்போதெல்லாம் ஸமுத்ரகோஷமும் வாடைக்காற்றும் வந்து நலிகின்றனவே யென்கிறாள். என்னுடைய மநோரதப்படி அவருடைய திருவடிகள் எனக்குக் கிடையாமையாலே விரஹ வேதனையினால் நிலமங்கையா கடற்கும் வாடைக்கும் வருந்த வேண்டியிருக்கிறதென்கை.

இதற்கு இனி என் செய்கேன்!—ரக்ஷகர்தாமே கைவிட்டால் நான் செய்து கொள்ளத் தக்கது ஏதேனுமுண்டோ? அவருடைய அருளே அரண் என்றவாறு.

இரண்டாமடியில் 'திருந்து சேவடி' என்றதற்கு "ஐச்வர்யப்ரகாசகமான திருவடிகளை" என்று பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான மிட்டருளினதற்கு இணங்க "திரு உந்து" என்று பிரித்து உரைக்கப்பட்டது. 'திருவுந்து' என்று

சந்நியாகாதது தொகுத்தல் விகாரம். இனி 'திருந்து சேவடி' என்பதை வினைத்தொகையாகவுங்கொண்டு உரைக்கலாம்; திருந்துதலாவது- ஆச்ரிதர்கட்கென்றே வாய்த்திருத்தல். ... .... .... .... (௪)

அன்னைமுனிவது மன்றிலின் குரலீர்வதும் *
மன்னு மறிகடலார்ப்பதும் வளைசோர்வதும் *
பொன்னங்கலை யல்குலன்னமென்னடைப்பூங்குழல்*
பின்னைமணாளர் திறத்தமாயின பின்னையே. (௫)

| | | | |
|---|---|---|---|
| அன்னை முனிவதும் | பெற்றதாய் சீறிச் சொல்லுவதும் | அன்னம் மென் நடை | அன்னத்தின்நடை போன்று அழகிய நடையையுடையவளும் |
| அன்றிலின் குரல் ஈர்வதும் | அன்றிற்பறவையின்குரல் ஹிம்ஸிப்பதும் | பூ குழல் | பூவணிந்த கூந்தலை யுடையளுமான |
| மன்னு மறி கடல் ஆர்ப்பதும் | எப்போதும் அலைமடியப் பெற்ற கடல் கோஷிப்பதும் | பின்னை | நப்பின்னைப் பிராட்டியின் |
| வளை சோர்வதும் | கைவளைகள் கழல்வதும் (ஆகிய இவையெல்லாம்) | மணாளர் | நாயகரான கண்ணபிரானுடைய |
| அம் | அழகிய | திறத்தம் ஆயின பின்னையே | விஷயத்தில் ஈடுபட்டோமான பிறகே. |
| பொன் கலை | பொன்னுடையணிந்த | | |
| அல்குல் | நிதம்பத்தையுடையவளும் | | |

.(அதற்கு முன்பு இல்லை.)

* * *—நான் பகவத் விஷயத்திலே கைவைப்பதற்கு முன்னம் தாயானவள் என்னை ஒருவார்த்தையும் பொடிந்து சொல்லியறியாள்; அன்றில் பறவையின் குரல் முன்பு கேட்கப்படும்போது செவிக்கு மிக இனிதாயிருந்தது; அப்போது கடலோசைதானும் காது கொடுத்துக் கேட்கலாயிருந்தது; உடலும் பூரித்து வளைகள் நெருக்குண்டிருந்தன. இப்போது அநுபவிக்கிற கஷ்டங்களில் ஒன்றும் முன்பு நான் அனுபவித்ததேயில்லை; பின்னை மணாளரான எம்பெருமான் திறத்திலே நெஞ்சு செலுத்தப் பெற்றபின்பே தாய் சீறிச் சொல்லும்படியாகவும் அன்றிலின்குரலால்கஷ்டப்படும்படியாகவும் கடலோசைக்கு நோவுபடும்படியாகவும் கைவளைகள் கழலும்படியாகவும் பெற்றேன் என்கிறாள்.

[அன்னை முனிவதும்.] 'தாய் தகப்பன்மார் சுற்றத்தார் முதலானோர் இருக்கும்போது அவர்களைக்கொண்டு தனக்குற்ற நன்மைகளைத் தேடிக் கொள்ள வேண்டியது கருதியாயிருக்க, இச் சிறு பெண்பிள்ளை எல்லாரையும் திரஸ்கரித்துவிட்டுத் தான்றோன்றியாகத் 'தானே [பகவத் விஷயத்தில்) ஒரு நாயகனைக் காதலித்துப் புறப்பட்டாள் !; இப்படியும் ஒரு அநியாயமுண்டோ ?' என்பது தாய் சீறிச்சொல்லும் வார்த்தையாமென்க.

மூன்றுமடி முழுதும் நப்பின்னைப் பிராட்டிக்கு அடைமொழி.

இப் பாட்டின் வியாக்கியானத்திலே—" பூர்வாபரங்களுக்குச் சேர்த்தி போராதாகிலும் பிள்ளையுறங்கா வில்லிதாஸர் ' பின்னைமணாளர் திறத்தோமான

பின்பன்றோ இவை இப்படியாயிற்று; ஸாமாந்யனென்று இடுமீடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே அவரோடே ஒரு ஸம்பந்தஞ் சொல்லி நலிகிறவை நலிந்தாலென்? என்பராம்"—என்ற ஸ்ரீஸூக்திகள் இங்குக் காணத்தக்கன. பாதக பதார்த்தங்களால் நோவுபட்டு வருந்திப் பேசுகிற இத் திருமொழியிலே இப்பாட்டுக்குப் பிள்ளையுறங்காவில்லிதாஸர் அருளிச்செய்யும் கருத்து பிரகரணத்தோடு அவ்வளவு பொருந்தாதாயினும் சுவையுடைத்தாயிருக்கும். அவர் அருளிச்செய்யும் கருத்து ஏதென்னில்; அன்னை முனிவதும் அன்றிலின் குரல் ஈர்வதும் மன்னுமறிகடலார்ப்பதும் வளைசோர்வதும் நாம் பின்னைமணாளர் திறத்திலே யீடுபட்டிருக்கிறோமென்கிற காரணத்தினால்தானே; அந்தக் காரணம்பற்றியாகில் அவை நமக்கு உத்தேச்யமே—என்பதாம்.

"ஸாமாந்யனென்று இடுமீடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே" என்ற வியாக்கியான வாக்கியத்தின் கருத்து யாதெனில்; முற்காலத்தில் திருமாலிருஞ் சோலையில் ஸாமாந்யரென்றும் சோழியரென்றும் இருவகுப்பினர் ஸந்நிதி கைங்கரியாதி விஷயமாக அடிக்கடி பிணக்குண்பர்; அதனால் ஒருவர்க்கொருவர் போர்செய்து வலிதாக அடித்துக் கொள்ளுதலுமுண்டாம்; ஒரு ஸமயத்தில் மிக இருட்டான இடத்திலே [ஸந்நிதி ப்ரதக்ஷிணத்திலே] கைகலந்து போர் நடக்கையில், ஒரு சோழியர் மற்றொரு சோழியரையே வலிதாகப் புடைத்தார்; புடைப்பவருடைய மிடற்றோசையைக் கண்டறிந்த புடையுண்பவர் 'ஐயோ! நான் சோழியனாயிற்றே, என்னை எதுக்கு அடிக்கிறீர்?' என்று கதற, அதுகேட்ட அவர் 'அப்படியா?, தெரியாது அடித்து விட்டேன்; ஸாமாந்யனென்றுப்ரமித்து அடித்து விட்டேன்' என்ன; அதுகேட்ட இவர் 'அப்படியாகில் இன்னமும் அடியும்; ஸாமாந்யனென்று என்னை எவ்வளவு அடித்தாலும் அத்தனையும் எனக்கு உத்தேச்யமே' என்றாராம். அதுபோல, பகவத் விஷயத்திலீடுபட்டேனென்கிற காரணத்தினால் அன்னைமுனிவது முதலான கஷ்டங்கள் எனக்கு நேர்வனவாகில் தாராளமாக நேரட்டும்-என்பதாகப் பிள்ளையுறங்காவில்லிதாஸருடைய தாத்பர்யங் காண்க. இதனால் பகவத்விஷயத்தில் இத்தலைவிக்கு உள்ள காதலின் ஊறைப்பு வெளியாகும்.

திறத்தம்—தன்மைப்பன்மைக் குறிப்புவினைமுற்று. .... (ரு)

ஆழியுஞ் சங்குமுடைய நங்களடிகள்தாம் *
பாழிமையான கனவின் நம்மைப்பகர்வித்தார் *
தோழியும் நானுமொழிய வையந்துயின்றது *
கோழியுங்கூகின்றதில்லை கூரிருளாயிற்றே. (சு)

ஆழியும் சங்கும் உடைய } திருவாழி திருச்சங்குகளையுடையயான

நங்கள் அடிகள் தாம் } அஸ்மத்ஸ்வாமியான ஸர்வேச்வரன்

நம்மை — நம்மை

பாழிமையான கனவின் } மிகப்பெரிதாய் ஸ்வப்ந[illegible]மான ஸம்ச்லேஷத்தினால்

| | | | |
|---|---|---|---|
| பகர்வித்தார் | இப்படி கூப்பிடும்படியாகச் செய்துவிட்டார்; | துயின்றது | உறங்கிவிட்டார்கள்; |
| தோழியும் நானும் ஒழிய | தோழியும் நானும் தவிர | கோழியும் | கோழிகூட |
| வையம் | மற்ற உலகத்தாரெல்லாரும் | கூகின்றது இல்லை | (விடிவுக்கு அறிகுறியாக) கூவுகின்றதில்லை; |
| | | கூர் இருள் ஆயிற்றே | இன்னமும் கன்னிருளா யிருக்கின்றதே. |

* * *—1. "அங்கைத்தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியேனென்று, செங்கச்சுக் கொண்டு கண்ணாடையார்த்துச் சிறுமானிடவரைக் காணில் நாணுங், கொங்கைத்தலமிவை" என்றாற்போலே திருவாழி திருச்சங்குகளாகிற அஸாதாரண லக்ஷணங்களோடே கூடின தலைவனையாயிற்று இப்பாகாலநாயகி காதலிப்பது; அப்படியே அவர்வந்து ஸ்வப்நம் போன்ற ஸம்ச்லேஷத்தைச் சிறிதுபோது தந்தருளி உடனே பிரிந்து போயினராதலால் நான் இங்ஙனே கதறவேண்டியதாயிற்று என்கிறாள் முன்னடிகளால்.

பாழிமையான கனவின் = இங்குக்கனவு என்கிறது ஸம்ச்லேஷத்தையென்று கொள்க. எப்போதோநடந்த கலவி இவளுக்கு இப்போது ஸ்வப்ந துல்யமாயிருப்பதால் கனவு என்கிறது. பாழிமைபாவது வலிமை; வலிதான ஸம்ச்லேஷத்தினாலென்றபடி.

"பெரிய மேன்மையுடையவர் கையைக் காலைப்பிடித்துத் தாழநின்று பரிமாறின பரிமாற்ற மாகையாலே அநுஸந்திக்கப்புக்கால் கனாக்கண்டவொன்றாகப் படியாயிருக்கிற அபர்யாப்த ஸம்ச்லேஷஸாநத்தாலே" என்ற வியாக்கியான வாக்கியங்காண்க.

நானும் என்னுடைய தோழியுந்தவிர மற்றவுலகர்களெல்லாரும் அந்யபரர்களாதலால் அவர்களனைவரும் சுகமே உறங்கிக்கிடக்கிறார்கள்; எனக்கோ ஓரிரவு ஏழூழியாய் நெடுகிச்செல்லா நின்றது; கோழி கூவினாலாவது பொழுது விடியப்போகிறதென்று சிறிது ஆறியிருக்கலாம்; கோழியும் உறங்கிப் போயிற்றுப் போலும் என்கிறாள் பின்னடிகளில். ... .... .... (௬)

காமன்றனக்கு முறையல்லேன், கடல் வண்ணனார் *
மாமணவாள ரெனக்குத்தானு மகன்சொல்லில் *
யாமங்கடோறெரிவீசு மென்னிளங் கொங்கைகள் *
மாமணிவண்ணர் திறத்தவாய் வளர்கின்றவே. (௭)

| | | | |
|---|---|---|---|
| காமன் தனக்கு முறை அல்லேன் | மன்மதனால் நான் கலியப் பெறுதற்கு முறையுடையே னல்லேன்; | எனக்கு மா மணவாளர் | எனக்குச் சிறந்த நாயகரா யிருக்கின்றார்; (இவ்வழியாலே) |
| | | தான் | அந்தமன்மதன் தான் |
| சொல்லில் | எனெனனில்; | எனக்கு மகன் | எனக்கு மகனாகப் பெற்றான்; (அப்படியிருந்தும்) |
| கடல் வண்ணனார் | கடல்வண்ணரான கண்ணபிரான் | யாமங்கள் தோறு | எப்போதும் |

1. நாச்சியார் திருமொழி 12—4.

| | | | |
|---|---|---|---|
| எரி வீசும் | நெருப்பைத் தூவுகின்றான்; | மா மணி வண்ணர் திறத்த ஆய் வளர்கின்ற | நீலமணி வண்ணரான அப்பெருமானை நோக்கியே வளர்கின்றனவாயுள்ளன. |
| என் இள கொங்கைகள் | எனது இளமுலைகளோ வென்னில் | | |

* * * — நான் கடல்வண்ணனான எம்பெருமானை எப்போது மணவாளனாகக் கொண்டேனோ அப்போதே $ மன்மதன் எனக்கு மகனாய்விட்டான்; மகனானவன் பெற்றதாயை இங்ஙனே கொலை செய்வது வழக்கோ? கைப்பிடித்த கணவனார் என்ன நலிவுசெய்தாலும் பொறுக்கலாம்; வயிற்றிற் பிறந்த மகன் நலிவு செய்ய என்ன முறைமையுண்டு? என்கிறாள் முன்னடிகளில்.

மன்மதன் செய்கிற ஹிம்ஸை ஏதென்ன, யாமங்கடோறு எரிவீசும் என்கிறாள். ஸர்வகாலத்திலும் தபிக்கிறானென்றபடி. மன்மதன் இப்படி நெருப்பை வீசச்செய்தேயும் எனது இளமுலைகள் தாம் கொண்ட கொள்கையை விடுகின்றில; அப்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்தனவாய் விம்மி வளர்கின்றனவென்கிறாள். .... .... .... (௭)

மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்ற மணாளனார் *
நெஞ்சம் நிறைகொண்டு போயினார் நினைகின்றிலர் *
வெஞ்சுடர் போய்விடியாமலெவ்விடம் புக்கதோ *
நஞ்சுடலந்துயின்றால் நமக்கினி நல்லதே.

| | | | |
|---|---|---|---|
| மஞ்சு உறு | மேகமண்டலத்தைக் கிட்டி நிற்கின்ற (சிகரத்தையுடைய) | வெம் சுடர் | ஸூர்யனானவன் |
| மாலிருஞ் சோலை | திருமாலிருஞ் சோலைமலையிலே | போய் | அஸ்தமித்துப்போய் |
| நின்ற | நித்யவாஸம் பண்ணுகிற | விடியாமல் | மறுபடியும் உதியாமல் |
| மணாளனார் | எம்பெருமான் | எவ்விடம் புக்கதோ | எங்கே புகுந்தொளித்தானோ |
| நெஞ்சம் | (எனது) நெஞ்சிலுள்ள | இனி | இப்படியான பின்பு |
| நிறை | அடக்கத்தை | நமக்கு | நம்முடைய |
| கொண்டு போயினார் | அபஹரித்துக் கொண்டு போனவராய் | உடலம் | சரீரமானது |
| நினைகின்றிலர் | (இத்தலைமை) மறந்தொழிந்தார்; | நஞ்சு | சிதிலமாகி |
| | | துயின்றால் | முடிந்துபோமாகில் |
| | | நல்லது | நன்றாகும். |

* * * — திருமாலிருஞ் சோலைமலையிலே நித்யவாஸம் செய்தருளாநின்ற அழகப்பிரானார் பெண்மைக்கு ஈடாக என்னெஞ்சிலிருந்த அடக்கத்தைக் கொள்ளைகொண்டு போய்விட்டார்; போனவர் 'இருத்தியை இப்படி ஸர்வஸ்வாபஹாரம் பண்ணிவந்தோமே, அவள் எப்பாடுபடுகிறாளோ!' என்று நெஞ்சில் இத்தனை இரக்கமுமற்றிராநின்றார். அவர்தாம் அப்படி இரக்கமற்றொழிந்தால் ஸூர்ய பகவானும் இரக்கமற்றொழியவேணுமோ? அவன் அஸ்தமித்தால் மீண்டும் முப்

$ கீழ்ப் பத்தாம்பத்தின் பத்தாந் திருமொழியில் ஏழாம்பாட்டினுரையில் விரிவுகாண்க.

பது நாழிகையிலே உதிக்கவேணுமென்று ஒரு நியதியில்லையோ? அந்த நியதியையுங் கடந்து அடியோடு முகங்காட்டாதே எங்கோ புக்கொளித்தானே!; இங்ஙனே எம்பெருமானும் இரக்கமற்றவனாகி அவனுடைய பரிஜநமும் இரக்கமற்றொழிந்ததான பின்பு எதுக்கு நாம் இந்தவுடலைச் சுமந்து வருந்தவேணும்? இவ்வுடலம் சிதிலமாகி முடியப்பெறுமாகில் அதுவே நமக்குச்சிறந்த வாழ்ச்சியாகுமே யென்கிறாள்.

விரஹிகளுக்கு இரவு நீட்டித்துத் தோற்றுதல் இயல்பாதலால் "வெஞ்சுடர் போய்விடியாமல் எவ்விடம் புக்கதோ" என்னப்பட்டது.

நஞ்சு=‘நைந்து’ என்பதன் போலி; (‘ஐந்து’ என்பதற்கு ‘அஞ்சு’ என்று போலியாவது போல.) ‘உடலம்’ என்றதில் அம்—சாரியை. துயின்றால்=தீர்க்க நித்திரையாகிய மரணத்தையடைந்தால் என்றபடி; உபசாரவழக்கு. எம்பெருமானை அநுபவிப்பதற்கு உபயோகப்படாத சரீரம் ஒழிவதே நன்று என்கிறாள். "நாகமிசைத் துயில்வான் போலுலகெல்லாம் நன்கொடுங்க, யோகணைவான் கவராத உடம்பினால் குறைவிலமே" என்ற திருவாய்மொழியுங் காண்க. ... (அ)

காமன் கணைக்கோரிலக்கமாய் நலத்தின்மிகு *
பூமருகோலநம் பெண்மை சிந்தித்திராதுபோய் *
தூமலர் நீர்கொடு தோழீ! நாந்தொழுதேத்தினால்? *
கார்முகில் வண்ணரைக் கண்களாற் காணலாங்கொலோ? (கூ)

| | | | |
|---|---|---|---|
| தோழீ | வாராய்தோழீ! | போய் | புறப்பட்டுப்போய் |
| காமன் கணைக்கு | மன்மதபாணங்களுக்கு | கார் முகில் வண்ணரை | காளமேகச்யாமரான பெருமானை |
| ஓர் இலக்கம் ஆய் | இலக்காகி யிருப்பதனாலே | தூ மலர் நீர் கொடு | பரிசுத்தமான புஷ்பங்களையும் தீர்த்தங்களையுங் கொண்டு |
| நலத்தின் மிகு | நன்மைமிக்கதாய் | நாம் தொழுது ஏத்தினால் | நாம் வணங்கித் துதித்தால் |
| பூமரு | விரும்பத்தக்கதாய் | கண்களால் காணல் ஆங்கொலோ | (அவரைக்) கண்ணாலே ஸேவிக்கப் பெறலாமோ? |
| கோலம் | அழகியதான | | |
| நம் பெண்மை | நமது பெண்மைக்குணத்தை | | |
| சிந்தித்து | நினைத்துக்கொண்டு | | |
| இராது | இவ்விடத்திலேயே இருக்கிடாமல் | | |

* * *—எம்பெருமானை யநுபவிப்பதற்குப் பாங்கல்லாத இந்தப்பாழும் சரீரம் முடிந்து போவதே நல்லதென்றாள் கீழ்ப்பாட்டில்; சரீரம் இருப்பதும் போவதும் நம்முடைய இஷ்டத்தைப் பொறுத்ததன்றே. அது எம்பெருமானுடைய ஸங்கல்பத்தின்படியே ஆகக்கடவதாயிற்றே. 1. "கண்ணாளா கடல்கடைந்தாய்!

1. திருவாய்மொழி 4-9-1.

உனகழற்கே வரும்பரிசு, தண்ணுழாய்கடியேனைப் பணிகண்டாய் சாமாறே" என்று பிரார்த்தித்தவிடத்திலும் உடனே அது ஸித்தித்ததில்லையே; இவ்வாழ்வாரை எம்பெருமான் இன்னமும் இவ்வுலகத்திலே வைத்துப்பல உபகாரங்களைச் செய்விக்கத் திருவுள்ளம்பற்றினவனாதலால் ஆழ்வாருடைய எண்ணப்படி உடலம் ஒழியப் பெற்றதில்லை; எவ்வகையினாலாவது எம்பெருமானைக் கண்களால்காண ஆசை அதிகரித்ததனால், தோழீ! நம்முடைய ஸ்வரூபத்தை அழித்துக்கொண்டு அதிப்ராவ்ருத்தி செய்தாகிலும் அவரைக் கண்டுவிடுவதே யாகுங்கொல்' என்கிறாள்.

மன்மதனுடைய அம்புகட்கு இரையாகி இங்ஙனே பரிதபித்திருப்பதிற் காட்டிலும், நம்முடைய பெண்மைக் குணத்தைத் திரஸ்கரித்தொழித்தாகிலும் புறப்பட்டுச்சென்று அவர் திருவுள்ளத்திற்கு உகப்பான உபசாரங்களைச் செய்வோமாகில் அவரைக் கண்களால் காணப்பெறுவோமோ வென்றாளாயிற்று.

இலக்கம்—'லக்ஷ்யம்' என்ற வடசொல்விகாரம்.

[நலத்தின்மிகு இத்தியாதி.] ஸ்வாமியான அவன் தானே வந்து கைக்கொள்ளப் பார்த்திருக்கையாகிற ஸ்த்ரீத்வத்தை மீறியாகிலும் அதிப்ராவ்ருத்தி செய்யக் கோலுவது அத்தலையில் வைலக்ஷண்யாதிசயத்தையும் இத்தலையில் ஆசை மிகுதியையுங் காட்டுமென்க. .... .... .... (௬)

வென்றி விடையுடனேழடர்த்த அடிகளை *
மன்றின் மலிபுகழ் மங்கைமன் கலிகன்றிசொல் *
ஒன்று நின்றவொன்பது முரைப்பவர் தங்கள்மேல் *
என்றும்நில்லா வினையொன்றுஞ் சொல்லிலுலகிலே.

| | |
|---|---|
| வென்றி | வெற்றியைத் தொழிலாகவுடைய |
| விடை ஏழ் | ஏழு ரிஷபங்களை |
| உடன் | உடனே |
| அடர்த்த | திரஸ்கரித்த |
| அடிகளை | எம்பெருமான் விஷயமாக, |
| மன்றில் மலி புகழ் | நாற்சந்திகளிலே நிறைந்த புகழையுடையரும் |
| மங்கை மன் | திருமங்கை நாட்டுக்குத் தலைவருமான |
| கலிகன்றி | ஆழ்வார் |
| சொல் | அருளிச்செய்த |

| | |
|---|---|
| ஒன்று நின்ற ஒன்பதும் | ஒன்றோடேகூடி நின்ற ஒன்பது பாட்டாகிய இத்திருமொழியை |
| உரைப்பவர் தங்கள்மேல் | அநுஸந்திப்பவர்களிடத்திலே |
| வினை ஒன்றும் | ஒருவகையான கருமமும் |
| என்றும் | ஒருநாளும் |
| நில்லா | நிற்கமாட்டாது; |
| சொல்லில் | (இன்னும் பலவை விவரித்துச்) சொல்லப்புக்கால் |
| உலகிலே | அவர்களிருந்த தேசத்திலுங்கூட |

வினை ஒன்றும் நில்லா.—

* * *—நப்பின்னைப் பிராட்டியை மணம்புணர்ந்து கொள்வதற்கு இடையூறாயிருந்த விருஷபங்களேழையும் நிரஸித்த பெருமிடுக்கனான பெருமான் விஷயமாகக் கலியன் திருவாய் மலர்ந்தருளிய இத்திருமொழியை அநுஸந்திப்பவர்களிடத்தில் ஒருவகையான பாவமும் நிற்கமாட்டாது என்கிறவளவேயல்லாமல் அவர்கள் வாழ்கிற தேசத்திலும் பாவமொன்றும் சேரமாட்டாது என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே। ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா: = யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே, ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்பிக்ஷதஸ்கரா:-" [திருவஷ்டாக்ஷரமந்திரம் கைபுகுந்த மஹான் வாழுகிற தேசத்திலே பிணி, பஞ்சம், கள்ளர்கொடுமை முதலிய தீங்கு ஒன்றும் அணுகமாட்டாது] என்றாப்போலே, இத்திருமொழி வல்லவர்கள் வாழுமுலகத்திலும் வினையொன்றும் நிற்கமாட்டாவென்றது பொருந்தக்குறைவில்லையென்க. .... (க0)

அடிவரவு:—குன்றம் பூ மல்லொடு பொருந்து அன்னை ஆழி காமன்தனக்கு மஞ்சுறு காமன்கணைக்கு வென்றி மன்னிலங்கு.

## இரண்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—மூன்றாந்திருமொழி,

# மன்னிலங்கு பாரதத்து.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியில் "நம்பெண்மை சிந்தித்திராது போய்த் தூமலர்நீர்கொடு தோழி! நாந்தொழுதேத்தினால், கார்முகில் வண்ணரைக் கண்களால் காணலாங்கொலோ" என்று ஸ்வரூப விருத்தமாக அதிப்ரவ்ருத்தி பண்ணியாகிலும் எம்பெருமானைக் காணப்பெறுவோமென்று ஆழ்வார் கோலினவளவிலே, இதனைப் பொறுக்கமாட்டாத எம்பெருமான் வந்து முகங்காட்டி 'ஆழ்வீர்! சற்றுப்போது தாமதித்த மாத்திரத்தினால் நீர் இத்தனை ஸாஹஸத்திலே இழியலாமோ? ஒரு சேதநனைப் பெறுகைக்கு நான் எவ்வளவு பாடுபடுகிறவனென்பதை நீர் அறியமாட்டீரோ? உம்மைப்பிரிந்ததனால் நானன்றோ க்லேசப்படுகிறவன்? என்னைவிட்டு நொடிப்பொழுதும் தரிக்கமாட்டாதவர்கள்

யாவரோ, அவர்களைவிட்டு நானும் தரிப்பவனல்லேனே; என்னுடைய படிகளை நீர் அறிந்து வைத்தும் இங்ஙனே க்லேசப்படுதல் தகுமோ?' என்றாற்போலே சில வார்த்தைகளைச் சொல்லித் தன் செல்லாமையடங்கலுங் காட்ட, ஆழ்வார் அதனையெல்லாம் அநுஸந்தித்து, தாஹித்தவன் சிறிது தண்ணீர் குடித்தால் அது தாஹசாந்திக்கு உடலாகாதே மேன்மேலும் விடாயை வளரச்செய்யுமாபோலே அவ்வநுஸந்தாநமானது மேலும் விடாயைப் பிறப்பிக்க, அதனால் மிகவும் நோவுபட்டு, பின்னையும் அவனைக்கிட்டி நித்யாநுபவம் பண்ணப் பெற்றிலோமேயாகிலும் இவ்விடாயும் பதற்றமுமெல்லாம் இவ்விஷயத்திலே ஆகப்பெற்றோமே! என்று உண்டான திருப்தியோடே பேசித் தலைக்கட்டுவதாம் இத்திருமொழி. இதுவும் நாயகிபாசுரத்தாலே செல்லுகிறதாயிற்று.

இத்திருமொழி அந்தாதித்தொடையினலமைந்தது. ....

மன்னிலங்கு பாரதத்துத் தேரூர்ந்து * மாவலியைப்
பொன்னிலங்கு திண்விலங்கில் வைத்துப் பொருகடல்சூழ் *
தென்னிலங்கை யீடழித்த தேவற்கிதுகாணீர் *
என்னிலங்கு சங்கோடேழில் தோற்றிருந்தேனே. (க)

| | | | |
|---|---|---|---|
| மன் இலங்கு | (பல) அரசர்கள் விளங்காநின்ற | தென் இலங்கை | தென்னிலங்கையிலுடைய |
| பாரதத்து | பாரதயுத்தத்திலே | ஈடு | மதிப்பை |
| தேர் ஊர்ந்து | (ஸாரதியாய் நின்று) தேரை நடத்தினவனும் | அழித்த | அழித்தவனுமிருக்கிற |
| மாவலியை | மஹாபலியை | தேவற்கு | எம்பெருமானுக்கு |
| பொன் இலங்கு திண் விலங்கில் வைத்து | பொன்மயமாக விளங்குகின்ற திடமான விலங்கிலே பிணைத்தவனும் | என் இலங்கு சங்கோடு | எனது ஒளிமிக்க வளைகளையும் |
| | | எழில் | அழகையும் |
| | | தோற்றிருந்தேன் | இழக்கிறாநின்றேன்; |
| பொரு கடல் சூழ் | அலையெறிகின்ற கடலாலே சூழப்பட்ட | இது காணீர் | இவ்விருப்பைக் காணுங்கோள். |

* * *—பலபல அரசர்கள் திரண்டுகிடந்த பாரதப் போரிலே பாண்டவர்கட்கு வெற்றியுண்டாகுமாறு பார்த்தஸாரதியாயிருந்து தேரை நடத்தினவனும், கண்ணுங் கண்ணீருமாக வந்து அடிபணிந்து இரந்த இந்திரனுக்குத் திருவுள்ளமிரங்கி மாவலியைப் பாதாளத்திலே செலுத்தினவனும், கடல் சூழ்ந்த இலங்காபுரியை யீடழித்தவனுமான எம்பெருமானை ஆசைப்பட்டு நான் பெற்ற பேறு வளையிழந்ததும் நிறமழிந்ததுமே காணீர்? என்று படியெடுத்துக் காட்டுகிறாள் பரகாலநாயகி.

"மன்னிலங்குபாரதத்துத் தேரூர்ந்து" என்றவிடத்திற்கு "மலைபுரை தோள் மன்னவரும் மாரதரும் மற்றும், பலர் குலைய நூற்றுவரும் பட்டழியப்

பார்த்தன், சிலைவளையத் திண்டேர்மேல் முன்னின்ற” என்ற பெரியாழ்வார் திருமொழிச் செய்யுள் அநுஸந்திக்கத்தக்கது.

ஔதார்யமே பற்றாசாக மாவலியை உயிர்முடிக்காதே பாதாளத்தில் சிறைவைத்ததைப் “பொன்னிலங்கு திண்விலங்கில் வைத்து” என்றார். “[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வரீயோ—கஸ்மை ஸ்வதேத ஸுகஸஞ்சரணோத்ஸுகாய காராக்ருஹே கநகச்ருங்கலயாபி பந்த:” (வரதராஜபஞ்சாசத்.) என்ற வேதாந்த தேசிகனுடைய ஸ்ரீஸூக்தி இங்கு ஸ்மரிக்கத் தக்கது. .... ... .... (க)

இருந்தானென் னுள்ளத் திறைவன் * கறைசேர்
பருந்தாட் களிற்றுக்கருள்செய்த செங்கண் *
பெருந்தோள் நெடுமாலைப் பேர்பாடி யாட *
வருந்தாதென் கொங்கை ஒளிமன்னு மன்னே ! (உ)

| | | | |
|---|---|---|---|
| என் உள்ளத்து | எனது நெஞ்சினுள்ளே | பெருந் தோள் | பெருமைதங்கிய திருத் தோள்களையுடையனுமான |
| இருந்தான் | வாழ்ந்திருப்பவனும் | நெடு மாலை | ஸர்வேச்வரனுடைய |
| இறைவன் | ஸர்வஸ்வாமியும் | பேர் | திருநாமங்களை |
| கறை சேர் பருந் தாள் | உரல்போன்ற பருத்த அடியையுடைத்தான | பாடி ஆட | வாயாரப்பாடிக் கூத்தாட |
| களிற்றுக்கு அருள்செய்த | கஜேந்திராழ்வானுக்கு அருள்செய்தவனும் | என் கொங்கை | எனது முலைகளானவை |
| | | வருந்தாது | வருத்தமற்று |
| செம் கண் | செந்தாமரைக் கண்ணனும் | ஒளி மன்னும் | ஒளிபெறும். |

* * *—கீழ்ப்பாட்டில் தோன்றின வருத்தம் சிறிது தலைமடிந்து மகிழ்ச்சி தோற்றப் பேசுகிறபாசுரம் இது. எம்பெருமான் இனிவிட்டுப்போகிறவனல்லனாக என் ஹ்ருதயத்திலே புகுந்திருக்கின்றான்; ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கு அரைகுலையத் தலைகுலைய மடுவின் கரையிலே ஓடிவந்து அருள்செய்த வாத்ஸல்யமெல்லாம் திருக்கண்களிலே தோற்றும்படி யிராநின்றான். இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருநாமங்களை ப்ரீதிக்குப் போக்குவீடாகப்பாடி உடல் இருந்தவிடத்திலிருக்க மாட்டாதே ஆடுமளவில் என்கொங்கைகள் வருத்தந்தீர்ந்து புகர் பெறுகின்றபடி பாராய் என்கிறாள்.

[கறைசேர்.] கறை என்னுஞ்சொல் பல பொருள்களையுடையது; உரல் என்கிற பொருள் இங்குக் கொள்ளப் பட்டது. இனி, உதிரம் என்ற பொருளும் கொள்ளத்தக்கதே; முதலையின்வாய் கௌவப்பெற்று விரணத்தினால் ரக்தமொழுகப் பெற்ற கால் என்றபடி.

பாசுரத்தின் முடிவிலுள்ள அன்னே என்பதைப் பாதபூரணமாகவுங் கொள்ளலாம், தோழீ! என்றபடியாகவுங்கொள்ளலாம். .... .... (உ)

அன்னே! யிவரை யறிவன் * மறைநான்கும்
முன்னேயுரைத்த முனிவரிவர் வந்து *
பொன்னேய் வளைகவர்ந்து போகார் மனம்புகுந்து *
என்னே? யிவரெண்ணு மெண்ண மறியோமே. (௩)

| | |
|---|---|
| அன்னே | அஹஹா!, |
| இவரை அறிவன் | இந்த மஹாநுபாவரை (நான் நன்கு) அறிவேன்; |
| இவர் | இப்பெரியவர் |
| முன்னே | முற்காலத்திலே |
| மறை நான்கும் | நால்வேதங்களையும் |
| உரைத்த | (நான்முகனுக்கு) உபதேசித்த |
| முனிவர் | முனிவரானவர்; |
| | (இப்படிப்பட்ட இவர்) |
| வந்து | (ஒருகால் என்பக்கலில்) வந்து |
| பொன் ஏய் வளை கவர்ந்து | பொன்மயமான கைவளை களை விரும்பி |
| மனம் புகுந்து | எனது நெஞ்சினுள்புகுந்து |
| போகார் | விட்டுப்போகாம லிராநின்றார்; |
| இவர் எண்ணும் எண்ணம் | இவர் நினைத்திருக்கும் நினைவு |
| என்னே | எதுவாயிருக்கதோ? |
| அறியோம் | அறிகின்றிலோம். |

* * *—"இன்னாரென்றறியேன். அன்னே ஆழியொடும் பொன்னார் சார்ங்க முடையவடிகளை இன்னாரென்றறியேன்" என்றவாயாலே "அன்னே யிவரை யறிவன்" என்கிறாள். இங்கே வியாக்யான வாக்யங்காண்மின்;—"நெருங்கக் கலந்தபோதாக 'இன்னாரென்றறியேன்' என்னிலும் மென்னும்; காதாசித்கமாக ஸம்ச்லேஷித்தபோது ஸ்வாபாவிக சேஷித்வத்தாலுமுகத்தில் தண்ணளி யாலும் அறிவேனென்னிலுமென்னும்." என்று.

மறைநான்கும் முன்னேயுரைத்த முனிவரிவர்=ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னப்படுகிற நான்கு வேதங்களையும் முன்பு பிரமதேவனுக்கு உபதேசித்தவர் என்றபடி. வேதம் அபௌருஷேய மெனப்படும்; அதாவது, ஒரு புருஷனாலும் செய்யப்படாததென்கை. அப்படியிருக்க, இங்கு 'மறை நான்கும் முன்னேயுரைத்த முனிவர்' என்று சொல்லப் படுகிறதே; ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் எம்பெருமான் நான்முகனுக்கு வேதோபதேசம் செய்தருளின னென்றால் ஸ்ருஷ்டிக்கு முன்பு வேதம் இருக்க முடியாதே; ஆகையால் ஸர்வேச்வரனை வேதகர்த்தா என்று இசையலாமன்றோ என்னில்; அப்படியன்று; வேதத்துக்கு நாம் எப்படி கர்த்தாக்களல்லோமோ அப்படியே ஸர்வேச்வரனும் கர்த்தாவல்லன்; உலகத்தின் ஸ்ருஷ்டியானது ஒன்றன் பின் ஒன்றாக அநாதி காலமாக நடந்து வருகிறது; ஒவ்வொரு கல்பத்தின் தொடக்கத்திலும் ஈச்வரன் நான்முகனுக்கு வேதங்களை உபதேசிக்கிறான்; ஆனால் முன்கல்பத்தில் வேதம் எந்த மாதிரியான ஆநுபூர்வியோடு இருந்ததோ அந்த ஆநுபூர்வியாகவே

மறுகல்பத்தின் ஆரம்பத்திலும் வேதத்தை உபதேசிக்கிறான்; எவ்விதமான மாறுதலும் செய்வதில்லை. அநாதிகாலமாக இப்படியே செய்து வருகிறான். இவ்வளவே எம்பெருமான் செய்வது. புதிதாக வேதத்தை இயற்றுவதில்லை. எவ்விதமான மாறுபாடும் செய்வதுமில்லை. ஆகையால் ஈச்வரனும் வேதகர்த்தா வல்லன் என்க. ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் "ஸம்ஹாரம் ஶ்ருதிஸங்ரேக்ஷ நிதயஸ" என்றச்லோகத்தில் இவ்விஷயம் விளங்கக் காணத்தக்கது.

இப்படிப்பட்ட எம்பெருமான் எனது பொன்வளையிலே ஆசை கொண்டவராய் என்னெஞ்சிற்புகுந்து போகாதே யிருக்கிறார்; இவர் என்னை என்னென்ன செய்யக் கருதியிருக்கிறாரோ அறியேன் என்கிறாள் பின்னடிகளில்.

என்வளையில் ஆசைவைத்திருக்கிறார் என்றது—எனக்கு உடனே பிரிவை உண்டாக்கி உடலை இளைப்பித்து வளைகள் கழன்றொழியுமாறு செய்யவே கருதியிருக்கின்றார் என்றபடி. இப்போது இவர் மனம்புகுந்து போகாமலிருக்கிறது உடனே பிரிவுக்கு இட்ட அடியாம் என்கை. .... .... (௩)

அறியோமே யென்றுரைக்கலாமே ? யெமக்கு *,
வெறியார் பொழில் சூழ் வியன் குடந்தைமேவி *
சிறியானோர் பிள்ளையாய் மெள்ள நடந்திட்டு *
உறியார் நறுவெண்ணெயுண்டுகந்தார் தம்மையே. (௪)

| | | | |
|---|---|---|---|
| வெறி ஆர் | பரிமளம் மிக்க | உறி ஆர் நறு வெண்ணெய் | உறிகளிலே சேமித்திருந்த மணம்மிக்க வெண்ணெயை |
| பொழில் சூழ் | சோலைகளாலே சூழப்பட்டு | உண்டு உகந்தார் தம்மை | வாரியமுது செய்து திருவுள்ள முகந்தவரும்மான இப்பெரியவரை |
| வியன் | வியக்கத்தக்கதான | அறியோம் என்று உரைக்கல் | 'அறிகின்றிலோம்' என்று சொல்லுதல் |
| குடந்தை | திருக்குடந்தையிலே | எமக்கு ஆமே | எமக்குத் தகுமோ ?. |
| மேவி | பொருந்தியிருப்பவரும், | | |
| சிறியான் ஓர் பிள்ளை ஆய் | (க்ருஷ்ணாவதாரத்தில்) ஒப்பற்ற சிறு குழந்தையாய் | | |
| மெள்ள நடந்திட்டு | மெதுவாக நடந்து சென்று | | |

* * *—கீழ்ப்பாட்டில் "அன்னே யிவரையறிவன்" என்ற பரகால நாயகியை நோக்கித் தோழியானவள் 'நங்காய்! இவரை நீ எங்ஙனே அறிந்தாய்? 'இன்னாரென்றறியேன்' என்று முன்பு சொன்னாய்; இப்போது அறிவேனென்கிறாய்; பொருந்தாத வார்த்தையாயிருக்கின்றதே!' என்ன; இவரை நான் அறிவேனென்பதே உண்மையென்கிறாள்; இவரையறியோம் என்று நான் எங்ஙனே சொல்லக்கூடும்? "இங்கே போதுங்கொலோ இனவேல் நெடுங்கண் களிப்பக், கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால் இங்கேபோதுங்கொலோ" என்று நான் மநோரதித்த படியே * வெறியார் பொழில்சூழ் வியன்குடந்தை மேவியான பெருமானன்றோ எழுந்தருளியிருக்கிறார்; 'இவன் இதைத் திருடினான்

என்று சொல்லவொண்ணாதபடியான இளம்பிராயத்தையுடையனாய்ப் பொய்யடியிட்டுப் போய்ப்புக்கு உறிகளிலே சேமித்து வைத்த வெண்ணெயை அமுது செய்து 'ஆச்ரிதருடைய ஹஸ்த ஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தை உட்கொள்ளப் பெற்றோம்' என்று உகந்தாப்போலே என்னைத் தழுவியணைத்துத் தலைதடுமாறாகப் பரிமாறி ஆநந்தத்தின்மேலெல்லையிலேயிருக்கின்ற இவரை 'அறியோம்' என்று எங்ஙனே சொல்லக்கூடுமென்கிறாள். .... .... .... (ச)

தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்கு, *
தம்மையேயொக்க வருள் செய்வராதலால் *
தம்மையே நாளும் வணங்கித் தொழுதிறைஞ்சி *
தம்மையே பற்றா மனத்தென்றும் வைத்தோமே. (ரு)

| | |
|---|---|
| நாளும் | எப்போதும் |
| தம்மையே வணங்கி தொழுவார்க்கு | தம்மையே விநயமுடன் வணங்குமவர்கட்கு |
| தம்மையே யொக்க அருள் செய்வர் | தம்முடைய ஸாம்யத்தை அருள் செய்பவர்; (எம்பெருமான்.) |
| ஆதலால் | ஆகையினால் |
| தம்மையே | அவர்தம்மையே |

| | |
|---|---|
| நாளும் வணங்கி தொழுது இறைஞ்சி | எப்போதும் த்ரிகரணங்களாலும் நமஸ்கரித்து |
| தம்மையே | அவர்தம்மையே |
| என்றும் | எப்போதும் |
| பற்று ஆ | புகலாக |
| மனத்து வைத்தோம் | உறுதி கொண்டோம் |

* * *—தேவதாந்தர பஜநத்தை நெஞ்சிலும் நினையாதவர்களாய் ப்ரயோஜநாந்தரத்தையும் சிந்தையிற் கொள்ளாதவர்களாய் ஆச்ரயிக்கின்ற பக்தர்களுக்கு "ததா³ வித்³வாந் புண்யபாபே விதூ⁴ய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று உபநிஷத்தில் ஓதியிருக்கிறபடியே தம்மோடு பரமஸாம்யாபத்தியைத் தந்தருள்பவரான எம்பெருமானையே நாம் இடைவிடாது வணங்கி, அவரையே சரணமாக உறுதி கொண்டோமென்கிறாள்.

தம்மையே பற்றா=பற்றாக என்றபடி. பற்றப்படுவது பற்று; அதாவது பலனைச் சொன்னபடியாய் அவரையே பரமப்ரயோஜநமாகக் கொண்டோமென்னவுமாம். உபாயம் உபேயம் என்ற இரண்டும் அவரேயாகக் கொண்டோமென்றதாயிற்று. .... .... .... (ரு)

வைத்தாரடியார் மனத்தினில் வைத்து * இன்பம்
உய்த்தாரொளி விசும்பிலோரடி வைத்து * ஓரடிக்கும்
எய்த்தாது மண்ணென்றிமையோர் தொழுதேத்தி *
கைத்தாமரை குவிக்குங் கண்ணனென் கண்ணனையே. (சு)

| | |
|---|---|
| ஒளி விசும்பில் | (சந்திரன் ஸூரியன் முதலிய) சுடர்ப்பொருள்கள் மிக்க ஆகாசத்திலே |
| ஓர் அடி வைத்து | ஒரு திருவடியை ஓங்கவைக்க, |
| ஓர் அடிக்கும் | மற்றொரு திருவடிக்கு |
| மண் எய்த்தாது என்று | பூமி போதாதே! என்று |
| இமையோர் | (பிரமன் முதலிய) தேவர்கள் |
| தொழுது ஏத்தி | வணங்கித் துதித்து |
| கை | தங்களுடைய கைகளை |
| தாமரை குவிக்கும் | தாமரைமொக்குபோலே அஞ்ஜலிசெய்யப்பெற்ற |
| என் கண்ணன் கண்ணனை | எனக்குக் கண்போன்ற ஸ்ரீக்ருஷ்ணனை |
| அடியார் | அடியவர்கள் |
| மனத்தினில் | தங்கள் நெஞ்சிலே |
| வைத்தார் | காட்டினார்கள்; |
| வைத்து | அப்படி காட்டியதனால் |
| இன்பம் உய்த்தார் | ஆநந்தத்தை அடையப் பெற்றார்கள். |

* * *—எம்பெருமானை நான் எப்படி மனத்திற் கொண்டேனோ இப்படியே அவனை மனத்திற் கொள்வார்க் கெல்லாம் பரமாநந்தம் ஸித்தம் என்கிறாள். மாவலிகையில் நீரேற்று ஒரு திருவடியை மேலுலகத்திலே பரப்ப வைத்து மற்றொரு திருவடியை நிலத்திலே பரப்பவைக்குமளவில் அத் திருவடிக்கு நிலம் இடம் போரவில்லையே யென்று இந்த த்ரிவிக்ரமாபதாநத்தையெடுத்துப் பேசித் துதித்து அஞ்ஜலி செய்து தேவர்களால் வணங்கப்படுகின்ற எம்பெருமானை எந்த அடியார்கள் மனத்தில் வைக்கின்றார்களோ, அவர்கள் வைத்தவாறே பரமாநந்தத் தைப் பெற்றவரேயாவர் என்றதாயிற்று.

“ஓரடிக்கு மெய்த்தாது மண்” என்றது ஈடுபாட்டினாற் சொல்லுகிறவார்த்தை. “பிரானுன்பெருமை பிறராரறிவார், உராயுலகளந்த நான்று-வராகத் தெயிற்றளவு போதாவாறென்கொலோ? எந்தைபடிக்களவு போந்தபடி.” (முதல் திருவந்தாதி 84) என்று வேறொரு சமத்காரமாகப் பேசினாருமுளர்.

கைத்தாமரை குவிக்கும்—“வஹா_நாவஜகொமா_மிவ ஸுர_மிவவெஹர ஜுஷீரு கஜூலிசா_நாரு” என்ற ஸுதர்சநசதக ஸ்ரீஸூக்தி உணரத்தக்கது. ... (௬)

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் * கைவளைகள்
என்னோ கழன்ற இவையென்ன மாயங்கள்? *
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க * அவன்மேய
அண்ணல்மலையு மரங்கமும் பாடோமே. (எ)

| | |
|---|---|
| கண்ணன் | கண்ணபிரான் |
| மனத்துள்ளே | (என்) நெஞ்சினுள்ளே |
| நிற்கவும் | எழுந்தருளியிருக்கச் செய்தேயும் |
| கைவளைகள் | (எனது) கையில்வளைகளானவை |
| என்னோ கழன்ற | ஏனோ கழன்று போயினவே!; |
| இவை என்ன மாயங்கள் | இவை என்ன ஆச்சரியம்!; |
| பெண் ஆனோம் | பெண்குடியிலே பிறந்துள்ள நாம் |

| | | | |
|---|---|---|---|
| பெண்மை யோம் | வெகு அழகாகப் பெண்மையை உடையவர்களா யிருக்கின்றோம்; | அண்ணல் | சிறந்ததான |
| நிற்க | இது நிற்க: | மலையும் | திருவேங்கட மலையையும் |
| அவன் மேய | அந்த எம்பெருமான் விரும்பி வர்த்திக்கு மிடமாய் | அரங்கமும் | திருவரங்கத்தையும் |
| | | பாடோமே | பாடுகைக்குத் தடை யுடையராயிருக்கிறோமோ? |

* * *—திருவாய்மொழியில் (4—7—6) "நோக்கி நோக்கியுன்னைக் காண்பான் யானெனதாவியுள்ளே, நாக்குநீள்வன் ஞானமில்லை நாடோறுமென்னுடைய ஆக்கையுள்ளுமாவியுள்ளு மல்ல புறத்தினுள்ளும், நீக்கமின்றியெங்கும் நின்றாய் நின்னையறிந்தறிந்தே" என்ற பாசுரத்தின் கருத்தை ஈண்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். எம்பெருமான் தம்முடைய ஸகல அவயவங்களிலும் புகுந்து நிற்கச் செய்தேயும் அதில் த்ருப்தி பெறாதே கண்ணாற் காணப்பெறவேணுமென்று ஆசைப்பட்டு வருந்தின நம்மாழ்வாரைப்போலே இப்பராகால நாயகியும் தனது நெஞ்சினுள்ளே எம்பெருமான் உறையப்பெற்று வைத்தும் த்ருப்தியடையாதே வளையிழக்கிறாள் காண்மின்.

எம்பெருமான் தூரஸ்தனாயிருந்தால் விரஹம் பொறாதே மேனி மெலிந்து வருந்துதல் தகுதியே; அவன் என் மனத்தினுள்ளே யிருந்து ஸந்நிஹிதனாய் நிற்கச்செய்தேயும் இங்ஙனே என் மேனி மெலிவதற்கு என்னகாரணமோ? இது ஆச்சரியமான ஸம்பவமாயிருக்கின்றதே! என்கிறாள் முன்னடிகளில். பணப்பையிலே ஏராளமான பணம் கிடக்கச் செய்தேயும் புறங்கால் வீங்குவாரைப்போலேயாயிற்று இந்த நாயகியின்படியும். * சங்கும் சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களுமாய்க் கண்னெதிரே வந்தருளி ஸேவை ஸாதியாமல் உள்ளேயுறைந்து மறைந்துகிடக்குமதனால் என்னபயன்? என நினைத்திருக்கிறாளாயிற்று.

பெண்ணானோம் பெண்மையோம்=பெண்ணாய்ப் பிறந்த நாம் பெண்மையை நன்றாகக் காப்பாற்றிக் கொண்டோமானோம்; கண்ணன் மனத்துள்ளே நிற்கவும் கைவளை கழலப் பெறுகின்ற நமக்கும் பெண்மைக்கும் வெகுதூரமுண்டு என்றபடி. [நிற்க] இந்த விஷயமெல்லாம் ஒருபுறமிருக்கட்டும்; 1. "குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி, அளியத்த மேகங்காள்! ஆவி காத்திருப்பேனே" என்றாற்போலே உள்ளவரையில் ஆவியைக் காத்திருப்பதற்காக, அவன் விரும்பியுறையும் திவ்ய தேசங்களைப் பாடுகையில் ஒரு தடையுடையோமாயிருந்தோமோ? கைவளைகள் கழன்றொழிந்தா லொழியட்டும்; பெண்மைக்குக் கேடு வந்தால் வரட்டும்; அவன் விரும்பியுறையும் திருமலையையும் திருவரங்கத்தையும் பாடுதும் என்றாளாயிற்று.

மூன்றாமடிக்கு வேறு வகையாகவும் பொருள்கூறுவர்; பெண் ஆனோம்—பெண்ணாய்ப்பிறந்த நாம், பெண்மையோம் நிற்க—பெண்மைக் குணத்தை வழுவாதபடி யுடையராய்க்கொண்டு ஸத்தைபெற்று நிற்கும்படியாக—என்று. .... (எ)

1. நாச்சியார் திருமொழி 8—3.

பாடோமே யெந்தை பெருமானைப்பாடிநின்
ருடோமே * ஆயிரம் பேரானைப் பேர்நினைந்து
சூடோமே * சூடுந்துழாயலங்கல் சூடிநாங்
கூடோமே * கூடக்குறிப்பாகில் நன்னெஞ்சே! (ரு)

| | |
|---|---|
| நல் நெஞ்சே | நல்லமனமே! |
| எந்தை பெருமானை | எம்பெருமானை |
| பாடோமே | பாடமாட்டோமோ? |
| ஆயிரம் பேரானை | ஆயிரந்திருநாமங்களையுடையனான அப் பெருமானை |
| பாடிநின்று | பாடி |
| ஆடோமே | (மகிழ்ச்சிக்குப் போக்குவீடாக) ஆடமாட்டோமோ? |
| பேர் | (அவனது) திருநாமங்களை |
| நினைந்து | சிந்தித்து |
| சூடும் துழாய் அலங்கல் | அவன் சாத்திக்கொள்ளுகிற திருத்துழாய் மாலையை |
| சூடோமே | அணிந்துகொள்ள மாட்டோமோ? |
| சூடி | அப்படி அணிந்துகொண்டு |
| கூட | அவனோடு கூடுகைக்கு |
| குறிப்பு ஆகில் | உன் இசைவு உண்டாகில் |
| நாம் கூடோமே | நாம் கூடப்பெற மாட்டோமோ? |

* * *—"மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:—
மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:" என்று நன்மை தீமைகளுக்கு நெஞ்சமேயிறே காரணமாக சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுள்ளது. "யானுமென் னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்கிறபடியே நெஞ்சு அநுகூலிக்கப் பெற்றதாகில் அருமையானதொன்றுமில்லை யன்றோ. இவ்விஷயமே இப்பாட்டில் வெளியிடப்படுகிறது.

இப்பாசுரம் நான்கு வாக்யார்த்தமா யிருக்கின்றது. 'நன்னெஞ்சே கூடக் குறிப்பாகில்' என்பதை ஒவ்வொரு வாக்கியத்திலும் இசைத்துக் கொள்ளலாம். நெஞ்சமே! நீ இசைந்து வரப்பெறில் எம்பெருமானையே பாடிப் போதுபோக்குதல் அரிதோ? பாடினபாட்டு இருந்தவிடத்திலிருக்கவொட்டாதே "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை." என்னும் திருவாய்மொழியிற்படியே ஸம்ப்ரமத்துடன் நர்த்தனம்பண்ணிப் போதுபோக்குதல் அரிதோ? * நாமமாயிரமேத்த நின்ற நாராயணனைச் சிந்தித்துக்கொண்டு அவன் சூடிக்களைந்த திருத்துழாய்மாலையை நாம் சூடப்பெறுதல் அரிதோ? முடிவாக எம்பெருமானோடே கூடப்பெறுதல் தான் அரிதோ? நெஞ்சமே! நீ அநுகூலிக்கப் பெற்று வருவாயாகில் எதுவும் அரிதன்று காண் என்றதாயிற்று.

குறிப்பாகில் என்பதற்கு 'எம்பெருமானுக்குத் திருவுள்ளமாகில்' என்றும் பொருள் கூறுவர். எம்பெருமானுக்குத் திருவுள்ளமாகில் அரியதும் எளிதாகும்; அஃது இல்லையாகில் எளிதும் அரியதாகும் என்க. .... .... .... (அ)

நன்னெஞ்சே ! நம்பெருமான்நாளு மினிதமரும் *
அன்னஞ்சேர் கானலணியாலி கைதொழுது *
முன்னஞ்சேர் வல்வினைகள் போக முகில்வண்ணன் *
பொன்னஞ்சேர் சேவடிமேற் போதணியப்பெற்றோமே. (௯)

| | | | |
|---|---|---|---|
| நல் நெஞ்சே | நல்லமனமே! | ஆலி | திருவாலியை |
| நம்பெருமான் | நமக்கு ஸ்வாமியானவன் | கை தொழுது | ஸேவித்து, |
| நாளும் | எப்போதும் | முன்னம் சேர் வல் வினைகள் போக | நெடுநாளாகச் சேர்ந்திருக்கிற கொடுவினைகளெல்லாம் நீங்குகைக்கு |
| இனிது அமரும் | திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமாய் | முகில் வண்ணன் | காளமேகநிறத்தனான எம்பெருமானுடைய |
| அன்னம் சேர் கானல் | அன்னப்பறவைகள் சேர்ந்து வாழ்கிற நெய்தல் நிலங்களையுடைத்தாய் | பொன்னம் சேர் சே அடி மேல் போது | விரும்பத்தக்க திருவடிகளின்மேலுள்ள புஷ்பங்களை |
| அணி | இவ்விபூதிக்கு அலங்காரமாயிருக்கின்ற | அணியப் பெற்றோம் | அணிந்துகொள்ளுமாறு பாக்கியம் பெற்றோம். |

* * *—ஆகாசம் பாராதே ஆறு கடவாதே மலையுமேறாதே நாமிருந்த திருவாலி நாட்டிலே எம்பெருமான் ஸந்நிதிபண்ணி யிருக்கும்படியான பாக்கியம் பெற்றோமே; கைப்பட்ட பொருளைக் கணிசியாமல் கைக்கு எட்டாப் பொருளை ஆசைப்பட்டு உடம்பு வெளுக்க வேண்டாதே இருந்தவிடத்தில் தானே எம்பெருமான்றன் திருவடி மலர்களைச் சூடிப் புனிதராகப் பெற்றோமே! என்று உகப்போடே தலைக்கட்டுகிறது. இது தானும் நெஞ்சு இசையப்பெற்றதனாலுண்டான பேறன்றோவென்று மூன்றாம் நெஞ்சைக் கொண்டாடுகிறார். கீழ்ப்பாட்டில் நன்னெஞ்சே! என்றது—அநுகூலிக்கைக்காகக் கொண்டாடின கொண்டாட்டம்; இப்பாட்டில் நன்னெஞ்சே! என்கிறவிது அநுகூலித்ததற்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். .... .... .... .... .... (௯)

பெற்றாரா ராயிரம் பேரானை * பேர்பாடப்
பெற்றான் கலியனொலிசெய் தமிழ்மாலை *
கற்றோரோ முற்றுலகாள்வர் இவைகேட்க
லுற்றார்க்கு * உறுதுயரில்லை யுலகத்தே. (௧௦)

| | | | |
|---|---|---|---|
| ஆயிரம் பேரானை | ஆயிரந்திருநாமங்களையுடையனான எம்பெருமானுடைய | தமிழ் மாலை | தமிழ்ச் சொல்மாலையாகிய இத்திருமொழியை |
| பேர் | திருநாமங்களை | கற்றார் | கற்பவர்கள் |
| பாடப் பெற்றான் | பாடப்பெற்றவரான | பெற்று ஆரார் | அந்த எம்பெருமானை லபித்தும் த்ருப்தியடைய மாட்டார்கள்; |
| கலியன் | ஆழ்வார் | முற்று உலகு ஆள்வர் | உலகங்கள் முழுவதையும் ஆளப்பெறுவர்கள்; |
| ஒலி செய் | அருளிச்செய்த | | |

| | | | |
|---|---|---|---|
| இவை | இப்பாசுரங்களை | உலகத்தே | உலகமெங்கும் |
| கேட்கல் உற்றார்க்கு | செவிதாழ்த்துக்கேட்குமவர்களுக்கு | உறு துயர் இல்லை | அநுபவிக்கக்கூடிய துக்கமொன்றுமில்லையாகும். |

* * *—* பேருமாயிரம் பேசநின்ற பெருமானுடைய திருநாமங்களையே பாடிப் போதுபோக்கும்படியான பாக்கியமுடையரான ஆழ்வார் அருளிச்செய்த இத்திருமொழியை அதிகரிப்பவர்கள் இவர் தம்மைப்போலவே ஆயிரம்பேரானைப் பேர்பாடப் பெற்று ஆராத காதலையுடையராயிருப்பர்கள்; இவ்வளவேயல்லாமல் மூற்றுலகையும் ஆளும்படியான செல்வச் சிறப்பும் பெற்றிடுவர்கள். இத் திருமொழியைக் கற்பவர்கட்கு மாத்திரமேயன்று பலன்; இதனைச் செவி தாழ்த்துக் கேட்க விரும்புமவர்கட்கும் அவசியம் அநுபவித்தே அறவேண்டிய துயர்களும் தொலைந்திடும் என்று பயனுரைத்துத் தலைக்கட்டிற்றாயிற்று. .... ....(க0)

அடிவரவு:—மன், இருந்தான், அன்னே, அறியோம், தப்மை, வைத்தார், கண்ணன், பாடோமே, நன்னெஞ்சே, பெற்றார், நிலை.

மூன்றாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—நான்காந்திருமொழி,

# நிலையிடமெங்குமின்றி.

உரையவதாரிகை:—“பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச து³ஷ்க்ருதாம் । த⁴ர்மஸம்ஸ்தா²பநார்தா²ய ஸம்ப⁴வாமி யுகே³ யுகே³ ॥ = பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.” என்பது எம்பெருமானுடைய திருமுகப் பாசுரம். சிஷ்டர்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்கும் அறநெறியை நிலைநாட்டுதற்கும் அடிக்கடி அவதாரங்கள் செய்து போருவேன் என்றருளிச்செய்து வைத்தான். இதில் பகவதவதாரத்திற்கு மூன்று பிரயோஜனங்கள் சொல்லப்பட்டுள்ளன; [சிஷ்டபரிபாலனம், துஷ்ட நிக்ரஹம், தர்மஸ்தாபனம் என்பன.] இவை மூன்றும் ஒரே பிரயோஜனமாகத் தலைக்கட்டக்கூடியது. எங்ஙனேயென்னில், “பரித்ராணாய

ஸாதூநாம்'' என்று முதலிலே சொல்லப்பட்ட சிஷ்ட ஜநரக்ஷணமாவது—அவர்களுடைய விரோதிகளைப் போக்கி அவர்களுக்கு அபிமதமான தர்மஸ்தாபநத்தைச் செய்துவைப்பதேயாம். ஆகையாலே "பரித்ராணாய ஸாதூநாம்" என்றதற்கே மற்றவையிரண்டும் விவரணரூபம் என்று கொள்ளத்தகும்.

இப்படிப்பட்ட சிஷ்டபரிபாலனம் செய்யவேண்டில், ஸங்கல்பமாத்திரத்தாலே ஸகல ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களையெல்லாம் அவலீலையாக நடத்தவல்ல எம்பெருமான் கர்ம வச்யரைப்போலே வந்து பிறக்கவேணுமோ? இருப்பிடத்திலிருந்து கொண்டே "சிஷ்டர்கள் வாழவேணும், துஷ்டர்கள் தலைமடியவேணும்'' என்று ஸத்ய ஸங்கல்பனான தான் ஸங்கல்பித்துவிட்டால் உத்தேச்யம் எளிதாக நிறைவேறிவிடுமன்றோ? "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றும் "எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றும் சொல்லுகிறபடியே பலபல யோனிகளிலே வந்து பிறக்க வேண்டுவானேன்? என்று சங்கையுண்டாகலாம்; திருவாய்மொழியில் (3—1—9) "மழுங்காத வைநுதிய சக்கரநல் வலத்தையாய், தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க் களித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" என்ற பாசுரத்தில் இந்த சங்கைக்குப் பரிஹார முணர்த்தப்பட்டது. அதாவது, ஸங்கல்பமாத்திரத்தினால் எம்பெருமான் சிஷ்டபரிபாலனம் செய்யுமளவில் அடியார்கட்கும் த்ருப்தி பிறவாது, எம்பெருமானுக்கும் த்ருப்தி பிறவாது; 'துஷ்டர்கள் மடியவேணும், தர்மமார்க்கம் தழைக்கவேணும்' என்பது மாத்திரமே அடியார்களின் அபேக்ஷிதமன்று; "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன் பால்வாராய்" என்றும் "தாமரை நீள்வாசத் தடம்போல் வருவானே ஒருநாள் காணவாராயே" என்றும் "கொம்மை முலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யுந் தவந்தானென், செம்மையுடைய திருமார்பில் சேர்த்தானேலு மொருநான்று, மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் தருமேல் மிகநன்றே" என்றும் கதறுகின்ற அடியார்களின் அபேக்ஷிதம் ஸங்கல்பத்தினால் தலைக்கட்டக்கூடியதோ? ஆண்களையும் பெண்ணுடை யுடுத்தச் செய்யவல்ல வடிவழகைக்காண வாசைப்பட்டார்க்கு ஸங்கல்பம் என்ன செய்யும்? * மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்றிழிந்த கானமர் வேழமானது "நாராயணாவோ! மணிவண்ணா நாகணையாய்! வாராய் என்னாரிடரை நீக்காய்" என்று கதறினது, முதலையின் வாயிற் கோட்பட்ட இடரை நீக்கவேணுமென்றோ? அஃதன்று; 'மிக வருந்திப் பறிக்கப்பட்ட இப்பூவை எம்பெருமானுடைய திருவடிகளில் ஸமர்ப்பிக்கப் பெறுகின்றிலோமே!' என்ற இடரன்றோ கஜேந்திராழ்வானுக்கு உண்டாயது. இது ஸங்கல்பத்தினால் நீக்கக்கூடிய இடரன்றே.

இனி எம்பெருமானுடைய ஸ்வபாவத்தைப் பார்த்தாலும் நேரே யெழுந்தருளி முகங்காட்டி ரக்ஷித்தாலல்லது த்ருப்திபெறாத ஸ்வபாவமுடையனாயிராநின்றான்; மிக்க பெருஞ்சபை நடுவே துச்சாஸநனால் பரிபவிக்கப்பட்ட த்ரௌபதி

‘கோவிந்த புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் சரணாகதாம்’’ என்று கூவினவுடனே புடவை சுரக்குமாறு அருள்செய்து அவளுடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டி யிருக்கச் செய்தேயும் ‘அந்தோ! முகங்காட்டி ரக்ஷிக்கப் பெற்றிலோமே!, அவளுக்கு நம்முடைய திருநாமம் காரியம் செய்ததேயன்றி நாம் நேர் நின்று உதவிசெய்யப் பெற்றிலோமே!’ என்று திருவுள்ளம் புண்பட்டு, தன்னுடைச் சோதிக் கெழுந்தருளும்போதும் இது ஒரு பெரிய மனக்குறையாகவே யிருந்த திறே.

ஆகவிப்படி ஆச்ரிதர்களின் த்ருப்திக்காகவும் தன்னுடைய த்ருப்திக்காகவும் அவதாரங்கள் செய்யவேண்டுவது எம்பெருமானுக்கு ஆவச்யகமாயிற்றதாகை யாலே “மீனோடாமை கேழலரி குறளாய் முன்னுமிராமனாய்த் தானாய்ப், பின்னு மிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியுமானான்’’ என்கிறபடியே பல திருவவதாரங் கள் நிகழ்ந்தனவாயின. அவ்வவதாரங்களை இப்போது ஆழ்வார்க்கு நினைப்பூட்டி ‘ஆழ்வீர்! ஆச்ரிதர்க்காக நாம் அவதரித்த அவதாரங்களை அநுஸந்தித்துத் தரிக்க மாட்டீரோ?’ என்ன, ஆழ்வாரும் அப்படியே சில பகவதவதாரங்களைப் பாசுரந் தோறும் அநுஸந்தித்துத் தரிக்கிறாராய்ச் செல்லுகிறது இத்திருமொழி ......(*)

நிலையிட மெங்குமின்றி நெடுவெள்ளமும்பர் வளநாடுமூட விமையோர் *
தலையிட மற்றெமக்கோர் சரணில்லையென்ன அரணாவனென்னு மருளால் *
அலைகடல் நீர்குழம்ப வகடாட வோடி அகல்வானுரிஞ்ச முதுகில் *
மலைகளைமீது கொண்டுவருமீனை மாலை மறவா திறைஞ்சென் மனனே! (க)

என் மனனே — என் நெஞ்சமே!,
எங்கும் நிலை இடம் இன்றி — நிலைத்து நிற்கைக்கு ஓரிடமுமில்லாமல்
நெடு வெள்ளம் — மஹாப்ரளய வெள்ளமானது
உம்பர் — மேலுலகத்தவர்களுடைய
வளம் நாடு — செழிப்புற்றிருந்த ஸ்தானங்களை
மூட — வியாபித்தவளவிலே
இமையோர் — தேவர்கள் (அஞ்சிநெஞ்சி)
எமக்கு — “எங்களுக்கு
தலை இட — தலைவணங்கி யாசிக்க
மற்று ஓர் சரண் இல்லை — (உன் திருவடி தவிர) வேறொருபுகலிடமில்லை”
என்ன — என்று விண்ணப்பஞ்செய்து நமஸ்கரிக்க
(அவ்வளவிலே)
அரண் ஆவன் என்னும் அருளால் — ‘உங்களுக்கு நான் சரணமாகின்றேன்’ என்று கொண்டகிருபையினாலே
(அவர்கட்கு நிலையிடம் தருவதற்காக)
அலை கடல் நீர் குழம்ப — அலையெறிகின்ற ஸமுத்ர ஜலம் குழம்பாகும்படி யாகவும்
அகடு — தன்கீழ் வயிற்றிலே
ஆட — அலையெறியும்படியாகவும்
அகல் வான் — அகன்ற ஆகாசத்திலே
ஓடி — (பிரமன் முதலியோருடைய குடியிருப்பிலே) சென்றோடி
உரிஞ்ச — வீசும்படியாகவும்
முதுகில் — தன் திருமுதுகிலே
மலைகளை — மலைகளை
மீது கொண்டு — எறிட்டுக்கொண்டு
வரும் — வருகிற
மீனை மாலை — மத்ஸ்யரூபியான எம்பெருமானை
மறவாது — ஒருகாலும் மறவாமல்
இறைஞ்சு — வணங்குவாயாக.

* * *—மத்ஸ்யாவதார வரலாற்றை அநுஸந்திக்கிற பாசுரம் இது. ப்ரளயாபத்தில் நின்றும் பிரஜைகளைக் காத்தருளினதும், அசுரர் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டு உபகரித்தருளினதும் மத்ஸ்யாவதார வரலாறு. பிரளயாபத்தில் நின்றும் ரக்ஷித்தருளின மஹோபகாரம் இப்பாசுரத்தில் பேசப்பட்டது. கூரத்தாழ்வானருளிய ஸுந்தரபாஹுஸ்தவத்தில் (தசாவதார ஸ்தோத்ர ப்ரகரணத்தில்) “[illegible]” என்ற ச்லோகம் ஓசையின்பமும் பொருள் நயமும் ஒற்றுமைப்பட இப்பாசுரத்திற்கே சிறந்த மொழிபெயர்ப்பாக அமைக்கப் பட்டிருக்கின்றதென்பது இங்கு அறியத்தக்கது. இப்பாசுரத்தின் அடிதோறும் ஒற்று நீங்கலாக இருபத்துமூன்றெழுத்துக்கள் அமைந்திருப்பதற்கிணங்க அந்த ச்லோகத்திலும் பாதந்தோறும் இருபத்துமூன்று அக்ஷரங்கள் அமைந்திருப்பதும் அறியத்தக்கது.

‘நிலையிடமெங்குமின்றி’ என்றது நெடுவெள்ளத்திலும் அந்வயிக்கலாம், இமையோரிலும் அந்வயிக்கலாம்; நிலைகொள்ளலாவதோரிடமுமில்லாமல் ஆழங்காலாயிருக்கிற நெடுவெள்ளம் என்னவுமாம்; ஓரிடத்தில் நில்லாதே அலைந்துவருகிற நெடுவெள்ளம் என்னவுமாம். இனி—இமையோர்களிடத்து அந்வயிக்கும்போது; நெடுவெள்ளமானது உம்பர்வளநாட்டை மூடினவளவிலே இமையோர்கள் [எங்கும் நிலையிடமின்றி] ஓரிடத்திலும் கால்பாவி நிற்கமாட்டாமல் என்பதாகப் பொருள்கொள்க. இமையோர்கட்கு நிலையிடம் அமைத்துக் கொடுப்பதற்காகவே எம்பெருமான் மீனைப் திருவவதரித்துக் கடலினுள்ளிருந்த குலமலைகளைத் திருமுதுகிற் சுமந்து கொண்டுவந்து வெளிப்படுத்தினனென்க.

‘தலையிடமற்று’ என்பதை ‘தலை இட மற்று’ என்றும் ‘தலை இடம் அற்று’ என்றும் பிரிக்கலாம். முந்தின யோஜனையில் இமையோர்களின் வார்த்தையாகும். ‘இப்படிப்பட்ட மஹாப்ரளய ஆபத்தைப் போக்கவேணும்’ என்று நாங்கள் ஒருவன்காலிலே தலையைமடுப்பதற்கு உன்னையொழிய வேறொரு நாதனையுடையோமல்லோம் என்று தேவர்கள் முறைப்பட, ‘நான் இருக்க நீங்கள் அஞ்சவேணுமோ? நான் ரக்ஷிக்கிறேன்’ என்று தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே அருந்தொழில் செய்த எம்பெருமானை மனமே! ஒருநாளும் மறவாது இறைஞ்சு என்கிறார்.

“ஸர்வாதிகனை ஸர்வேச்வரன் தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொண்டு அரியனசெய்து ரக்ஷியாநின்றான்; உனக்குச் செய்யவேண்டும் அருந்தேவை அவனை மறவாதிருக்கை; இத்தனையும் செய்யப்பாராய்; மறக்கவொண்ணாதசெயல்களை அவன் செய்யாநின்றால் நீ மறவாதிருக்கவேண்டாவோ?” என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் காண்க. .... .... .... (க)

செருமிகு வாளெயிற்ற அரவொன்று சுற்றித் திசைமண்ணும் விண்ணுமுடனே *
வெருவரவெள்ளை வெள்ளமுழுதுங்குழம்ப இமையோர்கணின்று கடைய *
பருவரை யொன்றுநின்று முதுகிற்பரந்து சுழலக்கிடந்து துயிலும் *
அருவரை யன்னதன்மை யடலாமையான திருமால் நமக்கோரரணே. (௨)

| | |
|---|---|
| செரு மிகு | வலிமிக்கதாய் |
| வாள் | ஒளிபொருந்தியதான |
| எயிற்ற | பற்களையுடைய |
| அரவு ஒன்று | வாஸுகி நாகத்தை |
| சுற்றி | (கடைகயிறாகச்) சுற்றி |
| திசை | திக்குக்களிலுள்ளாரும் |
| மண்ணும் | பூமியிலுள்ளாரும் |
| விண்ணும் | மேலுலகங்களிலுள்ளாரும் |
| உடனே | ஏகரூபமாக |
| வெருவர | அஞ்சி நடுங்கும்படியாகவும் |
| வெள்ளை வெள்ளம் முழுதும் | திருப்பாற்கடலடங்கலும் |
| குழம்ப | குழம்பாகும்படியாகவும் |
| இமையோர்கள் | தேவர்கள் |
| நின்று கடைய | நின்று கடைவதற்குப் பாங்காக |
| பரு வரை ஒன்று | பெரியதொரு மலையானது |
| முதுகில் | தனது முதுகிலே |
| பரந்து நின்று | பரம்பி நின்று |
| சுழல | சுழலும்படியாக |
| கிடந்து | அந்த மலையின் கீழே கிடந்து |
| துயிலும் | சாய்ந்துகிடவாநின்ற |
| அரு வரை அன்ன தன்மை | பெரியதொரு மலை சாய்ந்து கிடக்கிறாப் போன்றுள்ள |
| அடல் | வலிமைகொண்ட |
| ஆமை ஆன | கூர்மரூபியான |
| திரு மால் | எம்பெருமான் |
| நமக்கு | நமக்கு |
| ஓர் அரண் | ஒப்பற்ற ரக்ஷகன். |

* * *—கூர்மாவதார வரலாற்றைப் பேசும் பாசுரம் இது. துர்வாஸ மஹாமுனியின் சாபத்தினால் தேவர்களின் செல்வம் யாவும் ஒழியவே அசுரர் வந்து பொருது அமரரை வென்றிட, பின்பு இந்திரன் தேவர்களோடு வந்து திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி வாஸுகியென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப் பூட்டிப் பாற்கடலைக் கடையுமிடத்து, மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்த திருமால் நமக்கு நிகரற்ற ரக்ஷகன் என்றதாயிற்று.

"மன்னும் வடமலையை மத்தாக மாசுணந்தால், மின்னுமிருசுடரும் விண்ணும் பிறங்கொளியும், தன்னினுடனே சுழல மலைதிரித்து ஆங், கின்னமுதம் வானவரை யூட்டி அவருடைய மன்னுந்துயர் கடிந்த வள்ளலை'' என்ற பெரிய திருமடல் இங்கு நோக்கத்தக்கது. .... .... .... .... .... (௨)

தீதறுதிங்கள் பொங்குசுடரும்ப ரும்ப ருலகேழினோடு முடனே *
மாதிரமண்சுமந்த வடகுன்றுநின்ற மலையாறு மேழுகடலும் *
பாதமர் சூழ்குளம்பினக மண்டலத்தினொருபா லொடுங்க வளர்சேர் *
ஆதிமுனேனமாகி யரணாயமூர்த்தி யதுநம்மை யாளுமரசே. (௫)

| | |
|---|---|
| தீது அற | குற்றமற்ற |
| திங்கள் | சந்திரனும் |
| பொங்கு சுடர் | தபிக்கின்ற தேஜஸ்ஸை யுடைய ஸூர்யனும் |
| உம்பர் | தேவர்களும் |
| உம்பர் உலகு ஏழினோடும் உடனே | மேலுலகங்களேழும் |
| மாதிரம் | திசைகளும் |
| மண் சுமந்த வட குன்று | பூமியைத் தரிக்கின்ற மேருபர்வதமும் |
| நின்ற மலை ஆறும் | மிச்சமான குலபர்வதங்களாறும் |
| ஏழு கடலும் | ஸப்த ஸாகரங்களும் |
| (ஆகிய இவையெல்லாம்) | |
| பாதம் அமர் | திருவடிகளிலே பொருந்தியுள்ள |
| சூழ்குளம்பின் | பரம்பிய திருக்குளம்பினுடைய |
| அகம் மண்டலத்தின் | உள் வலயத்தின் |
| ஒரு பால் | ஏகதேசத்திலே |
| ஒடுங்க | அடங்கும்படி |
| வளர் | வளரா நிற்பவனாய் |
| சேர் | தகுதியான |
| ஆதி | காரணபூதனாய் |
| முன் | வராஹகல்பாதியிலே |
| ஏனம் ஆகி | மஹாவராஹரூபியாய் |
| அரண் ஆய | ரக்ஷகனாய் நின்ற |
| மூர்த்தி அது | அந்த ஸ்வாமியே |
| நம்மை ஆளும் அரசு | நம்மை அடிமைகொள்ள வல்ல பிரபு. |

* * *—வராஹாவதாரத்தை அநுபவித்துப் பேசுகிறார். ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன்வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் மஹாவராஹரூபியாய்த் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கோட்டினாற்குத்திக் கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினாற்குத்தி அங்கு நின்றும் எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினன் என்றும், இப்பொழுது நடக்கிற ச்வேதவராஹகல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய பிரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளயஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலேயெடுக்க நினைந்து மஹாவராஹரூபியாகிக் கோட்டு நுனியாற் பூமியை யெடுத்து வந்தனனென்றும் வராஹாவதாரத்தைப்பற்றி வரலாறுகள் கூறப்படும். அந்த வராஹநாயனாருடைய திருமேனிப் பெருமையை இதில் வருணிக்கிறார். அண்டபித்தியிற் சார்ந்து கிடந்த பூமிப் பிராட்டியை அதனின்று ஒட்டுவிடுவித் தெடுக்கும்போது மேருமலை முதலிய பெரும் பெருத்த வஸ்துக்களெல்லாம் (வராஹமூர்த்தியின்) குளம்பில் ஒடுங்கிப் போம்படி மிகப் பெரிய வராஹத் திருவுருவெடுத்ததாகப் புராணங்

கள் கூறும். "சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரங் குலுங்க, நிலமடந்தைதனை யிடந்து புல்கிக் கோட்டிடைவைத்தருளிய வெங்கோமான் கண்டீர்" என்றார் திருத்தெற்றியம்பலத் திருப்பதிகத்திலும். பெரிய வடிவுகொண்டு உலகளந்த காலத்து மிக விசாலமான அத்திருவடிக்குப் பர்யாப்தமாயிருந்த பூமியானது வராஹாவதார காலத்தில் எயிற்றின் ஏகதேசத்திலும் அடங்காதிருந்த விசித்திரம் என்கொல்! என்று வியந்து பேசிய "வராகத் தெயிற்றளவு போதாவாறென் கொலோ எந்தை, அடிக்களவு போந்தபடி" என்ற பொய்கையார் பாசுரமுங் காண்க. ஸ்ரீமத் வேதாந்த தேசிகனும் வரதராஜ பஞ்சாசத் ஸ்தோத்ரத்தில் "வாராஹகல்பே தவ [illegible]
ஸ்ய யஸ்ய ப்ரு ஹார்ணோர்ணவ [illegible] தவைஸ்ய தசாஷ!
ஹஸ்த கயம் ப்ருஷதம் வாராஹரோஷித தவ தா வ[illegible]தம் தே?."
என்று வராஹாவதாரத்தின் பெருமையில் ஈடுபட்டுப் பேசின ச்லோகமுணர்க.

சந்திரன் ஸூரியன் முதலிய ஸகல பதார்த்தங்களும் திருவடிக் குளம்பின் ஏகதேசத்திலே ஒடுங்கும்படியாக மிக வளர்ந்த வராஹநாயனார் நம்மை ஆளவல்ல பிரபு என்றாராயிற்று.

பாதம் + அமர்; பாதமமர் எனச் சந்தியாக வேண்டுமிடத்துப் பாதமர் என்றனது தொகுத்தல். .... .... ... .... (க.)

**தளையவிழ் கோதைமாலை யிருபால்தயங்க எரிகான்றிரண்டு தறுகண் ***
**அளவெழ வெம்மைமிக்க அரியாகி யன்றுபரியோன் சினங்களவிழ ***
**வளையுகிராளி மொய்ம்பின் மறவோனதாகம் மதியாது சென்றொருகிரால் ***
**பிளவெழ விட்டகுட்ட மதுவையமூடு பெருநீரின் மும்மைபெரிதே.** (ச)

| | |
|---|---|
| அன்று | முன்பொருகாலத்தில் |
| தளை அவிழ் கோதை மாலை | கட்டு அவிழ்கின்ற [விகஸிக்கின்ற] பூமாலையானது |
| இருபால் | இரண்டு பக்கத்திலும் |
| தயங்க | அசைந்து விளங்க, |
| எரி கான்ற | அழலை உமிழாநின்றுள்ள |
| இரண்டு தறுகண் | வட்டணித்த இரண்டு திருக்கண்களும் |
| அளவு எழ | அளவு கடந்து மலர(ப் பெற்ற) |
| வெம்மை மிக்க அரி ஆகி | பயங்கரமான நரஸிம்ஹரூபியாய் |
| பரியோன் | ஸ்தூலகாயனான இரணியனுடைய |
| சினங்கள் | பகவத் பாகவத விஷயங்களிலுண்டான மாத்சரிய மெல்லாம் |
| அவிழ | குலையும்படியாக |
| வளை உகிர் ஆளி | வளைந்த திருநகங்களையுடையனாய்க் கொண்டு, |
| மொய்ம்பில் மறவோனது | வலிமையோடுகூடித் த்வேஷத்தையுடையனான இவ்விரணியனது |
| ஆகம் | உடலை |
| மதியாது சென்று | ஒருபொருளாக நினைக்காமல் கிட்டி |
| ஒரு உகிரால் | ஒரு திருநகத்தாலே |
| பிளவு எழ இட்ட | இரண்டுபிளவாம்படி செய்ததனாலுண்டான |
| குட்டம் அது | ரக்தமவோனது |
| வையம் | இவ்வுலகத்தையெல்லாம் |
| மூடு | வியாபிக்கின்ற |

| | | | |
|---|---|---|---|
| பெரு நீரில் | பிரளயப்பெருவெள்ளத்திற் காட்டில் | மும்மை பெரிது | மும்மடங்கு பெரிதாயிருந்தது. |

* * *—நரஸிம்ஹாவதாரத்தை அநுபவித்துப் பேசுகிறார். ஆச்ரித விரோதியான ஹிரண்யகசிபுவுக்குக் குடல் குழம்பும்படி பயங்கரமான வடிவத்தை ஏற்றுக்கொண்டு வரச் செய்தேயும் பக்தசிகாமணியான ப்ரஹ்லாதாழ்வானுக்குக் கண்குளிர ஸேவைஸாதிக்க விரும்பிப் பரமபோக்யமான பூமாலையை அணிந்துகொண்டு வந்து தோன்றினன் நரஸிம்ஹபகவான் என்கிறார் 'தளையவிழ் கோதைமாலை இருபால் தயங்க' என்றதனால். 'தளையவிழ்' என்றது விகஸித்ததைச் சொன்னபடி. "கட்டு நெகிழா நின்றுள்ள தொடைகொள்மாலை பூமாலை யென்னுமிவை இரண்டருகும் அசைந்துவர" என்பது வியாக்கியான வருளிச்செயல்.

எரிகான்ற+இரண்டு, எரிகான்றிரண்டு; தொகுத்தல். உண்டான சீற்றம் ப்ரஹ்லாத விரோதியான இரணியனளவில் மாத்திரமேயன்றி 'உலகங்கட்கெல்லாம் இப்போதே உபஸம்ஹாரம் விளைந்திடுமோ!' என்று அனைவரும் அஞ்சி நடுங்கும்படி அளவுமீறியிருந்ததனால் 'அளவெழ வெம்மைமிக்க அரியாகி' என்றது.

'பரியோன் சினம் அவிழ' என்னாதே 'சினங்கள்' என்று பன்மையாகச் சொன்னது இரணியனுக்கு பகவத் பாகவத விஷயங்களில் பலவகைப்பட்ட சீற்றம் இருந்தமையைக் காட்ட.

'வளையுகிராளி' என்றது நரஸிம்ஹமூர்த்திக்கும் விசேஷணமாகலாம் இரணியனுக்கும் விசேஷணமாகலாம். வளைந்த நகங்களை யுடைத்தாயிருக்கை அசுரனுக்கும் சிங்கத்துக்கும் ஒக்கும்.

இரணியனுடைய மார்பை இருபிளவாகக் கிழித்தபோது உண்டான ரக்தப் பெருக்கு மஹாப்ரளய வெள்ளத்திற்காட்டிலும் மும்மடங்கு பெரிதாயிருந்தது என்றதாயிற்று.

'வையம் ஊடு' என்று பிரித்து வையத்தினூடே என்னவுமாம். .... (௪)

வெந்திறல்வாணன் வேள்வியிடமெய்தி அங்கோர்குறளாகி மெய்ம்மையுணர *
செந்தொழில் வேதநாவின்முனியாகி வையமடிமூன்றிரந்து பெறினும் *
மந்தரமீதுபோகி மதிநின்றிறைஞ்ச மலரோன்வணங்க வளர்சேர் *
அந்தரமேழினூடு செலவுய்த்தபாத மது நம்மையாளுமரசே. (௫)

| | | | |
|---|---|---|---|
| வெம் திறல் | கொடிய வலிமையை யுடையனான | மெய்ம்மை உணர | 'இவன் மெய்யானயாசகன்' என்று மாவலி தெரிந்து கொள்ளுமாறு |
| வாணன் | மஹாபலியினுடைய | செம் தொழில் வேதம் நாவின் முனி ஆகி | நல்ல அநுஷ்டானங்களில் உபயோகப்படுகின்ற வேதத்தை நாவினால் உச்சரிக்கின்ற ரிஷிபோலவின்று |
| வேள்வி இடம் | யாகபூமியிலே | | |
| அங்கு ஓர் குறள் ஆகி | விலக்ஷண வாமனமூர்த்தியாய்க் கொண்டு | | |
| எய்தி | எழுந்தருளி | | |

| | | | |
|---|---|---|---|
| மூன்று அடி வையம் | மூவடி நிலத்தை | வணங்க | வணங்கும்படியாகவும் |
| இரந்து | யாசித்து | வளர்சேர் | வளர்ந்து செல்லுவதாய் |
| பெறினும் | பெற்றவாறே | அந்தரம் ஏழின் வழி | மேலுலகங்களேழினுள்ளும் |
| மந்தரம் மீது போகி | மந்தரத்துக்கு மேலேபோய் அளாவி | செல உய்த்த பாதம் அது | செல்லும்படி நடத்தப் பெற்ற அந்தத்திருவடியானது |
| மதி நின்று இறைஞ்ச | சந்திரன் நின்று தொழும்படியாகவும் | நம்மை அரசு ஆளும் | நம்மை ரக்ஷிக்கக் கடவது. |
| மலரோன் | நான்முகக்கடவுன் | | |

* * *—வாமநாவதாரத்தையும் த்ரிவிக்ரமாவதாரத்தையும் ஒருங்கே அநுபவித்துப் பேசும் பாசுரம் இது. மாவலி ஔதார்யத்தில் மிக்க ப்ரஸித்திபெற்றிருக்கச் செய்தேயும் தேவர்களின் குடியிருப்பை அழிக்கும்படியான மிக்கதிறல் கொண்டிருந்ததனால் 'வெந்திறல் வாணன்' எனப்பட்டது. அவனுடைய யஜ்ஞபூமியில் வாமநமூர்த்தி யெழுந்தருளும்போது "ஸாயந்த்ரயஸ்ஸாரஸம்வதா வரிஷ்டாம் வீதிம் ஸமுத்ஸ்ருஜந்து யாஜ்ஞமெய ஷஙியஜுவாடநிகடம் ப்ராப்தோ வடுர்வாமந:" என்கிறபடியே வேத வாக்கியங்களை ஆவ்ருத்தி செய்து கொண்டே யெழுந்தருளினமையால் "வேதநாவின் முனியாகி" என்றது. 'இவன் உண்மையான பிரமசாரிதான்; யாசகஞ்செய்யவே வந்திருக்கிறான்' என்றுமாவலி நினைக்கும்படியாகச் செய்த செயலாதலால் 'மெய்ம்மையுணர' எனப்பட்டது.

செந்தொழில் வேதம்—யஜ்ஞம் முதலிய நல்ல அநுஷ்டானங்களுக்கு உபயோகப்படுகிற வேதம் என்றபடி. முன்னடிகளிரண்டாலும் வாமநாவதாரச் செயலைப் பேசிப் பின்னடிகளால் த்ரிவிக்ரமாவதாரச் செயலைப் பேசுகிறார். இப்பின்னடியையே திருநெடுந்தாண்டகத்தில் "ஒண்மிதியிற் புனலுருவியொருகால் நிற்பவொருகாலுங் காமருசீரவுணனுள்ளத்து, எண்மதியுங் கடந்தண்டமீது போகியிரு விசும்பினூடு போயெழுந்து, மேலைத் தண்மதியுங் கதிரவனுந் தவிரவோடித் தாரகையின் புறந்தடவி அப்பால்மிக்கு, மண்முழுது மகப்படுத்து நின்றவெந்தை மலர்புரையுர் திருவடியே வணங்கினேனே" என்ற பாசுரத்திற் பன்னி யுரைத்திருப்பது காண்க.

ஆழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் "ஸ்ரீரங்கராஜசரணம் ப்ரணமாமி பத்மயோ: ஸநகஸ்ரீவிகர்ஷயிள ஸஸாயாரஶேஷம், வ்யக்த்ஸ்து ஸாவஜுகாகரவி விஷ்கீணஸூரஸவநஷஸிகதாதிவ கிநரஜோதாலு." என்ற ச்லோகத்தினால் கீழுலகங்களையெல்லா மளந்த வொரு திருவடியைப் பேணிப் பேசினார்; இப்பாசுரத்தில் மேலுலகங்களை யளந்த ஒரு திருவடியைப் பேணிப் பேசினாராழ்வார் என்க. .... .... .... .... (௫)

இருநில மன்னர்தம்மை யிருநாலுமெட்டு மொருநாலுமொன்று முடனே *
செருநுதலூடு போகியவராவி மங்க மழுவாளில் வென்ற திறலோன் *
பெருநிலமங்கை மன்னர்மலர்மங்கைநாதர் புலமங்கைகேள்வர் புகழ்சேர் *
பெருநிலமுண்டுமிழ்ந்த பெருவாயராகியவர் நம்மையாள்வர் பெரிதே. (௬)

| | |
|---|---|
| இரு நிலம் மன்னர் தம்மை | பரம்பின இப்பூமண்டலத்திலிருந்த அரசர்களின் |
| இருநாலும் எட்டும் ஒரு நாலுடனே ஒன்றும் | இருபத்தொரு தலைமுறையளவும் |
| செரு நுதலூடு போகி | யுத்தகளத்தின் முகப்பிலே சென்று |
| அவர் ஆவி மங்க | அவ்வரசர்களின் உயிர் முடியும்படியாக |
| மழு வாளில் | கோடாலிப்படையினால் |
| வென்ற | கொன்றொழித்த |
| திறலோன் | மிடுக்கையுடையராய் |
| பெரு நிலம் மங்கை மன்னர் | பூமிப்பிராட்டிக்கு நாயகராய் |
| மலர் மங்கை நாதர் | பெரியபிராட்டியார்க்கும் நாதராய் |
| புலம் மங்கை கேள்வர் | தன்னுடைய ஸகலேந்திரியங்களையும் இழுக்கவல்ல நீளாதேவிக்கும் நாயகராய் |
| புகழ் சேர் | மஹாயசஸ்வியாய் |
| | (பிரளயகாலத்திலே) |
| பெரு நிலம் | பூமியைமுழுதும் |
| உண்டு | திருவயிற்றில் வைத்து நோக்கி |
| உமிழ்ந்த | பின்பு வெளிப்படுத்தியருளின |
| பெரு வாயர் ஆகியவர் | பெரிய திருவாயையுடையவரான பெருமான் |
| பெரிதே | மேலுள்ள மஹாகாலமெல்லாம் |
| நம்மை ஆள்வர் | நம்மை அடிமைகொள்வர். |

* * ௬—பரசுராமாவதாரத்தைப் பேசும் பாசுரம் இது. கார்த்தவீரியார்ஜுநன் செய்த குற்றங் காரணமாக, உலகில் க்ஷத்ரியரென்று பேர்பெற்றாரெல்லாரும் முடியும்படி இருபத்தொருபடிகால் க்ஷத்ரிய குலத்தை யறுத்தொழித்த கோடாலிப்படையைக் கையிலேந்தினவனும் ஸ்ரீபூமி நீளாதேவிக்குக் கொழுநனும், திருக்கல்யாண குணங்களினாலுண்டான கீர்த்திக்குக் கொள்கலமாயிருப்பவனும், ஒருகாலத்தில் ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனுமான பெருமான் நீடூழி நம்மை அடிமைகொள்வனென்றதாயிற்று.

முமுக்ஷுக்களுக்குப் பரசுராமாவதாரம் உபாஸனைக்கு உரியதன்றாகிலும் விரோதிகளைக் களைந்தொழித்த உபகாரத்துக்குத் தோற்றுத் துதிப்பதில் குறையில்லை யென்க. ஆழ்வார்கள் இப் பரசுராமாவதாரத்தைப் பற்றிப் பேசுவதும், இராமாநுசநூற்றந்தாதியில் "கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர் மழுவால் போக்கிய தேவனைப் போற்றும் புனிதன்.......இராமாநுசன்" என்று அமுதனார் அருளிச்செய்வதும் விரோதி நிரஸநஸ்வபாவத்துக்குத் தோற்றுத் துதிப்பது மாத்திரமே யென்க. .... .... .... (௬)

இலைமலிபள்ளியெய்தி யிதுமாயமென்ன இனமாயமான்பி னெழில்சேர் *
அலைமலிவேற்கணாளை யகல்விப்பதற்கோருருவாய மானையமையா *
கொலைமலிவெய்துவித்த கொடியோனிலங்கை பொடியாக வென்றியமருள் *
சிலைமலிசெஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள் திருமால் நமக்கோரரணே. (எ)

இலை மலி பள்ளி எய்தி — பர்ணசாலையினருகே வந்து,
எழில் சேர் — மிக்க அழகையுடையனாய்
அலை மலி வேல் கணாளை — அன்பப்படுத்துமியல்வு பொருந்திய வேல் போன்ற திருக்கண்களையுடையளான பிராட்டியை
அகல்விப்பதற்கு — பிரிப்பதற்காக
இனம் ஆய மான் பின் — ஸஜாதீயமான மான்களின் பின்னே
இது மாயம் என்ன — 'இது ஆச்சரியமான மான்' என்று சொல்லும்படியாக
ஓர் உரு ஆய — விலக்ஷணமான ரூபத்தை யேறிட்டுக்கொண்டு வந்த
மானை — (மாரீசனென்கிற) மாயமானை
அமையா — கிரஸித்து,
கொலை மலிவு எய்துவித்த கொடியோன் — ப்ராணிஹிம்ஸையையே தன்னிடத்துப் பூர்த்தியாகக்கொண்டிருந்த கொடியவனான இராவணனுடைய
இலங்கை — லங்காபுரியானது
பொடி ஆக — பொடிபடும்படி
வென்றி அமருள் — வெற்றிப் போர்க்களத்திலே
சிலை மலி செம் சரங்கள் — வில்லிலே நிறைந்த செவ்விய அம்புகளை
செல உய்த்த — பிரயோகித்த
நங்கள் திருமால் — எம்பெருமான்
நமக்கு ஓர் அரண் — நமக்கு ஒப்பற்ற சரண்யன்.

* * *—ஸ்ரீராமாவதாரத்தைப் பற்றிப் பேசும் பாசுரம் இது. மாயமான் வடிவெடுத்து வந்த மாரீசனையும் இராவணனையுங் கொன்றொழித்த வரலாறுகள் இதிற் கூறப்பட்டன.

பிராட்டி இராமனைப் பிரிந்து பட்ட வருத்தங்கட்கெல்லாம் மூலகாரணம் மாரீசனென்கிற மாயமானே யாதலால் கொடியோன் என்ற விசேஷணத்தை இந்த மானுக்கு இடவேண்டியிருக்க இடாதது மாரீசனிடத்துள்ள நன்றியறிவினால் என்றுணர்க; மஹாத்ரோஹியான மாரீசனிடத்தில் நன்றிபாராட்டுதல் ஏதுக்கென்னில்; கேண்மின்; சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு, ஜனஸ்தானத்திலிருந்த தமையனாகிய கரன் பக்கல் சென்று இச்செய்தியைச் சொல்லிப் புரண்டழுது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கினவளவில் அக் கரன் பதினாலாயிரம்சேனாதிபதிகளையும் ஸேனைகளையும் இராமபிரானோடு போர்செய்ய அனுப்ப, இராமன் அவர்களத்தனை பேரையும் தாம் ஒருவராகவே கொன்று வென்றிட்டு, பிறகு வந்த கரனையும் கொன்றுவிட்டு ஜனஸ்தானத்தை சூன்யமாக்கினபோது, அங்கு இராமபாணத்துக்குத் தப்பிப் பிழைத்து ஒளித்து ஓடிப்போன அகம்பநன் இலங்கைக்குச் சென்று ஜனஸ்தானமடங்கலும் பாழ்பட்ட செய்தியையும் இராமன் ஒருவராலும் வெல்லமுடியாதவனென்பதையுஞ் சொல்லி 'ஸீதையை அபஹரித்துக் கொண்டு வந்தால் அந்த வருத்தத்தினால் இராமன் முடிந்துவிடக்கூடும்'

என்று தெரிவிக்க, இராவணன் அவனது சொற்படியே ‘ஸீதையைக் கொள்ளை கொள்ள உபாயமென்?’ என்று யோசித்து அங்கு நின்றும் புறப்பட்டு மாரீசனிருக்குமிடத்திற்கு வந்து ‘நீ எனக்கு ஒருதவி செய்யவேணும்’ என்று சொல்லித் தன் கருத்தை வெளியிட, அதுகேட்ட மாரீசன் ‘அப்பா! இராவணா! அந்த மஹாநுபாவனுடன் உனக்குப் பகை பயன்படாது; இந்த இராமன் சிறுபிள்ளையாயிருக்கும்பொழுதே விச்வாமித்ர யாகத்தில் அவனுடைய பாணத்துக்கு இலக்காகி நான்பட்ட பாடு இன்னும் மறக்கமுடியவில்லை; அத்திருநாமம் செவிப்படும்போதே என் உடல் நடுங்குகின்றது, இப்பேச்சை விட்டுவிடு; இதை நெஞ்சிலும் நினையாதே’ என்று யுக்தமாக உபதேசிக்க, அதைக்கேட்டு இராவணன் இலங்கைக்குப் போய்விட்டான்; பிறகு சூர்ப்பணகை இலங்கைக்குச் சென்று தன் மூக்கறுப்புண்டபடியையும் தாசரதிகளுடைய ஸௌந்தர்ய பராக்ரமாதி குணங்கள் எல்லையிருக்கிறபடியையும் ஸீதையின் இருப்பையுஞ் சொல்லி ‘இராமனை நீ எவ்விதத்திலாவது பங்கஞ் செய்யாவிடில் நீ ஆண்பிள்ளையே அல்ல’ என்று கூறி இராவணனை நிந்தித்துக் கீழேவிழுந்து புரண்டு அழ, இராவணன் மறுபடியும் மாரீசனிடஞ் சென்று நயபயங்களினால் அவனைத் தன் சொல்வழிப்படுத்திக் கொண்டு அம்மாரீசனுந் தானுமாய்ப் புறப்பட்டு வந்து தான் ஓரிடத்தில் ஒளித்திருந்தான். மாரீசன் இராவணனுடைய வலிகட்டாயம் பொறுக்கமாட்டாமல் மனம் நொந்துகொண்டே உடன்பட்டு நாம் காரியஞ் செய்யாவிடில் [illegible] நம்மைக்கொலைசெய்யப் போகிறான்; இவனுக்கு உடன்பட்டுக் காரியஞ் செய்தோமாகில் இராமபிரான் நம்மைக் கொன்றுவிடப்போகிறார்; இப்பாவியின் [illegible] நாம் கொலையுண்பதிற்காட்டிலும் அப் பரமபுருஷன் கையிற் கொலையுண்பது [illegible] ஏறுவாம்’ என்றெண்ணித் தன் மரணத்தைத் தீர்மானித்துக் கொண்டே வந்தானத்தனை. பிறகு மாரீசன் பொன்மானின் வடிவெடுத்துக்கொண்டு வந்து ஸீதையின் பார்வையில் மேயத்தொடங்கி அக்காட்டில் நெடுந்தூரம் இராகவனை இழுத்துக்கொண்டு போய்விட்டான்; அப்பொழுது இராகவன் ‘இவன் யாரோ அரக்கன்’ என்று தெளிந்து அம்புகளை அவன்மீது எறிந்தார்; அதனால் அடியுண்ட மாரீசன் மானுருவை விட்டு நிஜரூபத்துடன் கீழேவிழுந்து ‘ஹா லக்ஷ்மணா! ஹா ஸீதே! கெட்டேன்’ என்று இராகவனைப்போல் கூச்சலிட்டுக்கொண்டு மரணமடைந்தான்; இங்கு நாம் ஆலோசிக்கவேண்டியதென்னவென்றால், இப்படி இவன் கூச்சலிட்டது இராவணனுக்கு உபகாரஞ் செய்யவேணுமென்கிற எண்ணத்தினாலோ? அபகாரஞ் செய்யவேணுமென்கிற எண்ணத்தினாலோ? என்று ஆராயவேண்டும்; இராவணன்கையாற் கொலையுண்பதைவிட இராமபாணத்தாற் கொலையுண்டு முடிதல் நன்று’ என்கிற எண்ணத்தோடு வந்த மாரீசனுக்கு இராவணன் திறத்தில் உபகாரஞ் செய்யவேணுமென்கிற எண்ணம் உண்டாக ப்ரஸக்தியில்லை. ‘நாம் மாண்டொழிவதுபோல் அனைவரையும் மாண்டொழியச் செய்துவிடவேண்டு’ மென்ற எண்ணங்கொண்டே இராகவனைப்போல் கூச்சலிட்டான்; மாரீசன் இப்படி கூச்சலிடாமல் வெறுமனே செத்திருப்பானாகில்,

பிராட்டி லக்ஷ்மணனைப் பிரிய நேர்ந்திராது; இராவணன் பிராட்டியைக் கவர்ந்துகொண்டு போகவும் அது நிமித்தமாகத் தான் மாண்டுபோகவும் நேர்ந்திராது; தேவர்களின் ப்ரார்த்தனை ஈடேறவும் வழியிராது; மரணகாலத்தில் மாரீசன் போட்ட கூச்சலே ராவண ஸம்ஹாரத்திற்கு மூலகாரணமாக நின்றமையால் ஸ்ரீராமவிஷயத்திலே மாரீசன் உபகாரகனேயன்றி அபகாரகனல்லன் என்று உணரத்தக்கது. .... .... ... (எ)

முன்னுலகங்களேழு மிருள்மண்டியுண்ண முதலோடு வீடுமறியாது *
என்னிது வந்ததென்ன விமையோர்திசைப்ப எழில்வேதமின்றி மறைய *
பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கியிருள்தீர்ந்திவ் வையமகிழ *
அன்னமதா யிருந்தங்கறநூலுரைத்த அதுநம்மையாளுமரசே. (அ)

| | | | |
|---|---|---|---|
| முன் | முன்னொருகால் | பின்னையும் | மீண்டும் |
| உலகங்கள் ஏழும் | ஸகல லோகங்களையும் | வானவர்க்கும் | தேவர்களுக்கும் |
| | | முனிவர்க்கும் | மஹர்ஷிகளுக்கும் |
| இருள் | அஜ்ஞாந அந்தகாரம் | நல்கி | அருள்கூர்ந்து |
| மண்டி உண்ண | வியாபிக்கும்படியாகவும் | இ வையம் | இவ்வுலகமானது |
| இமையோர் | தேவர்கள் | இருள் தீர்ந்து மகிழ | இருளால் விடுபட்டு ஆநந்திக்கும்படியாக |
| முதலோடு வீடும் அறியாது | ஆதியுமந்தமுமறியாமல் | அன்னம் அது ஆய் இருந்து | ஹம்ஸரூபியாய்த் திருவவதரித்து |
| என் இது வந்தது என்ன | 'இடியொன்று இப்படியான விது என்னோ?' என்று | அங்கு | அப்போது |
| | | அறம் நூல் | வேத சாஸ்திரங்களை |
| திசைப்ப | திகைத்து நிற்கும்படியாகவும் | உரைத்த | அருளிச்செய்த |
| எழில் வேதம் | அழகிய வேதங்கள் | அது | அந்தப் பரஞ்சோதியே |
| இன்றி மறைய | இல்லாமல் மறைந்து போனவளவிலே | நம்மை அரசு ஆளும் | நம்மை அடிமை கொள்ளும். |

* * *—ஹம்ஸாவதார வரலாற்றைப் பேசும் பாசுரம் இது. முன்னொரு காலத்தில் மதுகைடபரென்ற அசுரர்கள் பிரமதேவனிடத்திலிருந்து வேதங்களை அபஹரித்துக்கொண்டு கடலில் முழுகி மறைந்துவிட, ஞான வொளியைத்தரும் பெருவிளக்கான வேதங்கள் ஒழிந்தமைபற்றி உலகமெங்கும் பேரிருள்மூடி நலியா நிற்க, பிரமன் முதலியோரனைவரும் கண்கெட்டவர்போல யாதொன்றும் செய்ய வறியாமல் திகைத்து வருந்துவது கண்டு திருவுள்ளமிரங்கித் திருமால் கடலினுட்புக்கு அவ்வசுரர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்று வேதங்களை மீட்டுக் கொணர்ந்து ஹம்ஸரூபியாய்ப் பிரமனுக்கு உபதேசித்தருளினன்; இவ்வரலாறு சிறிது வேறுபடக் கூறுதலுமுண்டு. .... .... .... (அ)

துணைநிலைமற்றெமக் கோருளதென்றிராது தொழுமின்கள் தொண்டர்! * தொலைய
உணமுலை முன்கொடுத்த வுரவோளதாவி யுகவுண்டு வெண்ணெய்மருவி *
பணைமுலையாயர்மாத ரூரலோடுகட்ட அதனோடுமோடி அடல்சேர் *
இணைமருதிற்றுவீழ நடைகற்ற தெற்றல் வினைபற்றறுக்கும் விதியே. (௯)

| | |
|---|---|
| தொண்டர் | பாகவதர்காள்!, |
| எமக்கு மற்று ஓர் துணைநிலை உளது என்று இராது | ‘நமக்கு வேறொரு ஆச்ரயமுண்டு’ என்று நினைத்திராமல் |
| தொழுமின்கள் | (எம்பெருமானை) வணங்குங்கோள்; |
| முன் | முன்பொருகால் |
| தொலைய | (கண்ணன்) முடிந்துபோக வேணுமென்றெண்ணி |
| உண | அவன் உண்ணும்படியாக |
| முலை கொடுத்த | (நஞ்சு தீற்றிய தனது) முலையை (வாயில்) கொடுத்த |
| உரவோளது | வன்னெஞ்சினளான பூதனையினுடைய |
| ஆவி உக | உயிர்மாளும்படி |
| உண்டு | ஸ்தந்யபானம்பண்ணி |
| வெண்ணெய் மருவி | வெண்ணெயை ஆசைப்பட்டு(க் களவு செய்ய) |
| பணை முலை ஆயர் மாதர் | பருத்தமுலையையுடையவளான யசோதைப் பிராட்டியானவள் |
| உரலோடு கட்ட | உரலோடே பிணித்துவைக்க |
| அதனோடும் ஓடி | அவ்வுரலையுமிழுத்துக் கொண்டோடி |
| அடல் சேர் | வலிமிக்க |
| இணை மருது | இரட்டைமருதமரங்கள் |
| இற்று வீழ | முறிந்துவிழும்படியாக |
| நடை கற்ற | நடைபயின்ற [illegible] |
| தெற்றல் | தெளிவுள்ள சிறுகுழந்தை |
| வினை பற்று அறுக்கும் | (நமது) பாபங்களை வாஸனையோடே போக்கியருளும்; |
| விதியே | இது திண்ணமே. |

* * *—ஸ்ரீ க்ருஷ்ணாவதார சேஷ்டிதங்களில் சிலவற்றைப் பேசியநுபவிக்கிறார். விஷந் தடவின முலையை உண்ணக் கொடுத்த பேய்ச்சியின் உயிரை முடித்தவனும், வெண்ணெயை ஆசைப்பட்டுக் களவுசெய்தவளவிலே கண்டு பிடித்து யசோதைப்பிராட்டி உரலோடே பிணித்துவிட அதனையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்து செல்லுமளவிலே இரட்டை மருதமரங்களை வீழ்த்தவனுமான எம்பெருமான் நம்முடைய பாவங்களைப் பற்றறத் தொலைத்தருள்வன்; ஆகையாலே ‘எம்பெருமானொருவனே நமக்குத்துணை’ என்கிற அத்யவஸாயத்தோடே அவனைத் தொழுங்கோளென்று தொண்டர்களை நோக்கி யருளிச்செய்தாராயிற்று.

தொண்டர்=அண்மைவிளி.

நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் ஒரு காலத்தில் பல அப்ஸரஸ் ஸ்திரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்து கொண்டிருக்கையில் நாரத முனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடையெடுத்து உடுத்து நீங்க, இந்த மைந்தர்மாத்திரம் மதுபான மயக்கத்தினால் வஸ்த்ரமில்லாமலே யிருக்க நாரதர் கண்டு கோபங்கொண்டு மரங்கள்போல் நிற்கிற நீங்கள் மரங்களாவீர்” என்று சபிக்க, உடனே அவர்கள்

வேண்டிக்கொண்டதற்கு இரங்கி நெடுங்காலஞ் சென்றபின்பு திருமால் உங்களருகில் நெருங்குஞ் சமயத்தில் இவ்வடிவமொழிந்து முன்னைய வடிவம்பெற்று மீள்வீர் என்று சாபவிடை கூறிப்போயினர். இப்படி சாபத்தினால் மரங்களான இவற்றில் சம்ஸனுலேவப்பட்ட இரண்டு அசுரர்களும் ஆவேசித்துக்கிடந்தனர். இது இப்படியிருக்க, கண்ணன் குழந்தையாயிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலையிழுத்துக்கொண்டு தவழ்ந்து அவ்விரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தருளியபோது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில் அம்மரங்களாய்க் கிடந்த குபேர புத்திரரிருவரும் சாபந்தீர்ந்து சென்றனர்; ஆவேசித்திருந்த அசுரர்களும் மாண்டொழிந்தனர்.

உண—உண்ண. உரவோள்—வலிய நெஞ்சுடையவள். தேற்றல்—தெளியவன். .... .... .... .... .... .... (௯)

கொலைகெழு செம்முகத்த களிறொன்றுகொன்றுகொடியோனிலங்கை பொடியா*
சிலைகெழு செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள்திருமாலை வேலைபுடைசூழ் *
கலிகெழுமாடவீதி வயல்மங்கைமன்னு கலிகன்றிசொன்ன பனுவல் *
ஒலிகெழு பாடல்பாடி யுழல்கின்ற தொண்டரவராள்வரும்பருலகே. (௧௦)

| | |
|---|---|
| கொலை கெழு | கொலைசெய்யுமியல்வு விளங்கப்பெற்ற |
| செம் முகத்த | சிவந்த முகத்தையுடைத்தாய்க் கொண்டுவந்த |
| களிறு ஒன்று | (குவலயாபீடமென்னும்) ஒருயானையை |
| கொன்று | கொன்றொழித்தவனும், |
| கொடியோன் | கொடியவனான இராவணனுடைய |
| இலங்கை | லங்காபுரியானது |
| பொடி ஆ | பொடியாகும்படி |
| சிலை கெழு செம் சரங்கள் செல உய்த்த | வில்லிலுள்ள நெருப்புப் போன்ற அம்புகளைப் பிரயோகித்தவனுமுன்ன |
| நங்கள் திருமாலை | எம்பெருமானைக் குறித்து, |
| வேலை புடை சூழ் | கடலாலே சுற்றுஞ் சூழப்பட்டதாய் |
| கலி கெழு மாடம் வீதி | வலிமைமிக்க மாடவீதிகளையுடையதாய் |
| வயல் | கழனிகளையுடைத்தான |
| மங்கை | திருமங்கைநாட்டிலே |
| மன்னு | பொருந்திவாழ்கிற |
| கலிகன்றி | ஆழ்வார் |
| சொன்ன | அருளிச்செய்த |
| பனுவல் | ஸ்ரீஸூக்தியாய் |
| ஒலி கெழு | சொற்கள் சிறந்த |
| பாடல் | இத்திருமொழியை |
| பாடி | வாயாரப்பாடி |
| உழல்கின்ற | இதுவே போதுபோக்காய்த் திரிகின்ற |
| தொண்டர் அவர் | பாகவதர்கள் |
| உம்பர் உலகு | பரமபதத்தை |
| ஆள்வர் | ஆளப்பெறுவர்கள். |

* * *—எம்பெருமான் இங்ஙனே பலபல திருவவதாரங்கள் செய்தருளி யிருந்தாலும் ஸ்ரீக்ருஷ்ணாவதாரமும் ஸ்ரீராமாவதாரமுமே நெஞ்சுக்கு இனியவை என்பது தோன்றுமாறு இந்த நிகமனப் பாசுரத்தில் அவ்விரண்டவதாரங்களை யெடுத்துப் பேசுகிறாரென்க. கம்ஸனது குவலயாபீட மதயானையைக் கொன்றொழித்தவனும் இலங்கை பாழாளாகப் படை பொருதவனுமான எம்பெருமானைக் குறித்துக் கலியன் திருவாய்மலர்ந்தருளிய இத்திருமொழியைப் பாடித்திரிகின்ற தொண்டர்கள் பரமபதத்தைப் பெற்று அநுபவிப்பர்கள் என்று பயனுரைத்தாராயிற்று.

[வேலைபுடைசூழ்] திருமங்கைநாட்டுக்குக் கடல் அணித்தாக இல்லாமையாலே 'வேலை' என்பதற்குக் கடல் என்று பொருள் கொள்ளாமல் கடல்போன்ற காவிரிநதி யென்று பொருள் கொள்ளலாமென்பர் சிலர்; அது வேண்டா; 1. "வேலை மோதும் மதில்சூழ் திருக்கண்ணபுரம்" என்றவிடங்களுக்குக் கூறும் சமாதானம் இங்கு நொக்கும். .... .... .... .... (க௦)

அடிவரவு:—நிலை. செரு. நீதழ. தளை, வெந்திறல், இருநிலம், இலைமலி, மூன், துணை, கொலை, மான்.

நான்காந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—ஐந்தாந்திருமொழி,

# மானமருமென்னோக்கி.

---

உரையவதாரிகை:—எம்பெருமான் அநந்த கல்யாணகுண நிதியாயிருப்பவன். இத் திருக்குணங்கட்கு ஓர் எல்லைகிடையாது. பலவகைப்பட்டு எல்லையற்றிருக்கின்ற அத் திருக்குணங்கள்—மேன்மைக்கு ஏகாந்தமான குணங்களென்றும் எளிமைக்கு ஏகாந்தமான குணங்களென்றும் இரண்டு பாகுபாடுகளையுடையன. ஜ்ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ்ஸு என்றிவை போன்ற திருக்குணங்கள் மேன்மைக் குணங்கள் [பரத்வ குணங்கள்] என்றும் வாத்ஸல்யம் ஸௌசீல்யம் முதலிய குணங்கள் எளிமைக் குணங்கள் [ஸௌலப்ய

---

1. திருவாய்மொழி 9-10-1.

குணங்கள்] என்றும் வழங்கப்பெறும். பகவத்குணாநுபவம் பண்ணுகிறவர்களில் சிலர் பரத்வ குணங்களையே அநுபவிப்பர்; சிலர் ஸௌலப்ய குணங்களையே அநுபவிப்பர். பலர் இரண்டையுஞ் சேர அநுபவிப்பர்.

கேவல பரத்வமும் கேவல ஸௌலப்யமும் கொண்டாடத் தகுந்ததன்று. மேருமலை கைலாஸமலை போன்ற மலைகள் மிகச் சிறந்தவையேயாயினும் அவை ஒருவர்க்கும் எளிதல்லாமையாலே பயனற்றவையாம். அவைதாமே தரித்ரர்கட்குக் கிடைக்கக்கூடியவையா யிருந்தால் எவ்வளவோ சீர்மைபெறுமே. ஆகவே ஸௌலப்யமற்ற பரத்வம் உபயோகமற்றது. இவ்விதமாகவே பரத்வமற்ற ஸௌலப்யமும் உபயோகமற்றது; தெருக்களில் பரல்கள் பல எளிதா யிருக்கின்றன; அவற்றை விரும்புவாருண்டோ? அவைதாமே மணியும் மாணிக்கமுமா யிருந்தால் எவ்வளவோ பயனுண்டு. ஆகவே, வெறும் ஸௌலப்யமும் வெறும் பரத்வமும் பயனற்றவையே.

எம்பெருமானோவென்னில் இவ்விருவகைக் குணங்களாலும் நிறைந்தவன். அடியார்கள் கூசாதே வந்து பணிகைக்கீடான எளிமைக் குணங்களாலுங் குறையற்றவன்; வந்து பணிந்தவர்களுக்கு அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைத் தலைக்கட்டித் தருகைக்கிடான மேன்மைக் குணங்களாலுங் குறையற்றவன். ஆகவே பகவத்குணாநுபவம் பண்ணுமவர்கட்குப் பரத்வகுணாநுபவம் ஸௌலப்ய குணாநுபவம் என்ற இரண்டும் ப்ராப்தம்.

இவ்வாழ்வார் இக்குணங்களைப் பல பாசுரங்களிலும் அநுபவித்திருக்கின்றாராயினும் இப்போது விலக்ஷணமாக அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி ஏக காலத்திலே இரண்டு பிராட்டிமாருடைய நிலைமையையடைந்து ஏசிப்பேசுகிற ஒருத்தியின் பாசுரத்தாலே ஸௌலப்யகுணத்தையும், ஏத்திப் பேசுகிற மற்றொருத்தியின் பாசுரத்தாலே பரத்வகுணத்தையும் அநுபவிக்கிறாராய்ச் செல்லுகிறது இத்திருமொழி.

பெரியாழ்வார் "என்னாதன் தேவிக்கு" என்னுந் திருமொழியிலே இரண்டு ஆயர் மங்கைகளின் அவஸ்தையைத் தாமடைந்து ஒருத்தி க்ருஷ்ணாவதார வ்ருத்தாந்தத்தைப் பாடுவதாகவும் ஒருத்தி ராமாவதார வ்ருத்தாந்தத்தைப் பாடுவதாகவும் அருளிச்செய்ததும், "கதிராயிரமிரவி" என்னுந் திருமொழியிலே அவ்வாழ்வாரே தாமே தம்மை இரண்டுவகையாக வகுத்துக்கொண்டு 'ஸர்வேச்வரனைக் கண்ணாலே காணவேணும்' என்று தேடுகை ஒரு வகுப்பாகவும் 'அப்படி தேடுகிறீர்களாகில் அவனை உள்ளபடி கண்டாருளர்' என்று விடை சொல்லுகை ஒரு வகுப்பாகவுமாய் அருளிச்செய்ததும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும் "பட்டிமேய்ந்தோர் காரேறு" என்னுந் திருமொழியிலே தன்னையே இரண்டு வகுப்பாக்கிக்கொண்டு "இங்கே போதக்கண்டீரே" என்று கேட்பதும் "விருந்தாவனத்தே கண்டோமே" என்று விடை கூறுவதுமாய் அருளிச்செய்ததும் இங்கு நினைக்கத்தக்கன.

ஒருவர் இரண்டு வ்யக்திகளின் அவஸ்தையை ஏககாலத்திலே அடையுமாறு பொருந்துமோ? எனின்; எம்பெருமானது அருளின் மிகுதியால் ஞானத்தில் தடையற்றால் பொருந்தாததொன்றில்லை. பரமபதத்தில் நித்ய முக்தர்கள் ஏககாலத்தில் பல சரீரங்களைப் பரிக்ரஹிப்பதாக "ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி" இத்யாதி உபநிஷத்துக்கள் கூறுகின்றன; அது பொருந்துவது எம்பெருமானருளாலென்பதுபோலக் கொள்க. .... ... .... (*)

மானமரு மென்னோக்கி வைதேவி யின்துணையா *
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான் காணேடீ! *
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்த பொன்னடிகள் *
வானவர்தம் சென்னி மலர்கண்டாய் சாழலே. (க)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ! |
| | (நீ ஏத்திச்சொல்லுகிற புருஷன்) |
| மான் அமரும் | மானையொத்த |
| மெல் நோக்கி | மென்மையான கண்களை யுடையவளான |
| வைதேவி | விதேஹராஜவம்சத்துப் பிறந்தவளான ஸீதையை |
| இன் துணை ஆ | இனிய துணைவியாகக் கொண்டு |
| கான் அமரும் | காட்டிலே பொருந்திய |
| கல் அதர் | கல்நிறைந்தவழியிலே |
| போய் | போய் |
| காடு | காடுகளிலே |
| உறைந்தான் காண் | வாஸம்பண்ணினான் காண்; |

(என்று ஒருத்திசொல்ல;)
(மற்றொருத்தி அதற்கு மறுமாற்றமுரைக்கிறாள்;)

| | |
|---|---|
| சாழலே | தோழீ!, |
| கான் அமரும் கல் அதர் போய் | காட்டிலே பொருந்திய கல்நிறைந்தவழியே சென்று |
| காடு | காடுகளிலே |
| உறைந்த | ஸஞ்சரித்த |
| பொன் அடிக்கள் | திருவடிகளானவை |
| வானவர் தம் | தேவர்களினுடைய |
| சென்னி | முடியில் (அணியத்தக்க) |
| மலர் கண்டாய் | புஷ்பங்களாயிராநின்றன காண். |

* * *—முன்னடிகள் ஒருத்தியின் பாசுரம், பின்னடிகள் மற்றொருத்தியின் பாசுரம். முன்னடிகளால் ஸௌலப்யகுணம் வெளியிடப்படுகிறது, பின்னடிகளால் பரத்வகுணம் வெளியிடப்படுகிறது. தோழீ! எங்கள் பெருமான் மிகச் சிறந்தவன், உபயவிபூதிநாதன் என்கிறாயே; அஃது உண்மையாயின் அப்ராக்ருதமான வொருதேச விசேஷத்திலே "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்கிறபடியே யிருந்துகொண்டு மேன்மையாக விளங்கமாட்டானோ? இந்த இருள்தரு மாஞாலத்திலே வந்து பிறந்தான்; தசரத சக்ரவர்த்திக்கு மூத்தமகனாய்ப் பிறந்து வைத்தும் அரசுரிமையை யிழந்து தன் பெண்பெண்டாட்டியையுங் கூட்டிக்கொண்டு கல்லும் முள்ளுமான காட்டிலே கால்நோவ நடந்து சென்றானே; மேன்மையுடையார்படி இதுவோ! என்றாள் ஒருத்தி.

குணங்கள்] என்றும் வழங்கப்பெறும். பகவத்குணாநுபவம் பண்ணுகிறவர்களில் சிலர் பரத்வ குணங்களையே அநுபவிப்பர்; சிலர் ஸௌலப்ய குணங்களையே அநுபவிப்பர். பலர் இரண்டையுஞ் சேர அநுபவிப்பர்.

கேவல பரத்வமும் கேவல ஸௌலப்யமும் கொண்டாடத் தகுந்ததன்று. மேருமலை கைலாஸமலை போன்ற மலைகள் மிகச் சிறந்தவையேயாயினும் அவை ஒருவர்க்கும் எளிதல்லாமையாலே பயனற்றவையாம். அவைதாமே தரித்ரர்கட்குக் கிடைக்கக்கூடியவையா யிருந்தால் எவ்வளவோ சீர்மைபெறுமே. ஆகவே ஸௌலப்யமற்ற பரத்வம் உபயோகமற்றது. இவ்விதமாகவே பரத்வமற்ற ஸௌலப்யமும் உபயோகமற்றது; தெருக்களில் பரல்கள் பல எளிதா யிருக்கின்றன; அவற்றை விரும்புவாருண்டோ? அவைதாமே மணியும் மாணிக்கமுமா யிருந்தால் எவ்வளவோ பயனுண்டு. ஆகவே, வெறும் ஸௌலப்யமும் வெறும் பரத்வமும் பயனற்றவையே.

எம்பெருமானோவென்னில் இவ்விருவகைக் குணங்களாலும் நிறைந்தவன். அடியார்கள் கூசாதே வந்து பணிகைக்கீடான எளிமைக் குணங்களாலுங் குறையற்றவன்; வந்து பணிந்தவர்களுக்கு அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைத் தலைக்கட்டித் தருகைக்கீடான மேன்மைக் குணங்களாலுங் குறையற்றவன். ஆகவே பகவத்குணாநுபவம் பண்ணுமவர்கட்குப் பரத்வகுணாநுபவம் ஸௌலப்ய குணாநுபவம் என்ற இரண்டும் ப்ராப்தம்.

இவ்வாழ்வார் இக்குணங்களைப் பல பாசுரங்களிலும் அநுபவித்திருக்கின்றாராயினும் இப்போது விலக்ஷணமாக அநுபவிக்கத் திருவுள்ளம்பற்றி ஏக காலத்திலே இரண்டு பிராட்டிமாருடைய நிலைமையையடைந்து ஏசிப்பேசுகிற ஒருத்தியின் பாசுரத்தாலே ஸௌலப்யகுணத்தையும், ஏத்திப் பேசுகிற மற்றொருத்தியின் பாசுரத்தாலே பரத்வகுணத்தையும் அநுபவிக்கிறாராய்ச் செல்லுகிறது இத்திருமொழி.

பெரியாழ்வார் "என்னாதன் தேவிக்கு" என்னுந் திருமொழியிலே இரண்டு ஆயர் மங்கைகளின் அவஸ்தையைத் தாமடைந்து ஒருத்தி க்ருஷ்ணாவதார வ்ருத்தாந்தத்தைப் பாடுவதாகவும் ஒருத்தி ராமாவதார வ்ருத்தாந்தத்தைப் பாடுவதாகவும் அருளிச்செய்ததும், "கதிராயிரமிரவி" என்னுந் திருமொழியிலே அவ்வாழ்வாரே தாமே தம்மை இரண்டுவகையாக வகுத்துக்கொண்டு 'ஸர்வேச்வரனைக் கண்ணாலே காணவேணும்' என்று தேடுகை ஒரு வகுப்பாகவும் 'அப்படித் தேடுகிறீர்களாகில் அவனை உள்ளபடி கண்டாருளர்' என்று விடை சொல்லுகை ஒரு வகுப்பாகவுமாய் அருளிச்செய்ததும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும் "பட்டிமேய்ந்தோர் காரேறு" என்னுந் திருமொழியிலே தன்னையே இரண்டு வகுப்பாக்கிக்கொண்டு "இங்கே போதக்கண்டீரே" என்று கேட்பதும் "விருந்தாவனத்தே கண்டோமே" என்று விடை கூறுவதுமாய் அருளிச்செய்ததும் இங்கு நினைக்கத்தக்கன.

ஒருவர் இரண்டு வ்யக்திகளின் அவஸ்தையை ஏககாலத்திலே அடையுமாறு பொருந்துமோ? எனின்; எம்பெருமானது அருளின் மிகுதியால் ஞானத்தில் தடையற்றால் பொருந்தாததொன்றில்லை. பரமபதத்தில் நித்ய முக்தர்கள் ஏககாலத்தில் பல சரீரங்களைப் பரிக்ரஹிப்பதாக "ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி" இத்யாதி உபநிஷத்துக்கள் கூறுகின்றன; அது பொருந்துவது எம்பெருமானருளாலென்பதுபோலக் கொள்க. .... ... .... (*)

மானமரு மென்னோக்கி வைதேவி யின்துணையா *
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான் காணேடீ! *
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்த பொன்னடிகள் *
வானவர்தம் சென்னி மலர்கண்டாய் சாழலே. (௧)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ! |
| | (நீ ஏத்திச்சொல்லுகிற புருஷன்) |
| மான் அமரும் | மானையொத்த |
| மெல் நோக்கி | மென்மையான கண்களையுடையவளான |
| வைதேவி | விதேஹராஜவம்சத்துப் பிறந்தவளான ஸீதையை |
| இன் துணை ஆ | இனிய துணைவியாகக் கொண்டு |
| கான் அமரும் | காட்டிலே பொருந்திய |
| கல் அதர் | கல்நிறைந்தவழியிலே |
| போய் | போய் |
| காடு | காடுகளிலே |
| உறைந்தான் காண் | வாஸம்பண்ணினான் காண்; |

(என்று ஒருத்திசொல்ல;)
(மற்றொருத்தி அதற்கு மறுமாற்றமுரைக்கிறாள்;)

| | |
|---|---|
| சாழலே | தோழீ!, |
| கான் அமரும் கல் அதர் போய் | காட்டிலே பொருந்திய கல்நிறைந்தவழியே சென்று |
| காடு | காடுகளிலே |
| உறைந்த | ஸஞ்சரித்த |
| பொன் அடிக்கள் | திருவடிகளானவை |
| வானவர் தம் | தேவர்களினுடைய |
| சென்னி | முடியில் (அணியத்தக்க) |
| மலர் கண்டாய் | புஷ்பங்களாயிராநின்றன காண். |

* * *—முன்னடிகள் ஒருத்தியின் பாசுரம், பின்னடிகள் மற்றொருத்தியின் பாசுரம். முன்னடிகளால் ஸௌலப்யகுணம் வெளியிடப்படுகிறது, பின்னடிகளால் பரத்வகுணம் வெளியிடப்படுகிறது. தோழீ! எங்கள் பெருமான் மிகச் சிறந்தவன், உபயவிபூதிநாதன் என்கிறாயே; அஃது உண்மையாயின் அப்ராக்ருதமான வொருதேச விசேஷத்திலே "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப" என்கிறபடியே யிருந்துகொண்டு மேன்மையாக விளங்கமாட்டானோ? இந்த இருள்தரு மாஞாலத்திலே வந்து பிறந்தான்; தசரத சக்ரவர்த்திக்கு மூத்தமகனாய்ப் பிறந்து வைத்தும் அரசுரிமையை யிழந்து தன் பெண்பெண்டாட்டியையுங் கூட்டிக்கொண்டு கல்லும் முள்ளுமான காட்டிலே கால்நோவ நடந்து சென்றானே; மேன்மையுடையார்படி இதுவோ! என்றாள் ஒருத்தி.

ஐயோ! பரத்வத்தோடே கூடினவிடத்தில் உள்ள ஸௌலப்யம் கொண்டாடத் தகுந்ததென்பதை அறிந்திலையே; கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான் என்பதை மாத்திரம் பேசுகிறாயேயன்றி, அப்படி நடந்த திருவடிகளையே வானவர்கள் சென்னிக்கு மலர்ந்த பூவாகக் கொள்ளுகிறார்களென்பதை அறிந்திலையே!, வானவர்களின் தலைகளிலேயே யிருக்கவேண்டிய அத்திருவடிகள் ஆச்ரித ரக்ஷணார்த்தமாகவன்றோ காடுறைந்தன; துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநங்களை ஸங்கல்பமாத்திரத்தினால் செய்துவிடாமல் கைதொட்டுச் செய்து நிறம்பெறவேணுமென்கிற விருப்பத்தினால் சிஷ்டர்களான மஹர்ஷிகளும் துஷ்டர்களான அசுர ராக்ஷஸர்களும் இருந்தவிடங்களைத் தேடித்திரிந்து நடந்துசென்று காரியம் பார்த்த மஹாகுணம் அறியாயோ? என்கிறாள் மற்றொருத்தி. .... (க)

தந்தை தளைகழலத் தோன்றிப்போய் * ஆய்ப்பாடி
நந்தன் குலமதலையாய் வளர்ந்தான் காணேடீ!
நந்தன் குலமதலையாய் வளர்ந்தான் நான்முகற்குத்
தந்தைகாண் * எந்தை பெருமான்காண் சாழலே. (உ)

| | | | |
|---|---|---|---|
| ஏடீ | தோழீ!, | மதலை ஆய் | பிள்ளையாய் |
| தந்தை | தந்தையாகிய வஸுதேவருடைய | வளர்ந்தான் காண் | வளர்ந்தானன்றோ; |
| தளை | கால்விலங்கு | — | ..........; |
| கழல | கழன்று விழும்படியாக | சாழலே | தோழீ!, |
| தோன்றி | அவதரித்து | நந்தன் குலம் மதலை ஆய் வளர்ந்தான் | இடைப்பிள்ளையாய் வளர்ந்தவன் |
| போய் | மதுரையில் நின்றும் பெயர்ந்து போய் | நான்முகற்கு | நான்முகனுக்கு |
| ஆய்ப்பாடி | திருவாய்ப்பாடியில் | தந்தை காண் | தகப்பன் காண்; |
| நந்தன் | நந்தகோபருடைய | எந்தை பெருமான் காண் | என்னுடைய குலநாதன் காண். |
| குலம் | குலத்திற்கு(க் கொழுந்தான) | | |

* * *—தோழீ! எங்கள் பெருமான் பிறப்பிலி, ஸர்வரக்ஷகன் என்று ஏற்றமாகச் சொல்லிக்கொள்ளுகிறாயே, இஃது உண்மையாக இருக்கவில்லையே; வஸுதேவர்க்கும் புத்திரனாய் வந்து பிறந்தானென்று புராணஜ்ஞர் சொல்லுகிறார்களே; நம்மைப்போன்ற ஒருவனுக்குப் புதல்வனாகப் பிறந்தவனைப் பிறப்பிலியென்று சொல்லுதல் எங்ஙனே பொருந்தும்? அவ்வளவேயோ? பிறந்தவிடத்தில் பெருமதிப்புடனே வாழப்பெறாமல் "ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவி லொருத்திமகனா யொளித்துவளர" என்கிறபடியே கம்ஸனுக்கு அஞ்சித் திருவாய்ப்பாடியிலே புக்கொளித்து நந்தகுமாரனாய் வளர்ந்தானாமே; ஒரு சிறு புழுவோடொக்க நினைக்கலாம்படியான கம்ஸனுக்கு அஞ்சி மறைந்து வாழ்பவன் ஸர்வரக்ஷகனாக எங்ஙனே ஆகக்கூடும்? என்பது முன்னடிகளின் கருத்து.

தோழீ! வஸுதேவர்க்குப் பிள்ளையாய்ப் பிறந்து நந்தகிசோரனாக வளர்ந்த பெருமான் “நான்முகனை நாராயணன் படைத்தான்” என்கிறபடியே * உய்ய வுலகுபடைக்க வேண்டி உந்தியில் நான்முகனைத் தோற்றினவன் என்பது அறிந்திலையே; ஸகல ஜகத்ஸ்ருஷ்டி கர்த்தாவான நான்முகனையும் படைத்தவனை பெருமான் வந்து பிறந்தானென்றால் நம்மைப்போலே கருமம் காரணமாக வந்து பிறந்தானென்றோ நினைக்கிறாய்? “அஜாயமாநோ பஹுதா விஜாயதே தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்” என்று வேதபுருஷன் ஓதினது அறியாயோ? அநுக்ரஹம் தூண்டவந்து பிறந்தானத்தனையே. இப்படிப்பட்ட மஹாநுபாவன் ஒளித்து வளர்ந்தது மநுஷ்ய பாவனைக்குச் சேர என்னுமிடம் சொல்லவேணுமோ?

தந்தை தளைகழல = கம்ஸனால் விலங்கிடப்பட்டுச் சிறையிருந்த வஸுதேவ தேவகிகளின் கால்விலங்குகள் கண்ணபிரான் திருவவதரிக்கும்போது இற்று முறிந்தொழிந்த வரலாறு அறியத்தக்கது. .... .... (௨)

ஆழ்கடல்சூழ் வையகத்தாரேசப்போய் * ஆய்ப்பாடி
தாழ்குழலார் வைத்த தயிருண்டான் காணேடீ! *
தாழ்குழலார் வைத்த தயிருண்டபொன்வயிறு * இவ்
வேழுலகுமுண்டு மிடமுடைத்தால் சாழலே. (௩)

ஏடீ — தோழீ!,
ஆழ் கடல் சூழ் வையகத்தார் — ஆழ்ந்தகடலால் சூழப்பட்ட பூமியிலுள்ளாரெல்லாரும்
ஏச — ஏசும்படியாக
ஆய்ப்பாடி — இடைச்சேரியிலே
தாழ் குழலார் வைத்த — தாழ்ந்த கூந்தலையுடைய இடைப்பெண்கள் சேமித்து வைத்திருந்த
தயிர் — தயிரை
உண்டான் காண் — வயிறார உட்கொண்டவனன்றோ;
............;
சாழலே — தோழீ!,
தாழ் குழலார் வைத்த தயிர் உண்ட பொன் வயிறு — இடைச்சிகள் வைத்திருந்த தயிரை உட்கொண்ட திருவயிறனது
இவ் ஏழ் உலகும் உண்டும் — இவ்வுலகங்களையெல்லாம் அமுது செய்தவளவிலும்
இடம் உடைத்து — இன்னமும் அவகாசத்தையுடையதாயிருக்கின்றது;
ஆல் — ஆச்சரியம்.

* * *—தோழீ! நீ உகக்கிற பெருமான் அவாப்தஸமஸ்தகாமனாக இருந்தாலன்றோ விசேஷம்; அவனுடைய சரித்திரங்களை ஆராய்ந்தால் அவனும் நம்மைப் போலவே பிறர் பொருள்களில் விருப்பமுள்ளவனாகக் காணப்படுகிறானேயல்லது அவாப்தஸமஸ்தகாமனாகக் காணப்படவில்லையே. ஆய்ப்பாடியில் கண்ணனாய்ப் பிறந்து கள்ளவழியால் தயிர் வெண்ணெய் பால் முதலியவற்றை வாரியுண்டான் எனத் தெரிய வருவதால் இங்ஙனம் பிறர் பொருள்களில் ஆசையுள்ளவன் பரமபுருஷனாயிருக்கத் தகுமோ? என்ன;

அதற்கு மறுமொழி கூறுகின்றாள் மற்றொருத்தி. தோழீ!, திருவாய்ப்பாடியில் இடைச்சிகள் சேமித்துவைத்திருந்த தயிரை அமுது செய்தானென்பது உண்மையே; நம்முடைய வயிறு போலே ஏதேனும் சிலவற்றை யுண்டு நிறைந்துவிடுகிற திருவயிறோ அவனது? * காரேழ் கடலேழ் மலையேழுலகுண்டும் ஆராவயிற்றனா யிருப்பவன் காண். ஸப்தலோகங்களையும் வாரித் திருவயிற்றினுள் இட்டாலும், இன்னமும் இப்படிப் பதினாயிரமுலகங்களை யிட்டாலும் நிறையமாட்டாமல் விசாலமாகவே இடமுடைத்தா யிராநின்றதுகாண். ஆகையாலே நம்மைப்போலே வயிற்றை நிறைக்கவேணுமென்கிற எண்ணத்தினால் தயிர் முதலியவற்றை அவன் வாரியுண்பவனாகில் அவனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வத்திற்குக்குறையுண்டாகும்; அடியவர்களுடைய ஹஸ்தஸ்பர்சமுள்ளதொரு பொருளாலல்லது தரிக்கமாட்டாத மஹாகுணத்தை வெளியிடவேண்டித் தாழ்குழலார் வைத்த தயிருண்டானத்தனையாகையாலே கொண்டாடத்தக்க எளிமை காண் இது, என்றாளாயிற்று. .... ... .... .... (௯)

அறியாதார்க் கானாயனாகிப்போய் * ஆய்ப்பாடி
உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்தான் காணேடீ!*
உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்த பொன்வயிற்றுக்கு *
எறிநீருலகனைத்து மெய்தாதால் சாழலே. (௰)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| அறியாதார்க்கு | ஒன்றுமறியாதவர்களுக்குள்ளே |
| ஆன் ஆயன் ஆகி | மாடுமேய்க்குமிடைக்குலத்தவனாய் |
| ஆய்ப்பாடி | இடைச்சேரியிலே |
| உறி ஆர் | உறிகளிலே பொருந்தின |
| நறு வெண்ணெய் | மணம்மிக்க வெண்ணெயை |
| உண்டு | (களவுசெய்து) உட்கொண்டு |
| உகந்தான் காண் | ஸந்தோஷித்தான் காண்; |
| | .............; |
| சாழலே | தோழீ!, |
| உறி ஆர் நறு வெண்ணெய் உண்டு உகந்த | உறிகளிலே பொருந்திய நறுவெண்ணெயை உட்கொண்டு உவந்த |
| பொன் வயிற்றுக்கு | திருவயிற்றுக்கு |
| எறி நீர் உலகு அனைத்தும் | கடல்சூழ்ந்த லோகங்களெல்லாம் |
| எய்தாது | போதாது; |
| ஆல் | ஆச்சரியம். |

* * *—திருவாய்ப்பாடியில் கண்ணபிரான் தயிர்வெண்ணெயுண்ட வரலாற்றிலே ஆழ்வார்களெல்லாரும் மிக ஈடுபாடுடையர்களாதலாலும் இவ்வாழ்வார் தாமும் அதிலே விசேஷமான ஈடுபாடுடையராதலாலும் கீழ்ப்பாட்டின் ப்ரமேயமே இப்பாட்டிலும் பொலிய நிற்கிறது. அறியாதார்க்கு ஆனாயனாகி=ஸர்வஜ்ஞனான எம்பெருமான் அறிவில்லாதவொரு சன்மத்திலே பிறக்கவேணுமென்று நினைத்தால் இடக்கையும் வலக்கையுங்கூட அறியமாட்டாதபடி அறிவுகேட்டுக்கு எல்லை நிலமான இடைக்குலத்திலே தான் பிறக்கவேணுமோ? அறியாதார்க்கு

அறிவில்லாதவர்களுக்குள்ளே, ஆனயனாகி—கடைகெட்ட இடையனாகி. [இங்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில் சில ப்ரக்ஷேப உத்க்ஷேபங்கள் இருப்பதை ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு திருத்திக்கொள்க.] .... (௪)

வண்ணக்கருங்குழ லாய்ச்சியால் மொத்துண்டு *
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ !*
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும் *
எண்ணற்கரிய னிமையோர்க்கும் சாழலே. (௫)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| வண்ணம் | அழகியதாய் |
| கரு | கறுத்த |
| குழல் | கூந்தலையுடைய |
| ஆய்ச்சியால் | யசோதைப்பிராட்டியாலே |
| மொத்துண்டு | அடியுண்டு |
| கண்ணி குறு கயிற்றால் | முடிகளையுடைத்தாய் (எட்டம்போராதபடி) குறியதான கயிற்றினால் |

| | |
|---|---|
| கட்டுண்டான் காண் | கட்டுண்டு கிடந்தான்காண்; |
| | ............; |
| சாழலே | தோழீ!, |
| | கண்ணி குறு கயிற்றால் கட்டுண்டான் ஆகிலும்—; |
| இமையோர்க்கும் | தேவர்களுக்கும் |
| எண்ணற்கு | நெஞ்சால் நினைப்பதற்கும் |
| அரியன் | அஸாத்யன். |

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் ஸர்வசக்தனாயிருந்தாலன்றோ அதிசயம்? அப்படியில்லையே; வெண்ணெய் முதலியன திருடிய குற்றத்திற்காக யசோதைப்பிராட்டியினால் மொத்துண்டதுமன்றியிலே * கண்ணிநுண் சிறுத்தாம்பினால் அவள் கட்டிப்போட்டு வைக்க, அந்தக்கட்டை அவிழ்த்துக்கொள்ள மாட்டாதே கட்டுண்டபடியே கிடந்தான் கிடாய் என்ன;

அதற்கு மறுமொழி கூறுகின்றாள் மற்றொருத்தி; வானவர்கட்கும் நெஞ்சால் நினைப்பரியனான பெருமான் இங்ஙனே தன்னுடைய ஸௌசீல்யகுணத்தைக் காட்டவேண்டிக் கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டு கிடந்தானென்று அறியமாட்டிற்றிலையே என்றவாறு.

**கண்ணிக்குறுங்கயிற்றால்**=கண்ணபிரான் வெண்ணெய் களவு செய்கிற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால் கட்டி வருத்துகிறாளென்று வீட்டிலுள்ள கயிறுகளையெல்லாம் துண்டுதுண்டாக அறுத்து வைத்திட்டே வெண்ணெய் திருடச் செல்வது வழக்கம்; விதிவசத்தால் பிடிபுண்ட அவனை ஒரு கையாலேபிடித்துக்கொண்டு, கட்டுவதற்காகத் தாம்பு தேடப்போவள் யசோதை; துண்டுதுண்டான தாம்புகளே கிடைக்கும். அவற்றை அவள் ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு கயிறு வடிவமாக்கி அதுகொண்டு கண்ணபிரானைக் கட்டுவள்; ஆனதுபற்றிக் கண்ணிக்குறுங்கயிறு எனப்பட்டது.

**கட்டுண்டான்** = யசோதைப்பிராட்டி கண்ணிக் குறுங்கயிற்றினால் தன்னைக் கட்டும்போது தன் உடம்புக்கு எட்டம் போராதபடி மிகச் சிறிதான

அத் தாம்பினால் கட்டமுடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக் கொள்ள வல்லவனாயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரித பாரதந்திரியம் முதலிய சீலங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வநிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிற தான் தாம்பினால் கட்டுண்டிருக்கை முதலான இவ்வகைகளால் நான் அக்குணங்களை விளங்கச்செய்து கொள்ளவேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப்போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும் படி உடம்பைச் சுருக்கி அமைத்துக்கொண்டு கட்டுண்டு கிடந்தானென விரித்துக் கொள்க.

இமையோர்க்கும் எண்ணற்கரியன்—1. "மத்துறுகடை வெண்ணெய்களவினில் உரவிடையாப்புண்டு, எத்திறமுரலினோடிணைந்திருந் தேங்கிய வெளிவே" 2. "இமையோர் தமக்கும்—தனிப்பெருமூர்த்திதன் மாயஞ் செவ்வே நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச்சொல்லே" என்றவை இங்கு அநுஸந்தேயம். .... .... .... .... .... (ரு)

கன்றப் பறைகறங்கக் கண்டவர்தம் கண்களிப்ப *
மன்றில் மரக்கால்கூத்தாடினான் காணேடீ !*
மன்றில் மரக்கால்கூத் தாடினனாகிலும் *
என்றுமரிய னிமையோர்க்கும் சாழலே. (சு)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| கன்ற | (விரோதிகளின் நெஞ்சு) கன்றும்படியாக |
| பறை கறங்க | பறைகள் ஒலிக்கவும் |
| கண்டவர் தம் | பார்த்தவர்களினுடைய |
| கண் | கண்களானவை |
| களிப்ப | களிக்கவும் |
| மன்றில் | நாற்சந்திகளிலே |
| மரக்கால் கூத்து ஆடினான் காண் | மரத்தைக் காலிலேகட்டியாடுவதொரு கூத்தை ஆடினானன்றோ? |
| | ............; |
| சாழலே | தோழீ!, |
| | மன்றில் மரக்கால்கூத்து ஆடினான் ஆகிலும்—; |
| இமையோர்க்கும் | தேவர்களுக்கும் |
| என்றும் | என்றைக்கும் |
| அரியன் | அருமைப்பட்டவன் காண். |

* * *—ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் நாற்சந்திகளிலே நின்று மரக்கால் கூத்தாடினமையைச் சொல்லி ஏசிப் பேசுகிற தோழியின் பாசுரமாகச் செல்லுகின்றன முன்னடிகள்;

மரக்கால் கூத்தாவது என்னென்னில்; குடங்களையெடுத்தெறிந்து ஆடுவதொரு கூத்துப்போலே மரக்கால்களையெடுத்தெறிந்து ஆடுவதொரு கூத்துக்கு

1. திருவாய்மொழி 1—3—1.
2. திருவிருத்தம் 98.

மரக்கால் கூத்தென்று பெயர் என்பர் சிலர்; இது வியாக்யானத்திற்குப்பொருந்தாது; "மரத்தைக் காலிலேகட்டி ஆடினான் காண்" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி. இதற்குச் சேரப் பொருள் கூறவேண்டில், மிக நீண்டதொரு கொம்பை நிலத்திலே நிறுத்தி அதன்மேலே கால்கட்டை விரலை ஊன்ற வைத்துக்கொண்டு அந்தரத்திலே ஆடுவதொரு கூத்து மரக்கால் கூத்தெனப் படுமென்பதே தகுதி. தொம்பரவர்போலே இப்படி மரக்கால் கூத்தாடுகிறவனையோ தோழீ! நீ பரமபுருஷனாகப் போற்றுவது? என்று தோழி சொல்ல; இமையோர்க்கும் அரியவனான பெருமானிவன் என்றறிந்திலையே; அப்படிப்பட்டவனுக்கு உண்டான தாழ்வு குணமேயன்றிக் குறையன்றுகாண்என்று உணர்த்துகிற முறைமையிலே பின்னடிகளில் மறுமொழி கூறிற்றாயிற்று. ... (சு)

கோதைவேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான்*
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான் காணேடீ !*
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டானாகிலும் *
ஓதநீர்வையகமுன் னுண்டுமிழ்ந்தான் சாழலே. (எ)

ஏடீ — தோழீ!,

கோதை வேல் ஐவர்க்கு ஆய் — (அரசர்க்குரிய) பூமாலையையும் வேற்படையையும் உடையவரான பஞ்சபாண்டவர்களுக்கு விதேயனாய்

மண் அகலம் கூறு இடுவான் — (குரு பாண்டவர்கட்குப்) பூமியைப் பங்கிட்டுக் கொடுத்துச் சந்தி செய்வதற்காக

தூதன் ஆய் — தூதசென்றவனாய்

மன்னவனால் — துரியோதனனென்னும் அரசனால்

சொல் உண்டான் காண் — இழிவான சொற்களைச் சொல்லப் பெற்றானன்றோ?

சாழலே — தோழீ!,

தூதன் ஆய் மன்னவனால் சொல்லுண்டான் ஆகிலும்—;

முன் — முன்பொருகால்

ஓதம் நீர் வையகம் — கடல் சூழ்ந்த உலகத்தை யெல்லாம்

உண்டு உமிழ்ந்தான் — (பிரளயங்கொள்ளாதபடி) வயிற்றிலேவைத்து நோக்கி வெளிப் படுத்தினான் காண்.

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் எல்லார்க்கும் மேம்பட்டவனாக வன்றோ இருக்கவேண்டும்; அவன் அப்படியிருந்தானாகில் பிறர்க்கு இழி தொழில் செய்து திரிவானோ? பஞ்சபாண்டவர்களுக்கு அரசுரிமை பெறுவித்தற் பொருட்டுப் 'பாண்டவதூதன்' என்று பெயர்சுமந்து துரியோதனாதிகளிடத்தில் தூது நடந்தான்; அங்ஙனே நடந்தவிடத்திலே அந்தத் துரியோதனனால் இழிவான வார்த்தைகளைச் சொல்லப்பெற்றான்; இவனையோ நீ பரமபுருஷனென்று கொண்டாடுவது? என்ன;

அதற்கு மறுமொழி கூறுகின்றாள் மற்றொருத்தி;—பாண்டவர்கட்குத் தூது நடந்ததும் மன்னவனால் சொல்லுண்டதும் மெய்யே; இவற்றையேயோ நீ பார்ப்

பது; கடல்சூழ்ந்த வுலகங்களையெல்லாம் முன்பு பிரளயங்கொள்ளாதபடி திருவயிற்றினுள் வைத்துப் பிறகு வெளிப்படுத்தினவன் இவனே என்கிற பெருமையை அறிந்திலைபோலுமென்கிறாள்.

கோதை = அரசர்க்கு லக்ஷணமான பூமாலையைச் சொன்னபடி; அரசுரிமையை இழந்திருந்த பாண்டவர்கட்கு அப்போது பூமாலையில்லையாகிலும் அதனை அணிவதற்குரிய ஸ்வரூப யோக்யதையைக் கொண்டு இங்கு இவ்விசேஷணமிட்டபடி.

[தூதனாய்.] கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர்க்கு ஸ்ரீராமாவதாரத்திலே அளவற்ற பக்ஷபாதமுண்டென்பது ப்ரஸித்தம். சிறியாத்தானென்பவர் பட்டருடைய ஸ்ரீஸூக்திகளைக் கேட்க விரும்பி ஒருநாள் பட்டர் ஸந்நிதியில் விடைகொண்டு 'சக்ரவர்த்தி திருமகனார்க்கு எல்லா ஏற்றமுமுண்டேயாகிலும் ஆச்ரிதர்களுக்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோன ஏற்றமில்லையே; அந்த ஏற்றம் கண்ணபிரானுக்கேயன்றோ வுள்ளது' என்றார். அதை பட்டர் கேட்டருளி 'ஓய்! குணக்கடலாகிய இராமபிரானுக்குத் தூதுபோதல் அநிஷ்டமன்றுகாணும்; இக்ஷ்வாகு வம்சத்தில் ஸார்வபௌமனாகப் பிறந்தானாகையாலே மஹாராஜன் கழுத்திலே ஓலையைக் கட்டித் தூதுபோக விடுவாரைக் கிடையாமையாலே இராமன் தூதுபோகப் பெற்றிலனத்தனை; அந்த அவதாரத்திலே சிறிய திருவடி அங்குமிங்கும் போவது வருவதாய்க்கொண்டு தூதக்ருத்யஞ் செய்து வார்த்தை சொல்லித் திரிந்த ஏற்றத்தைக் கண்டு நாமும் இப்படி ஆச்ரிதர்களுக்காகத் தூது போகப் பெற்றிலோமே' என்று திருவுள்ளம் குறைபட்டு அக்குறை தீருகைக்காகவே பின்னை இழிகுலத்திலே வந்து பிறந்து தூதுசென்றான்; க்ஷத்ரியனென்று நிச்சயிக்கில் தூதுபோக விடமாட்டார்களென்று அத்தை மறைத்து வளர்ந்தான் காணும்; அபிஷிக்த க்ஷத்ரியகுலத்திலே பிறந்தால் 'தூது போ' என்று ஏவ ஒருவர்க்கும் நா எழாதிறே'' என்றருளிச் செய்தாராம்.

மன்னவனால் சோல்லுண்டான் = கண்ணபிரான் தூது எழுந்தருளுங்காலத்தில் விதுரர் திருமாளிகையிலே புகுந்து அமுது செய்துவிட்டு ஸபைக்கு எழுந்தருள, "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந। கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்? = பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ் சைவ மதுஸூதந!, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷலபோஜநம்?'' [ஞானத்திற்சிறந்த த்ரோணாசாரியரும் செல்வத்திற்சிறந்த நானுமிருக்க எங்களையெல்லாம் விட்டு ஏதுக்குப் பள்ளிச்சோறு தின்றுவந்தாய்?] என்றதை நினைத்தே இங்குச் சோல்லுண்டான் என்றது.

துரியோதனன் கண்ணபிரானை வையச் செய்தேயும் தூஷணமான ஸம்போதனங்களையிட்டு வசைகூறாதே 'புண்டரீகாக்ஷ!' என்றே விளிக்கவேண்டும்படியான பெருமை பொலியாநிற்கிறதுபாராய் என்பதுதோன்றச் 'சோல்லுண்டானாகிலும்' என்றது. .... .... .... .... (எ)

பார்மன்னர் மங்கப் படைதொட்டு வெஞ்சமத்து *
தேர்மன்னர்க் காயன்று தேரூர்ந்தான் காணேடீ! *
தேர்மன்னர்க் காயன்று தேரூர்ந்தா னாகிலும் *
தார்மன்னர் தங்கள் தலைமேலான் சாழலே. (அ)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ! |
| அன்று | பாரதப்போர் நிகழ்ந்த அக்காலத்தில் |
| பார் | பூமியிலுள்ள |
| மன்னர் | அரசர்கள்யாவரும் |
| மங்க | மாளும்படியாக |
| வெம் சமத்து | வெவ்விய போர்க்களத்திலே |
| படை தொட்டு | (பிரதிஜ்ஞைக்குமாறாக) ஆயுதமெடுத்து |
| தேர் மன்னற்கு | தேர்வீரனை அர்ஜுனனுக்கு |

| | |
|---|---|
| ஆய் | துணையாய் [ஸாரதியாகி] |
| தேர் ஊர்ந்தான் காண் | தேரைநடத்தினான் காண்; |
| | ............; |
| சாழலே | தோழீ!, |
| | தேர் மன்னற்கு ஆய் அன்று தேர் ஊர்ந்தான் ஆகிலும் —; |
| தார் மன்னர் தங்கள் | வெற்றிமாலைபுனையும் அரசர்களுக்கெல்லாம் |
| தலை மேலான் | தலைமேல் வீற்றிருப்பவன் காண். |

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் மெய்யனுமன்று; மேனாணிப்புடையவனுமன்று; பாரதப்போரில் ஆயுதமெடுப்பதில்லை யென்று பிரதிஜ்ஞை செய்துவைத்து ஆயுதத்தை யெடுத்தான்; அஃது எப்படியாயினுமாகுக; எல்லாருங் காணும்படி யுத்தபூமியிலே தான் தேர்ப்பாகனாய் நின்று இழிதொழிலைச் செய்தானே இது தகுதியோ? என்ன;

“ராஜாதிராஜஸர்வேஷாம் = ராஜாதிராஜஸ் ஸர்வேஷாம்” என்கிறபடியே, அரசர்களென்று மார்பு நெறித்திருப்பாரெல்லார் தலையிலும் ஏறி வீற்றிருக்கும்படியான பெருமைவாய்ந்த அப்பெருமான் பார்த்தன் தன் தேர் முன் நின்று பெருங்குணத்தை வெளியிட்டுக்கொண்டானத்தனை என்று அறியமாட்டிற்றிலையோ? என்று மற்றொருத்தி மறுமொழி கூறினாளாயிற்று.

கண்ணபிரான் பாண்டவர்களின் பக்ஷத்திலே நின்று பாரதப் போர்க்கு எழுந்தருளப்போகிறானென்பதையறிந்த குருமன்னவர்கள் ‘பிரானே! நீ எமக்குத் துணை நிற்றிலையாகிலும் பார்த்தனுக்குத் தேர்ப்பாகனாக மாத்திரம் இருந்திடுவாய்; ஆயுதமெடுக்கக் கடவையல்லை’ என்று கண்ணபிரானை வேண்டிக்கொள்ள ‘அப்படியேயாகுக’ என்று கண்ணபிரான் இசைந்திருந்தான். பின்பு பதின்மூன்றாநாட் போரில் அர்ஜுநன் தன்மகனாக அபிமந்யுவைக் கொன்ற ஜயத்ரதனை ‘நாளை அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்லாவிடின் தீக்குதித்து உயிர்விடுவேன்’ என்று ப்ரதிஜ்ஞைபண்ண, அதற்கு இடமறும்படி அவனை ஒரு குழிக்குள்ளே நிறுத்திப் பகல் முப்பது நாழிகையும் அவனுக்கொரு நலிவு வாராதபடி காத்துக் கொண்டு நின்ற அதிரத மஹாரதரான துரியோதனன் முதலான ராஜாக்கள்

முன்னே கண்ணபிரான் அர்ஜுநனுடைய சபதம் பொய்த்துவிடுமேயென்று சிந்தித்து, ஸூர்யாஸ்தமயமாவதற்குச் சிலநாழிகைக்கு முன்னமே பகல் நாழிகை முப்பதுஞ் சென்றதாகத் தோற்றும்படி, நினைவறிந்து காரியஞ் செய்யுந் தனது திருவாழியைக்கொண்டு ஸூர்யனை மறைக்க, அதனால் எங்கும் இருளடைந்த பொழுது அர்ஜுநன் அக்நிப்ரவேசஞ் செய்தலைக் களிப்புடனே காணுதற்கு ஜயத்ரதனைக் குழியில் நின்றும் அவர்கள் கிளப்பி நிறுத்தினவளவிலே, இருள் பரப்பின திருவாழியைக் கண்ணபிரான் வாங்கிவிட, பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுநன் ஜயத்ரதனுடைய தலையை அம்பாலே துணித்தனன்—என்ற வரலாற்றில் கண்ணபிரான் படை தொட்டமை விளங்குதல் காண்க. ஆச்ரிதரக்ஷணார்த்தமாக அஸத்யப்ரதிஜ்ஞனாவதும் எம்பெருமானுக்குக் குணமே யென்க. .... (அ)

கண்டா ரிரங்கக் கழியக் குறளுருவாய் *
வண்தாரான் வேள்வியில் மண்ணிரந்தான் காணேடீ !*
வண்தாரான் வேள்வியில் மண்ணிரந்தா னாகிலும் *
விண்டே ழுலகுக்கும் மிக்கான்காண் சாழலே. (கூ)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| கண்டார் | பார்த்தவர்களெல்லாரும் |
| இரங்க | மனமிரங்கும்படி |
| கழிய குறள் உரு ஆய் | மிகக் குள்ளவடிவுடையனாய்க்கொண்டு |
| வண் தாரான் | வள்ளல் தனத்தைக் காட்டுகின்ற தனிமாலையையணிந்த மாவலியினுடைய |
| வேள்வியில் | யாகபூமியிலே |
| மண் இரந்தான் காண் | மண்ணை யாசித்தானன்றோ? |
| | ..............; |
| சாழலே | தோழீ!, |
| | வண் தாரான் வேள்வியில் மண் இரந்தான் ஆகிலும்—; |
| விண்டு | விஷ்ணுவாய் |
| ஏழ் உலகுக்கும் மிக்கான் காண் | எல்லாவுலகத்திலும் மேம்பட்டவன் காண். |

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் செல்வம் மிக்கவனாயிருந்தாலன்றோ விசேஷம்; அப்படியில்லையே; கண்டவர்களும் 'ஐயோ! பாவம்!!' என்று சொல்லியிரங்கும்படியாக மிகக் குள்ள வடிவெடுத்து மாவலியின் வேள்வியிற் சென்று மூவடிமண் இரந்தானன்றோ? இப்படிப்பட்ட இரப்பாளனையோ நீ பரம புருஷனாகக் கொண்டாடுவதென்ன;

தோழீ! அவ்வளவையேயோ நீ கண்டது? அவன்தானே த்ரிவிக்ரமனாகி ஏழுலகுக்கும் மிக்கானானான் என்பதறிந்திலைபோலும்; மஹாபலி ஔதார்யமென்று ஒரு பெருங்குணத்தை யுடையனா யிருந்தமையாலே அவனைத் தலையறுக்கமாட்டாதே நல்விரகாலே செருக்கழிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி ஆச்ரிதனான இந்திரனுக்காக இரப்பாளனாய்ச் சென்றானத்தனையல்லது, தனக்கொரு குறையுண்டாகி அக்குறைதீர இரந்து சென்றானல்லன் என்றாளாயிற்று.

ஈற்றடியில் விண்டு என்றது 'விஷ்ணு' என்ற வடசொல்லின் விகாரமாகவுமாம்; 'விள்' என்னும் வினைப்பகுதி யடியாய்ப்பிறந்த வினையெச்சமாகவுமாம். (௯)

கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான் *
வெள்ளத்தான் வேங்கடத்தா னென்பரால் காணேடீ !*
வெள்ளத்தான் வேங்கடத்தா னேலும் * கலிகன்றி
உள்ளத்தினுள்ளே யுளன்கண்டாய் சாழலே. (௧௦)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| கள்ளத்தால் | கபடவேஷத்தினால் |
| மாவலியை | மாவலியிடத்தில் |
| மூ அடி மண் கொண்டு | மூன்றடிமண்ணை இரந்து பெற்று |
| அளந்தான் | அளந்து கொண்டவன் (ஒருவர்க்கும் எளியனாகாதபடி) |
| வெள்ளத்தான் | திருப்பாற்கடலிலே உள்ளான்; |
| வேங்கடத்தான் | திருமலையிலே உள்ளான், |
| என்பர் காண் | என்று சொல்லுகிறார்களன்றோ?; |
| | …………; |
| சாழலே | தோழீ! |
| வெள்ளத்தான் வேங்கடத்தான் எனும் | திருப்பாற்கடலிலும் திருமலையிலும் அருமைப்படவுள்ளவனே யாகிலும் |
| கலிகன்றி | கலியனுடைய |
| உள்ளத்தின் உள்ளே | ஹ்ருதயத்தினுள்ளே |
| உளன் கண்டாய் | எளியனாயுளன் காண். |

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் ப்ராமாணிகனல்லன்; க்ருத்ரிம வேஷத்தாலே மாவலி பக்கலில் மூவடிமண் வாங்கி மூவுலகுமளந்தவனாகையாலே ப்ரவஞ்சகன்; அதுகிடக்கட்டும்; ஒருவர்க்கும் சென்று கிட்டவொண்ணாதபடி எங்கேயோ திருப்பாற்கடலிலும் திருவேங்கடமலையிலும் இருப்பவனைச் சொல்லுகிறார்களேயன்றி ஸந்நிஹிதனல்லனே யென்ன;

தோழீ! இவ்வளவேயோ நீயறிந்தது? திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளத்திலே வந்து வஸிப்பதற்கு உபாயாநுஷ்டாநம் செய்கிறபடியாகவன்றோ அவன் திருப்பாற்கடலிலும் திருமலையிலும் வஸித்தது; இப்போது அவ்விடங்களையெல்லாம் விட்டு ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே ஸந்நிஹிதனாயுளன்காண் என்கிறாள்.

எம்பெருமானுக்கு, பரமபதத்திலும் திருப்பாற்கடலிலும் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான உகந்தருளினவிடங்களிலும் இருப்பதிற்காட்டிலும் மெய்யடியாருடைய ஹ்ருதயகமலத்தில் வாழ்வதே பரமோத்தேச்யமென்றும், ஸமயம்பார்த்து அன்பருடைய நெஞ்சிலே வந்து சேர்வதற்கே மற்றவிடங்களில் எம்பெருமான் தங்குகிறானென்றும், ஆகவே பரமபதம் முதலியவற்றில் வாஸம் உபாயமாய் பக்தருடைய ஹ்ருதயத்தில் வாஸமே புருஷார்த்தமா யிருக்குமென்றும், இது ஸித்தித்துவிட்டால் பரமபதம் முதலியவற்றில் வாஸஞ் செய்வதில் ஆதரம் மட்டமாய்விடுமென்றும் ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் பரம

ஈற்றடியில் விண்டு என்றது 'விஷ்ணு' என்ற வடசொல்லின் விகாரமாகவு மாம்; 'விள்' என்னும் வினைப்பகுதி யடியாப்பிறந்த வினையெச்சமாகவுமாம். (கூ)

கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான் *
வெள்ளத்தான் வேங்கடத்தா னென்பரால் காணேடீ !*
வெள்ளத்தான் வேங்கடத்தா னேலும் * கலிகன்றி
உள்ளத்தினுள்ளே யுளன்கண்டாய் சாழலே. (க௦)

| | |
|---|---|
| ஏடீ | தோழீ!, |
| கள்ளத்தால் | கபடவேஷத்தினால் |
| மாவலியை | மாவலியிடத்தில் |
| மூ அடி மண் கொண்டு | மூன்றடிமண்ணை இரந்து பெற்று |
| அளந்தான் | அளந்து கொண்டவன் (ஒருவர்க்கும் எளியனாகாதபடி) |
| வெள்ளத்தான் | திருப்பாற்கடலிலே உள்ளான்; |
| வேங்கடத்தான் | திருமலையிலே உள்ளான், |
| என்பர் காண் | என்று சொல்லுகிறார்களன்றோ?; |
| | ...........; |
| சாழலே | தோழீ! |
| வெள்ளத்தான் வேங்கடத்தான் எலும் | திருப்பாற் கடலிலும் திருமலையிலும் அருமைப்படவுள்ளவனே யாகிலும் |
| கலிகன்றி | கலியனுடைய |
| உள்ளத்தின் உள்ளே | ஹ்ருதயத்தினுள்ளே |

* * *—தோழீ! நீ உகக்கும் பெருமான் ப்ராமாணிகனல்லன்; க்ருத்ரிம வேஷத்தாலே மாவலி பக்கலில் மூவடிமண்வாங்கி மூவுலகுமளந்தவனகையாலே நவஞ்சகன்; அதுகிடக்கட்டும்; ஒருவர்க்கும் சென்று கிட்டவொண்ணாதபடி எங்கேயோ திருப்பாற்கடலிலும் திருவேங்கடமலையிலும் இருப்பவனாகச் சொல்லுகிறார்களேயன்றி ஸந்நிஹிதனல்லனே யென்ன;

தோழீ! இவ்வளவேயோ நீயறிந்தது? திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளத்திலே வந்து வஸிப்பதற்கு உபாயாநுஷ்டாநம் செய்கிறபடியாகவன்றோ அவன் திருப்பாற்கடலிலும் திருமலையிலும் வஸித்தது; இப்போது அவ்விடங்களையெல்லாம் விட்டு ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே ஸந்நிஹிதனுயுளன்காண் என்கிறாள்.

எம்பெருமானுக்கு, பரமபதத்திலும் திருப்பாற்கடலிலும் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான உகந்தருளினவிடங்களிலும் இருப்பதிற்காட்டிலும் ஸமயம்பார்த்து அன்பருடைய நெஞ்சிலே வந்து சேர்வதற்கே மற்றவிடங்களில், எம்பெருமான் தங்குகிறனென்றும், ஆகவே பரமபதம் முதலியவற்றில் வாஸம் உபாயமாய் பக்தருடைய ஹ்ருதயத்தில் வாஸமே புருஷார்த்தமா யிருக்குமென்றும், இது ஸித்தித்துவிட்டால் பரமபதம் முதலியவற்றில் வாஸஞ் செய்வதில் ஆதரம் மட்டமாய்விடுமென்றும் ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் பரம

ரஸமாக அருளிச்செய்தவையும், அவற்றுக்கு அடியாயுள்ள "கல்லுங் கனைகடலும் வைகுந்தவானாடும், புல்லென்றொழிந்தன கொல் ஏ பாவம்!—வெல்ல நெடியான் நிறங்கரியா னுள்புகுந்து நீங்கான் அடியேனதுள்ளத்தகம்" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரமும் இங்கு அநுஸந்திக்கத்தக்கன.

ஸம்வாதமுகத்தாலே இங்ஙனே குணாநுபவம் செய்வதே ஆழ்வார்க்குப் பரமபோக்யமாயிருந்ததனால் பலச்ருதியில்லாமே இத்திருமொழி தலைக்கட்டிற்றாயிற்று. .... .... .... .... (க௦)

அடிவரவு:—மாணமரும், தக்தை, ஆழ்கடல், அறியாதார், வண்ணக், கன்ற, கோதை, பார்மன்னர், கண்டார், கள்ளம், மைந்நின்ற.

## ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

## பதினோராம்பத்து—ஆறாந்திருமொழி,

## மைந்நின்ற கருங்கடல்வாய்.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியிலே எம்பெருமானுடைய நீர்மையையும் மேன்மையையும் தோள்மாறி அநுபவித்த ஆழ்வார் "ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத—இன்கனி தனியருந்தான்" என்ற கணக்கிலே, இப்படி குணக்கடலான எம்பெருமானுடைய அநுபவத்தை நாம் தனியே செய்வதிற்காட்டிலும் மற்றும் பலரோடே கூடிக் களித்து அநுபவித்தல் நன்று என்று ஆசைகிளரப்பெற்று நமக்கு உசாத்துணையாக வருவார் ஆரேனுமுண்டோவென்று இவ்விபூதியிலே எங்குங் கண் வைத்தார்; எங்குப்பார்த்தாலும் தேவதாந்தரங்களைத் தொழுவாரும் துதிப்பாருமான மனிசர்களாணப்பட்டனரேயன்றித் தமக்குஉசாத்துணையாவாரொருவரையுங் கண்டிலர். அந்தோ! எம்பெருமான் நமக்குச் செய்தருளும் உபகாரங்களைப் பேணாதே இப்படியும் தேவதாந்தரபஜநம் பண்ணுவாருண்டோ? இந்தத் தேவதைகளெல்லாம் ப்ரளயகாலத்திலே அப்பெருமானது திருவயிற்றிலே கிடந்த எச்சில் என்பதை இப்பாவிகள் அறிந்திலர்போலும்; இவர்களாச்ரயிக்கிற தேவதைகளின் இழிவையும் ஸர்வஸமாச்ரயணீயனான எம்பெருமானுடைய உயர்வையும்

அறிவித்தோமாகில் இவர்கள் திருந்தக்கூடுமென்று திருவுள்ளம்பற்றி அங்ஙனம் அறிவித்து எல்லீரும் எம்பெருமானையே அடிபணிந்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள் என்று உபதேசிப்பதும் அவ்வுபதேசம் சடக்கெனப் பலிக்கமாட்டாமையைக் கண்டு திருவுள்ளம் நொந்து பேசுவதுமாய்ச் செல்லுகிறது இத்திருமொழி.....*

மைந்நின்றகருங்கடல்வா யுலகின்றி வானவரும் யாமுமெல்லாம் *
நெய்ந்நின்றசக்கரத்தன் திருவயிற்றில் நெடுங்காலம் கிடந்ததோரீர் *
எந்நன்றிசெய்தாரா ஏதிலோர் தெய்வத்தை யேத்துகின்றீர் ?*
செய்ந்நன்றிகுன்றேன்மின் தொண்டர்கா ளண்டனையே யேத்தீர்களே. (க)

| | | | |
|---|---|---|---|
| தொண்டர்காள் | (தகுதியற்றவிடத்திலே) தொண்டுபட்டிருப்பவர்களே! | நெடுங்காலம் | வெகுகாலம் |
| மை நின்ற கரு கடல் வாய் | மைமாறுதே நின்றாற்போலே கறுத்திருந்துள்ள கடலிடத்து | கிடந்தது | அடங்கியிருந்தமையை |
| உலகு இன்றி | லோகமொன்று மில்லாமல் | ஓரீர் | அறிகின்றீரில்லையே; |
| வானவரும் | தேவர்களும் | எந்நன்றி செய்தார் ஆ | என்னவுபகாரம் பண்ணினார்களாகக் கொண்டு |
| யாமும் | (மனிதர்களான) நாமும் | ஏதிலோர் தெய்வத்தை | விரோதிகளின் தேவதாந்தரங்களை |
| எல்லாம் | (ஆகிய) எல்லாப்பொருள்களும் | ஏத்துகின்றீர் | துதிக்கின்றீர்கள்? |
| நெய் நின்ற சக்கரத்தன் திருவயிற்றில் | நெய்யிட்டு விளங்காநின்ற திருவாழியையுடையனான எம்பெருமானுடைய திருவயிற்றில் | செய் நன்றி குன்றேல் மின் | (எம்பெருமான்) செய்தநன்றியை மறவாதீர்கள்; |
| | | அண்டனையே | (அந்த) ஸர்வேச்வரனையே |
| | | ஏத்தீர்கள் | துதியுங்கோள். |

* * *—தேவர் மனிசர் முதலான ஒரு பதார்த்தமும் உலகிற்காணவொண்ணாதபடி அனைத்தையும் கபளீகரித்த மஹாப்ரளயவெள்ளம் பரந்தகாலத்திலே 1. "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும், இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" என்கிறபடியே ரக்ஷணபரிகரமான திருவாழியாழ்வானையுடையனான எம்பெருமானது திருவயிற்றிலே ஸகல பதார்த்தங்களும் அடங்கியிருந்து ரக்ஷைபெற்ற விஷயத்தை அந்தோ! அறிவாராருமில்லையே; பாவிகாள் நீங்கள் அறியமாட்டீர்களோ? மிகப்பெரிய அவ்வாபத்தில் நின்றும் காப்பாற்றியருளின மஹோபகாரகனான எம்பெருமான் நிற்க, இவனைப் பணிந்து போற்றுதல் ப்ராப்தமாயிருக்க அது செய்யாதே, விரோதிகளான தாமஸர்கள் கொண்டாடுகிற க்ஷுத்ர தெய்வங்களை ஏத்துகின்றீர்களே; நம்மோடுகூட அப்பெருமானது திருவயிற்றிலே கிடந்து ஸத்தைபெற்ற அத்தெய்வங்களை நீங்கள் ஏத்துதற்கு ஒரு காரணம் இருக்கவேணுமே; அத் தெய்வங்களிடத்தில் நீங்கள் என்ன உபகாரம் பெற்றீர்கள்? பேருதவிபுரிந்த பெருமானைவிட்டு ஒருதவியும் புரியாத ஏதிலோர் தெய்வத்தை ஏத்துதல் உங்களுடைய க்ருதஜ்ஞதைக்குச் சேராதே.

1. திருவிருத்தம்.

"நின்றிமறப்பார் காயினுங் கேடாவார்" என்றது உங்கட்குத் தெரியாதோ? நீங்கள் க்ருதஜ்ஞர்களாக இருக்கவேண்டில் உபயவிபூதி நாதனான எம்பெருமானையே ஏத்தப்பாருங்கள் என்றாயிற்று.

ஓரீர்—முன்னிலைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று. ஓர்தல்—ஆராய்ந்தறிதல். .... .... .... .... .... (௪)

நில்லாத் பெருவெள்ளம் நெடுவிசும்பின்மீதோடி நிமிர்ந்தகாலம் *
மல்லாண்ட தடக்கையாற் பகிரண்டமகப்படுத்த காலத்து * அன்று
எல்லாருமறியாரோ? எம்பெருமானுண்டுமிழ்ந்த வெச்சில் தேவர் *
அல்லாதார் தாமுளரே? அவனருளே யுலகாவ தறியீர்களே? (௫)

| | |
|---|---|
| நில்லாத | ஓரிடத்திலும் நிலைநில்லாத |
| பெரு வெள்ளம் | மஹாப்ரளய வெள்ளமானது |
| நெடு விசும்பின் மீது | நெடிய ஆகாசத்தின் மீது |
| ஓடி | வழிந்தோடி |
| நிமிர்ந்த காலம் | ப்ரவஹித்தபோது |
| மல் ஆண்ட தடக்கையால | மிடுக்கையுடைய பெரிய திருக்கையினாலே |
| பகிரண்டம் | பகிரண்டங்களை |
| அகப்படுத்த காலத்து அன்று | (ப்ரளயங்கொள்ளாதபடி) அகப்படுத்திக்கொண்ட அந்த ஸமயத்திலே |

| | |
|---|---|
| தேவர் எம்பெருமான் உண்டு உமிழ்ந்த எச்சில் (என்று) எல்லாரும் அறியாரோ | தேவதைகளெல்லாம் எம்பெருமானது திருவயிற்றில் புகுந்து புறப்பட்ட எச்சில் என்பதை எல்லாரும் அறியமாட்டார்களோ? |
| அல்லாதார் தாம் | அப்படி எச்சிலாகாத தேவதைகள் |
| உளரே | உண்டோ? (இல்லை;) |
| உலகு | லோகமானது |
| ஆவது | ஸத்தை பெற்றிருப்பது |
| அவன் அருளே | அப்பெருமானுடைய க்ருபையின் அதீனமென்பதை |
| அறியீர்களே | அறிகின்றிலீர்களோ? |

* * *—ஓரிடத்திலும் நிலைநில்லாதே பேராரவாரத்துடன் பெருகி வருகின்ற மஹாப்ரளயவெள்ளமானது அபரிச்சிந்நமான ஆகாசத்துக்கு மேலே போய்ப் பெருகுங்கால் "அண்டாண்டபகிரண்டத் தொருமாநில மெழுமால்வரை முற்றும்" என்கிறபடியே எல்லாப் பொருள்களையும் தனது * மல்லாண்ட திண்டோளாலே வாரிப் பிடித்துத் திருவயிற்றிற் புகப்பெய்தருளின காலத்திலே அயனரனிந்திரன் முதலான எல்லாத் தெய்வங்களும் எம்பெருமான் உண்டு உமிழ்ந்த எச்சில் என்பதை அறியாதாருண்டோ? அப்படி எச்சிலாகாதே தப்பி நின்ற தெய்வம் ஒன்றுமில்லை என்பதை இன்று நாமுரைக்கவேணுமோ? உலகத்தினுடைய ஸத்தை அப்பெருமானுடைய அநுக்ரஹாதீனமென்பதை அறியமாட்டீர்களோ? இனியாகிலுமறிந்து * தொண்டர்காள்! அண்டனையே ஏத்தீர்களே.

பகிரண்டம் என்ற வடசொல் பரமபதத்துக்குப் புறம்பான மற்ற அண்டஸமூஹங்களைச் சொல்லவுமாம்; ப்ரளயவெள்ளத்திற்கு வெளிநிலமான பரமபதத்

னைச் சொல்லவுமாம்:—"ஸர்வேச்வரன் ப்ரளயம் சென்று அடராதபடி தன் திருக்கையாலே பரமபதத்தைத் தன் கைக்கீழே யிட்டுக்கொண்டு நின்றகால மென்னவுமாம்" என்ற வியாக்கியான வாக்கியங் காண்க.

ஈற்றடியில் "அவனருளே உலகாள்வது" என்றும் பாடம் வழங்குவதுண்டு; 'உலகாவது' என்ற பாடமே ஸம்ப்ரதாயம். .... .... ... (உ)

நேற்றிமேற்கண்ணனும் நிறைமோழிவாய் நான்முகனும் நீண்டநால்வாய் *
ஒற்றைக்கைவேண்பகட்டி னொருவனையு முள்ளிட்ட வமரரோடும் *
வேற்றிப்போர்க்கடலரையன் விழுங்காமல் தான்விழுங்கி யுய்யக்கோண்ட *
கோற்றப்போராழியான் குணம்பரவாச்சிறுதோண்டர் கோடியவாறே! (௩)

| | |
|---|---|
| நெற்றி மேல் கண்ணனும் | நெற்றிக் கண்ணனை சிவபிரானும் |
| நிறை மொழி வாய் நான்முகனும் | வேதங்களை உச்சரிப்பவனை பிரமனும் |
| நீண்ட நால் வாய் ஒற்றைக் கை வெண் பகட்டின் ஒருவனையும் உள்ளிட்ட | நீண்டு தொங்குகின்ற வாயையும் துதிக்கையையுமுடைய (ஐராவத மென்கிற) வெள்ளை யானைப்பாகனை இந்திரனும் முதலான |
| அமரரோடும் | தேவர்களெல்லாரையும் |
| வெற்றி போர் கடல் அரையன் விழுங்காமல் | ஜயசீலனை ஸமுத்ரராஜன் விழுங்க வொண்ணாதபடி |
| தான் விழுங்கி | தான் திருவயிற்றில்வைத்து |
| உய்யக் கொண்ட | உஜ்ஜீவிப்பித்தருளின |
| கொற்றம் போர் ஆழியான் | யுத்தங்களில் வெற்றிபெறுகின்ற திருவாழியையுடையனை எம்பெருமானுடைய |
| குணம் | திருக்குணங்களை |
| பரவா | அதிசெய்யமில்லாத |
| சிறு தொண்டர் | க்ஷுத்ரஜனங்க[illegible] |
| கொடிய ஆறே | கொடுந்தன்மை இருக்கிறபடி என்னே! |

* * *—நெற்றியில் கண்ணுடையோம் என்று செருக்குக் கொண்டிருக்கிற ருத்ரனும், இடைவிடாது வேதவாக்கியங்களை உச்சரித்துக் கொண்டிருக்கிற நான்முகக்கடவுளும், ஐராவத யானையை ஏறி நடத்துகின்ற தேவேந்திரனும் மற்றுமுள்ள அமரர்களுமான யாவரையும் ப்ரளயப் பெருங்கடல் கொள்ளை கொண்டு விழுங்காவண்ணம் தன் திருவயிற்றிலே அடக்கிவைத்து ரக்ஷித்த ஸர்வேச்வரனுடைய திருக்குணங்களை ஸங்கீர்த்தனம்பண்ணுவது ப்ராப்தமாயிருக்க அது செய்யமாட்டாத நீசர்களின் கொடுந்தன்மை என்னே! என்று ஆச்சரியப் படுகிறார்.

பகடு—யானை; வெண்பகடு—ஐராவதமென்னும் யானை. பகட்டினொருவன்-யானையின்மீதேறி நடப்பவனான ஒருவன்; தேவேந்திரனைச் சொன்னபடி.

வெற்றிப்போர்க் கடலரையன்=ஸமுத்ரவெள்ளம் பெருகப் புகுந்தால் அதனை அடர்க்கவல்லார் வேறொருவருமில்லாமையாலே 'ஜய சீலனான கடலரையன்' எனப்பட்டது. ... .... ... .... (௩)

பனிப்பரவைத் திரைததும்பப்பாரெல்லாம் நெடுங்கடலேயானகாலம் *
இனிக்களைக ணிவர்க்கில்லை யென்றுலகமேழினையு மூழில்வாங்கி *
முனித்தலைவன் முழங்கொலிசேர் திருவயிற்றில்வைத்தும்மை யுய்யக்கொண்ட *
கனிக்களவத் திருவுருவத்தொருவனையே கழல்தொழுமா கல்லீர்களே. (௪)

| | |
|---|---|
| பார் எல்லாம் | பூமியடங்கலும் |
| பனி பரவை | குளிர்ந்துபரந்திருக்கிற |
| திரை | அலைகளானவை |
| ததும்ப | எறியும்படி |
| நெடுங் கடலே ஆன காலம் | மஹாப்ரளய வெள்ளமே பரந்தபோது |
| இவர்க்கு | 'இவ்வுலகத்தார்க்கு |
| இனி | இனிமேல் |
| களைகண் இல்லை என்று | ரக்ஷகராவார் ஆருமில்லை' என்று |
| உலகம் ஏழினையும் | உலகங்களெல்லா வற்றையும் |
| ஊழில் வாங்கி | முறையாலே வாங்கி |

| | |
|---|---|
| முழங்கு ஒலி சேர் திரு வயிற்றில் வைத்து | மஹாகோஷம் நிரம்பிய திருவயிற்றினுள் வைத்து |
| உம்மை | உங்களை |
| உய்யக் கொண்ட | உஜ்ஜீவிப்பித்தருளினவனும் |
| முனி தலைவன் | ஸாத்விகர்களில் தலைவனும் |
| கனி களவம் திரு உருவத்து ஒருவனையே | கனிந்த களாப்பழம் போன்ற திருவுருவத்தை யுடையனுமான ஒரு பெருமானையே |
| கழல் தொழுமா | திருவடிதொழும் படியை |
| கல்லீர்களே | கற்கமாட்டீர்களோ? |

* * *—குளிர்ந்து பரந்திருக்கின்ற அலைகளின் கிளப்பத்தை யுடைத்தான கடலானது ஸர்வலோகங்களிலும் பெருகப்பெற்ற காலத்திலே 'இப் பெருவெள்ளத்தில் ஆழ்ந்து மாய்ந்துபோகக்கூடிய இவர்களை நாம் உபேக்ஷித்துவிட்டால் நம்மையொழிய வேறொருவரும் இவர்களைக் காக்கவல்லாரில்லையே!' என்று திருவுள்ளமிரங்கி, ஸர்வ ஸ்வாமியா யிருக்கையாகிற தனது முறைமையாலே ஸகல லோகங்களையும் வாரிப் பிடித்துத் தனது திருவயிற்றினுள்ளே வைத்து உஜ்ஜீவிப்பித்தவனும், இப்படி ஆச்ரிதர்களை ரக்ஷிக்கப்பெற்றதனாலுண்டான மகிழ்ச்சியினால் திருமேனி புகர் பெற்றுக் களங்கனிவண்ணனுமான எம்பெருமானொருவனையே திருவடி வணங்கப் பாருங்கோளென்றாராயிற்று.

களைகண்—சரணம்.

முனித்தலைவன்=நெஞ்சினுள்ளே சிந்தை செய்பவற்கு முனி யென்று பெயர்; எப்போதும் உலகங்கட்கு நன்மையைச் சிந்தை செய்பவனான தலைவன் என்றபடி.

இவ்வுலகங்களெல்லாம் திருவயிற்றினுள்ளே புகும்போது உண்டாகக்கூடிய ஆரவாரத்தின் மிகுதியைச் சொல்லுகிறது 'முழங்கொலிசேர் திருவயிறு' என்று.

பாராரும்காணுமே பரவைமா நெடுங்கடலே யானகாலம் *
ஆரானுமவனுடைய திருவயிற்றில் நெடுங்காலம் கிடந்தது * உள்ளத்
தோராத வுணர்விலீர்! உணருதிரே லுலகளந்த வும்பர்கோமான் *
பேராளன் பேரான பேர்களாயிரங்களுமே பேசீர்களே. (௫)

| | | | |
|---|---|---|---|
| பார் | பூமியிலே | | (நீங்கள்) |
| ஆரும் காணாமே | ஒருவரையும் காணவொண்ணாதபடி | உணருதிர் ஏல் | சேதனர்களாயிருப்பீர்களாகில் |
| பார் வை மா நெடு கடலே ஆன காலம் | பரந்திருந்தவ்ன மஹாப்ரளயவெள்ளமே யான சமயத்தில் | உலகு அளந்த | உலகங்களையளந்தருளின |
| ஆரானும் | எவரும் | உம்பர் கோமான் | நித்யஸூரிநாதனும் |
| அவனுடைய திருவயிற்றில் | அப்பெருமானுடைய திருவயிற்றில் | பேராளன் | பெருமைபொருந்தியவனுன எம்பெருமானுடைய |
| நெடுங்காலம் கிடந்தது | வெகுகாலம் வரையில் அடங்கியிருந்ததை | பேர் ஆன | திருநாமங்களான |
| உள்ளத்து | நெஞ்சிலே | பேர்கள் ஆயிரங்களுமே | ஸஹஸ்ரநாமங்களையே |
| ஓராத | சிந்திக்கப்பெறாத | | |
| உணர்வு இலீர் | மூடர்களே! | பேசீர்கள் | பேசுங்கள். |

* * *—இப்பூமண்டலத்தில் ஒருத்தரையுங் காணவொண்ணாதபடி எங்கும் தானேயாய்க்கொண்டு கடல்வெள்ளம் பரம்பினகாலத்திலே ஒருவர் தப்பாமல் எம்பெருமானுடைய திருவயிற்றிலே நெடுங்காலம் கிடந்து ஸத்தை பெற்ற தன்மையை ஆராயமாட்டாத அறிவுகேடர்காள்! நீங்கள் பெற்றிருக்கிற சைதந்யம் பயன்படவேண்டில், தன்னுடைய ஸர்வஸ்வாமித்வம் தோன்ற உலகங்களை யளந்துகொண்டவனை உம்பர்கோமானுடைய பல்லாயிரம் திருநாமங்களைப் பேசிக்கொண்டிருத்தல் உங்கட்குத் தக்கதாம் என்றதாயிற்று.

பாட்டினடியில் பார் என்று நிலவுலகத்தைச் சொன்னது மற்றுமுள்ள உலகங்கட்கும் உபலக்ஷணமென்க. .... .... .... .... (௫)

பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின் மீதோடிப் பெருகுகாலம் *
தாயிருக்கும்வண்ணமே யும்மைத்தன் வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான் *
போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வம் கொண்டாடும் தொண்டீர்! *
பெற்றதாயிருக்க மணைவெந்நீ ராட்டுதிரோ? மாட்டாத தகவற்றீரே. (௬)

| | | | |
|---|---|---|---|
| பேய் இருக்கும் | (மனிசரொருவருமில்லாதபடி) பேய் பிசாசுகளே யிருக்கவேண்டும்படியான | தன் வயிறு | தன் திருவயிற்றிலே |
| | | இருத்தி | இருக்கவைத்து |
| நெடு வெள்ளம் | மஹாப்ரளய வெள்ளமானது | உய்யக் கொண்டான் | உஜ்ஜீவிப்பித்தருளின பெருமான் |
| பெரு விசும்பின் மீது ஓடி | ஆகாசத்தின்மேல் வழிந்தோடி | போயிருக்க | வெறுக்கும்படியாக |
| | | இங்கு | இங்கே |
| பெருகு காலம் | ப்ரவஹித்த காலத்திலே | மற்று ஓர் புது தெய்வம் | மற்றொரு க்ஷுத்ரதேவதையை |
| தாய் இருக்கும் வண்ணமே | பெற்றதாய்போல(ப் பரிந்து) | கொண்டாடும் | கொண்டாடுகிற |
| உம்மை | உங்களை | தொண்டீர் | தொண்டர்களே!, |

உய...

ஞை எம்பெ...

யிருக்க, அது செய்...ருவுள்ள...

தெய்வங்களை நீங்கள் கொண்டாடுவதானது, பெ...

பண்ணாதே விட்டிட்டு அறிவற்றதொரு மணைக்கட்டை...

போலிரா நின்றதென்று இழித்துரைக்கிறார்.

உய்யக்கொண்டான் போயிருக்க=உஜ்ஜீவிப்பித்தருளின இ...க்கையில் அவனை விட்டு என்றும் பொருள் கொள்ளலாம்.

பெ...ற்றதாயிருக்க மணைவெந்நீராட்டுதிர்='மணை' என்றது அசேதந வஸ்துக்களை யெ...ல்லாம் சொன்னபடி. 'வெந்நீராட்டுதிர்' என்றது உபசாரங்கள் பலவற்றையுஞ் ...சொன்னபடி. 'மணைவெந்நீராட்டுமாபோலே செய்கின்றீர்' என்று சொல்லவேண்டு...த்து (அவாய் நிலையாக) உவமையை உள்ளடக்கிச் சொல்லியிருப்ப...த்து—...தெனில், தேவதாந்தரபஜனம் பண்ணுவதோடு மணைநீராட்டுவதோடு ஒருவாசியில்லை; இதுதான் அது, அதுதான் இது என்ற இரண்டுக்குமுள்ள அபேதத்தைக் கா...படியாம். மாதர்கள் பிரஸவித்தவுடனே பெற்ற அத்தாயையும் பிறந்...யும் ஸ்நாநஞ்செய்வித்தல் மலைநாட்டு வழக்கமாக வெகு முற்காலத்தில் இருந்ததாம்; பிரஸவித்தவுடனே தாயை நீராட்டுவது பல்வகைக் கஷ்டங்களுக்குக் காரணமாவதால் அத்தாய்க்குப் பதிலாக ஒருமணைக்கட்டையை ஸ்நானஞ் செய்விப்பது இடைக்காலத்து வழக்கமாக இற்றைக்கும் நடந்துவருகின்றதாம்; அதனைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறபடி. என்று சிலர் சொல்லுவர். நம்மாழ்வார், திருவாசிரியத்தில் ஆறும்பாட்டில் "ஈன்றோளிருக்க மணைநீராட்டி" என்றருளிச் செய்ததுங் கா...

மாட்டாத தகவு அற்றீரே=ஒருவர்க்கும் எளிதில் கிடைக்கமாட்டாத எம்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காகாதொழிந்தீர்களே! என்றவாறு. ....(௬)

மண்ணுமேம் விண்ணுமேம் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம் *
உண்ணாத பெருவெள்ள முண்ணாமல் தான்விழுங்கி யுய்யக்கொண்ட *
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி * அவனையுள்ளத்
தெண்ணாத மானிடத்தை யெண்ணாதபோதெல்லா மினியவாறே. (௭)

? ! Missing

ாட்டாத

முங்காதபடி | மானிடத்தை | மனிசர்களை

யிற்றிலே | எண்ணாத போது எல்லாம் } நினைக்கப்பெறுதாலமெல்லாம்

வைக்கி

ஜ்ஜீவிப்பித்தருளின | இனிய ஆறே { (எமக்கு) இனிதாக செல்லும் விதம் என்

* * *—ஒருவராலும் தகையவொண்ணாத மஹாப்ரளய வெள்ளம் மண்ணுலகம் விண்ணுலகம் வானவர் தானவர் முதலான எல்லாப் பொ தையும் யும் ஆக்ரமித்துக்கொள்ளப் புகுங்கால் அந்த ஆபத்து நேராதபடி ஆ வாய் தானே திருவயிற்றினுள்ளடக்கிவைத்துப் பாதுகாத்தருளின யிலே நித்ய அப்பெருங்குணம் நன்கு விளங்கத் திருக்கண்ணமங்கைத் திரு ஸந்நிதிபண்ணியிருக்குமவனை எம்பெருமானுடைய திருவடிகளைத் தலைமேற் புனைந்து அப்பெருமானையே இடைவிடாது சிந்தித்திருத்தல் நன்றியறிவுக்குத் தகுதி; அப்படி சிந்திக்கமாட்டாத பாவிகள் நெஞ்சிலும் இட்டு எண்ணாதிருந்தால் அதுவே நமக்குப் பரமபோக்யம் என்கிறார்.

அவனையுள்ளத் "தெண்ணாதமானிடத்தை யெண்ணாதபோதெல்லா மினிய வாறே" என்றருளிச் செய்கின்ற இவ்வாழ்வாருடைய உட்கருத்து யாதெனில்; கேண்மின்; நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் "மேலால் பிறப்பின்மை பெற்று அடிக்கீழ்க் குற்றேவலன்று, மறப்பின்மையான் வேண்டும் மாடு" என்று எம்பெருமானை ஒருபோதும் திருக்கப் பெறவேணுமென்று ப்ரார்த்தித்தார்; "दिवि वा भुवि वा ममास्तु वासो नरके वा नरकान्तक प्रकामम्। अवधीरितशारदारविन्दौ चरणौ ते मरणेऽपि चिन्तयामि — திவி வா புவி வா மமாஸ்து வாஸோ நரகே வா நரகாந்தக! ப்ரகாமம்—அவதீரிதசாரதாரவிந்தௌ சரணௌ தே மரணேபி சிந்தயாமி." (முகுந்தமாலை) என்று ப்ரார்த்தித்த மஹான்களுமுண்டு; எம்பெருமானையும் எம்பெருமானடியார்களையும் சிந்திக்கை ற புருஷார்த்தத்திற் காட்டிலும் பகவத்பாகவத விமுகர்களைச் சிந்தியாதிருக்கப் பெறுகையே பரமபுருஷார்த்தமென்பது திருமங்கையாழ்வாருடைய திருவுள்ளம். கீழ்க் கடன்மல்லைத் தலசயனத் திருப்பதிகத்தில் "மருவினிய தண்

ணர்ந்த கடன்மல்லைத் தலசயனத் துறைவாரை, என்னாதே யிருப்பாரையிறைப் பொழுது மெண்ணேனே" என்றார்; அப்படி பகவத்விமுகர்களை எண்ணப் பெறா திருக்கிற காலமே மிகச் சிறந்ததென்றாரிங்கு. இதனால் தேர்ந்த பொருள் யாதெனில்; ஒருவன் பகவத் பாகவதர்களைச் சிந்திக்கவுமாம், சிந்தியா தொழியவுமாம்; பகவத்பாகவத விரோதிகளை நெஞ்சாலும் நினைக்கப் பெறாதிருந்தால் அதுவேபோதும் என்றதாம். இங்கே வியாக்கியான வாக்கியமுங் காண்மின்:— "ஜ்ஞாநமும் வேண்டா; வைஷ்ணவ ஸஹவாஸமும் வேண்டா; அவைஷ்ணவர்களை நினையாதபோது இனிதென்கை." .... .... .... (எ)

மறங்கிளர்ந்த கருங்கடல்நீ ருரந்துரந்து பரந்தேறி யண்டத்தப்பால் *
புறங்கிளர்ந்த காலத்துப் பொன்னுலகமேழினையு மூழில்வாங்கி *
அறங்கிளர்ந்த திருவயிற்றினகம்படியில் வைத்தும்மை யுய்யக்கொண்ட *
நிறங்கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை நினையாதார் நீசர்தாமே. (அ

| | |
|---|---|
| மறம் கிளர்ந்த | கொடுமைபொருந்திய |
| கருங்கடல் நீர் | கருங்கடலின் வெள்ளமானது |
| உரம் | வேகத்தோடு |
| துரந்து | ஓடி |
| பரந்து | சுற்றும்பரம்பி |
| அண்டத்து அப்பால் புறம் | அண்டகடாஹத்திற்கு அவ்வருகாக |
| ஏறி | வியாபித்து |
| கிளர்ந்த காலத்து | கிளர்ந்த ஸமயத்திலே, |
| பொன் | விரும்பத்தக்க |
| உலகம் ஏழினையும் | உலகங்களை யெல்லாம் |
| ஊழில் | முறைமையாலே |
| வாங்கி | வாரிப்பிடித்து |
| அறம் கிளர்ந்த திரு வயிற்றின் அகம்படியில் வைத்து | தருமம் விஞ்சின திருவயிற்றி னுட்புறத்திலே வைத்து |
| உம்மை | உங்களை |
| உய்யக் கொண்ட | உஜ்ஜீவிப்பித்த |
| கரு நிறம் கிளர்ந்த | கருமை மிக்கிருக்கின்ற |
| சோதி | தேஜஸ்ஸையுடைய |
| நெடுந் தகையை | ஸர்வேச்வரனை |
| நினையாதார் தாம் | சிந்திக்கப்பெறாதவர்கள் |
| நீசர் | இழிகுலத்தவரேயாவர். |

* * *—பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கருங்கடல்தானே கொடுமை பொருந்தியதாகிக் கனவேகமாகப் பாய்ந்தோடிச் சுற்றும் பரம்பி அண்டகடாஹத்துக்கு அவ்வருகாகக் கிளர்ந்த ஸமயத்திலே, இவ்வுலகங்கட்கெல்லாம் நம்முடைய வயிறல்லது வேறுபுகலில்லையென்று திருவுள்ளம்பற்றித் தன்னுடைய ஸ்வாமித்வமேஹேதுவாக ஏழுலகங்களையும் வாரிப்பிடித்துத் திருவயிற்றினுள்ளே வைத்து ரக்ஷித்தருளி அதனால் திருமேனி புகர்படைத்தவனான பரஞ்சோதிப் பெருமானை நினைக்கமாட்டாதவர்களுக்கு மேற்பட்ட நீசரில்லை என்றாராயிற்று.

அண்டத்தின் முகடழுந்த அலைமுந்நீர்த் திரைததும்ப ஆ! ஆ! வென்று *
தொண்டர்க்கு மமரர்க்கும் முனிவர்க்கும் தானருளி * உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றி னகம்படியில் வைத்தும்மை யுய்யக்கொண்ட *
கொண்டற்கைம் மணிவண்ணன் தண்குடந்தைநகர்பாடி யாடீர்களே. (௯)

| | |
|---|---|
| அண்டத்தின் முகடு | அண்டபித்தியானது |
| அழுந்த | உள்ளே அழுந்தும்படியாக |
| அலை முந்நீர் | அலைக்கின்ற கடலினுடைய |
| திரை | அலைகளானவை |
| ததும்ப | செறிய, |
| ஆ ஆ என்று | ஐயோவென்று |
| தொண்டர்க்கும் | பக்தர்களுக்கும் |
| அமரர்க்கும் | தேவர்களுக்கும் |
| முனிவர்க்கும் | ரிஷிகளுக்கும் |
| தான் அருளி | தான் கிருபைசெய்து |
| உலகம் ஏழும் உண்டு | உலகங்களையெல்லாம் அமுது செய்தவிடத்திலும் |
| ஒத்த | முன்போலவே யிருக்கப் பெற்ற |
| திரு வயிற்றின் அகம்படியில் வைத்து | திருவயிற்றினுட்புறத்திலே வைத்து |
| உம்மை | உங்களை |
| உய்யக் கொண்ட | உஜ்ஜீவிப்பித்தருளின |
| கொண்டல் கை | மேகம்போல் உதாரனாய் |
| மணி வண்ணன் | நீலமணி நிறத்தனான பெருமானுடைய |
| தண் குடந்தை நகர் | திருக்குடந்தைப் பதியை |
| பாடி | பாடிக்கொண்டு |
| ஆடீர்கள் | நர்த்தனம் செய்யுங்கோள். |

* * *—அண்டபித்தியையும் அளாவிச்சென்று அலையெறிகின்ற மஹாப்ரளயவெள்ளம் பரந்தவளவிலே 'ஐயோ! நம்முடைய உலகுக்கு இப்படிப்பட்ட அநர்த்தம் விளைந்திட்டதே!' என்று திருவுள்ளம் நொந்து ஹாஹாகாரம்பண்ணித் தொண்டர்க்கும் தேவர்கட்கும் முனிவர்கட்கும் மற்றுமுள்ளார்க்கும் மஹாக்ருபைபண்ணி ஏழுலகங்களையும் திருவயிற்றினுள்ளே வைத்து உஜ்ஜீவிப்பித்தருளின பரமோதாரனாய் நீலமணிவண்ணனான எம்பெருமான் நித்யவாஸம் செய்தருளுமிடமான திருக்குடந்தை நகரைப்பாடி யாடுங்கோளென்கிறார்.

உண்டு ஒத்த திருவயிறு=ஏழுலகங்களையும் உட்கொண்ட வயிறு மிகப் பருத்திருக்கவேணுமே; அப்படியில்லை; உட்கொள்வதற்கு முன்பு எங்ஙனமிருந்ததோ அங்ஙனமேயிருந்தது, (அல்லது) மற்ற அவயவங்களைப் போலவே யிருந்தது என்றவாறு.

* வாடினேன் வாடியென்று தொடங்கின முதல்திருமொழியில் "சொற்பொருளாளீர்! சொல்லுகேன் வம்மின் சூழ்புனற்குடந்தையே தொழுமின்" என்றதற்குச் சேர இங்குத் "தண்குடந்தை நகர்பாடியாடீர்களே" என்று உபஸம்ஹாரம் செய்தருளினரென்று உணர்க. மேலே திருநெடுந்தாண்டகத்திலும் "தண்குடந்தைக் கிடந்த மாலை நெடியானை யடிநாயேன் நினைந்திட்டேனே" என்று தலைக்கட்டியருளுமாறறிக. .... .... .... .... .... (௯)

தேவரையுமசுரரையும் திசைகளையும் கடல்களையும் மற்றும் முற்றும் *
யாவரையு மொழியாமே யெம்பெருமா னுண்டுமிழ்ந்த தறிந்துசொன்ன *
காவளரும்பொழில்மங்கைக் கலிகன்றி யொலிமாலை கற்றுவல்லார் *
பூவளரும் திருமகளா லருள்பெற்றுப் பொன்னுலகிற் பொலிவர்தாமே. (கo)

| | |
|---|---|
| தேவரையும் | தேவர்களையும் |
| அசுரரையும் | அசுரர்களையும் |
| திசைகளையும் | திக்குக்களையும் |
| கடல்களையும் | ஸப்த ஸாகரங்களையும் |
| மற்றும் முற்றும் யாவரையும் ஒழியாமே | மற்றுமுள்ள எல்லாவற்றையும் ஒன்று தப்பாமல் |
| எம் பெருமான் உண்டு உமிழ்ந்தது | எம்பெருமான் (பிரளய காலத்தில்) திருவயிற்றிலேவைத்து(ப் பின்பு) வெளிப்படுத்தியதை |
| அறிந்து | உள்ளபடியறிந்து |
| சொன்ன | அருளிச்செய்த |
| கா வளரும் பொழில் மங்கை | பூந்தோட்டங்கள் வளரப் பெற்ற சோலைகளை யுடைய திருமங்கை நாட்டுக்குத் தலைவரான |
| கலிகன்றி | ஆழ்வாருடைய |
| ஒலி மாலை | சொல்மாலையாகிற இத்திருமொழியை |
| கற்று வல்லார் தாம் | ஓதி உணரவல்லவர்கள் |
| பூ வளரும் திரு மகளால் அருள் பெற்று | தாமரைப்பூவில் வளர்கின்ற பெரிய பிராட்டியாராலே அருள்செய்யப்பெற்று |
| பொன் உலகில் | நித்ய விபூதியிலே |
| பொலிவர் | விளங்கப்பெறுவர்கள். |

* * *—தேவர் அசுரர் திசைகள் கடல்கள் முதலான முற்றுப் பொருள்களையும் பிரளயங்கொள்ளாதபடி எம்பெருமான் பாதுகாத்தருளின வரலாற்றை யறிந்துரைத்த இத்திருமொழியைக் கற்றுவல்லவர்கள் புருஷகாரபூதையான பெரிய பிராட்டியாருடைய திருவருளுக்கு இலக்காகப் பெற்று நித்யவிபூதியிலே * நித்யஸ்ரீர் நித்யமங்களமாக வாழப்பெறுவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... .... ... .... (கo)

அடிவரவு:—மை, நில்லாத, நெற்றி, பனி, பாராரும், பேய், மண், மறம், அண்டம், தேவரை, நீணகம்.

ஆறாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—ஏழாந்திருமொழி,

# நீ ணா க ஞ் சு ற் றி.

**உரையவதாரிகை:**-செவி வாய் கண் மூக்கு முதலிய உறுப்புக்களை எம்பெருமான் நமக்கு அளித்தது இவ்வுறுப்புகளைக்கொண்டு பகவத்விஷயாநுபவம் பண்ணிக் களிப்பதற்காகவே யன்றி வேறொரு ப்ரயோஜனத்துக்காக வன்று என்பதை இவ்வாழ்வார் நன்குணர்ந்தவராகையாலே இப்படிப்பட்ட தம்முணர்வைப் பலரும் தெரிந்துகொள்ளுமாறு இத்திருமொழி அருளிச்செய்கிறார். தாங்கள் பெற்ற கரணங்களின் உபயோகத்தைத் தெரிந்துகொள்ளாமல் பாழாய்ப் போகிறவர்களை நிந்தித்து எம்பெருமானுடைய செயல்களை அநுபவியாதவர்களின் உறுப்புகள் உறுப்புகளேயல்லவென்கிறார்.

அவரவர்கள் தாம் தாம் படைத்த கரணங்களைக்கொண்டு பகவத்விஷயத்திலே அவகாஹித்து உஜ்ஜீவநம் பெறுவதே உரியது என்று உபதேசிப்பதிலே இத்திருமொழி நோக்குடையது என்றுணர்க. .... .... .... *

நீணாகம் சுற்றி நெடுவரைநட்டு * ஆழ்கடலைப்
பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த பெம்மானை *
பூணார மார்வனைப் புள்ளூரும் பொன்மலையை *
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே. (க)

| | |
|---|---|
| நீள் நாகம் | நீண்ட வாஸுகிநாகத்தை |
| சுற்றி | (கடைகயிறாகச்) சுற்றி |
| நெடு வரை | பெரிய (மந்தர) மலையை |
| நட்டு | (மத்தாக) நாட்டி |
| ஆழ் கடலை | ஆழ்ந்த கடலை |
| பேணான் | மதியாதவனாகி |
| கடைந்து | கடைந்து |
| அமுதம் | அம்ருதத்தை |
| கொண்டு | (தேவர்கட்கு) எடுத்துத்தந்து |
| உகந்த | திருவுள்ளமுவந்த |
| பெம்மானை | பெருமானும், |
| ஆரம் பூண் மார்வனை | ஹாரங்களையணிந்த திருமார்பையுடையனும் |
| புள் ஊரும் | பெரிய திருவடியை ஏறிச் செலுத்துகின்ற |
| பொன் மலையை | பொன்மலைபோன்றவனுமான ஸர்வேச்வரனை |
| காணாதார் | ஸேவிக்கப்பெறாதவர்களுடைய |
| கண் | கண்களானவை |
| என்றும் | ஒருநாளும் |
| கண் அல்ல | கண்களே அல்ல; |
| கண்டாம் | (இதைநாம் நன்கு) அறிவோம். |

* * *—தூர்வாஸ முநியின் சாபத்தினால் செல்வமனைத்தையும் இழந்த இந்திரன் தேவர்களோடு வந்து சரணமடைய அவனுக்கருள்செய்து மந்தரமலையை மத்தாகநாட்டி வாஸுகியென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப் பூட்டித்திருப்பாற்கடலைக் கடைந்து அமுதமெடுத்துக் கொடுத்தருளித் திருவுள்ளமுவந்தவனும், முத்து வடங்களணிந்த திருமார்பையுடையவனும், ஒரு பொன்மலைமேலே பொன்மலை யிருந்தாற்போலே பெரிய திருவடி தோளின்மேலே யெழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானை ஸேவிக்கப் பெறாதவர்களின் கண்கள் கண்களேயல்ல, புண்களேயாம் என்றவாறு.

பேணான் கடைந்து—'திருப்பாற்கடல் நம்முடைய படுக்கைத்தலமாயிற்றே, இதையோ நாம் கடைவது' என்று பாராமல் ஆச்ரிதர்கட்குக் காரியஞ் செய்வதையே கனமாகக்கொண்டு கடைந்தபடியைச் சொல்லுகிறது.

அமுதங்கொண்டு உகந்த—இந்திரன் வந்து சரணமடைந்தது ப்ரயோஜநாந்தரத்துக்காக வாயினும், 'இந்த அற்பபலனை யபேக்ஷித்தும் வேறொரு தெய்வத்தைப்பணியாதே நம்மை வந்து பணிந்தானே' என்று அதையே மஹாகுணமாகக்கொண்டு தன்பேறாகக் காரியம்செய்து கொடுத்து மகிழ்ந்தபடி.

புள்ளூரும் பொன்மலையை—திருவாய்மொழியில் "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல" என்று 'பொன்மலையின்மேலே காளமேகம் படிந்தாற்போலே' என்றநுபவித்தார் நம்மாழ்வார்; இங்கு இவ்வாழ்வாருடைய அநுபவம் விலக்ஷணமாயிருக்கிறது; பொன்னுருவாகக்கொண்டு பேசுகிறபடி. நீலமேகத் திருவுருவைப் பொன்னிறமாகச் சொல்வதெங்ஙனே யெனில்; "ஹிரண்யவர்ணாம் ஹரிணீம்" என்கிற சுருதியின்படியே பொன்னின் நிறம் போன்ற நிறமுடையளான பிராட்டியின் நித்ய ஸம்ச்லேஷத்தாலே எம்பெருமானுடைய கரிய திருமேனியும் அப்படியே பொன்னிறமாகப் பெற்றதென்னலாம்; சாந்தோக்ய உபநிஷத்தில் (1—6) "ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ரு: ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:" என்று ஓதப்பட்டுள்ளமையால் அதுகொண்டு சொல்லிற்று என்னலாம். பொன்மலை—பொன்போல் விரும்பத்தக்க மலை என்னவுமாம்.

காணாதார் கண் என்றும் கண்ணல்ல—"கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே? கண்ணிமைத்துக் கண்டார்தம் கண்ணென்ன கண்ணே!".

கண்டாம்—கண்டோம். .... .... ... (௮

நீள்வான் குறளுருவாய் நின்றிரந்து மாவலிமண் *
தாளாலளவிட்ட தக்கணைக்கு மிக்கானை *
தோளாத மாமணியைத் தொண்டர்க் கினியானை *
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே. (௨)

| | |
|---|---|
| நீள்வான் | நீண்டு வளர்வதற்காக |
| குறள் உரு ஆய் | வாமநவேஷதாரியாய் |
| நின்று | (யஜ்ஞசாலையிலே வந்து) நின்று |
| மாவலி | மஹாபலியினிடத்தில் |
| மண் | (மூவடி) மண்ணை |
| இரந்து | யாசித்து |
| தாளால் | திருவடிகளாலே |
| அளவு இட்ட | அளந்துகொண்டவனும் |
| தக்கணைக்கு மிக்கானை | அக்ரதாம்பூலமளிப்பதற்குச் சிறந்தவனும் |
| தோளாத மா மணியை | துளைபட்டு ஒளிமழுங்காத நீலமணிபோன்றவனும் |
| தொண்டர்க்கு இனியானை | பக்தர்களுக்குப் போக்யனுமான எம்பெருமானை |
| கேளா | கேட்கப்பெறாத |
| செவிகள் | காதுகள் |
| செவி அல்ல | காதுகளேயல்ல; |
| கேட்டாம் | (இதை நாம் பெரியோரிடத்துக்) கேட்டிருக்கின்றோம். |

* * *—வாமநமூர்த்தியாய் மஹாபலியின் யஜ்ஞபூமியிலே சென்று மூவடி மண் யாசித்துப் பெற்றுத் திரிவிக்கிரமனாகி மூவுலகங்களையு மளந்துகொண்ட பரமபூஜ்யனும், அநுபவித்து ஒளிமழுங்காத ரத்னம்போலே சீர்மைபெற்றிருப்பவனும், அன்பருடைய நெஞ்சிலே இன்புற இருப்பவனுமான எம்பெருமானுடைய திருப்புகழ்களைக் கேட்பதே செவிபடைத்ததற்குப் பயனாதலால் அப்படி கேட்கப் பெறாத செவிகள் செவியல்ல; நிலத்திலுள்ள பாழிகளோடு அவற்றோடு ஒரு வாசியில்லை யென்றவாறு.

நீள்வான் குறளுருவாய்—புலி, சிங்கம் முதலியவை உடலைச்சுருக்கிக்கொண்டு பதுங்கி நிற்பது எப்படி பாய்வதற்காகவோ அப்படியே எம்பெருமானும் நீளுகைக்காகவே குறளுருவாயின னென்க.

"சுருங்க நின்றதனையும் பெருக்க வளருகைக்கு உறுப்பாக" என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்தியுங் காண்க.

தக்கணைக்கு மிக்கான்—'தக்ஷிணா' என்னும் வடசொல் தக்கணையெனத் திரிந்தது; தக்ஷிணைக்கு மிகச் சிறந்தவனென்றது பரமபூஜ்யனென்பதைச் சொன்னபடி. தருமபுத்திரருடைய ராஜஸூயயாகத்திலே இது தெளிவாம்.

தோளாத மாமணியை—ரத்னத்திற்குத் துளைவிட்டால் நூல் நுழைத்து அநுபவிக்கப்படுவதாகும்; அப்படி அநுபவிக்கப்பட்டு ஒளி குன்றப்பெறும் ரத்னம்போலன்றியே பெட்டியிலிட்டுக் காணவேண்டும்படியான ரத்னம்போலே ஒளிமல்கப் பெற்றிருக்குந் தன்மையைச் சொன்னபடி. "அநாவித்தம் ரத்நம்" என்ற சாகுந்தளநாடக ச்லோகமு முணர்க.

'தொண்டர்க்கினியானைக் கேளாச் செவிகள்' என்றது தொண்டர்க்கினியானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதி விஸ்தாரங்களை இதிஹாஸபுராணாதிமுகமாகக் கேட்கப் பெறாத செவிகள் என்றபடி.

கேட்டாம்—கேட்டோம். .... .... .... (உ)

தூயானைத் தூய மறையானை * தென்னாலி
மேயானை மேவாளுயிருண் டமுதுண்ட
வாயானை * மாலை வணங்கி அவன்பெருமை
பேசாதார் * பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே. (௫)

| | | | |
|---|---|---|---|
| தூயானை | பரமபவித்திரனும் | மாலை | திருமாலை |
| தூய மறையானை | பரிசுத்தமான வேதங்களினால் பிரதிபாதிக்கப் படுபவனும் | வணங்கி | அடிபணிந்து |
| | | அவன் | அப்பெருமானுடைய |
| | | பெருமை | பெருமேன்மையை |
| தென் ஆலி மேயானை | அழகிய திருவாலிப் பதியிலே பொருந்தி வாழ்பவனும் | பேசாதார் | பேசப்பெறாதவர்களுடைய |
| | | பேச்சு | பேச்சுக்களானவை |
| மேவாள் உயிர் உண்டு அமுது உண்ட வாயானை | பொருத்தமற்றவளான பூதனையினுடைய உயிரை உறிஞ்சியுண்டு (அந்த விஷத்திற்கு மாற்றாகத் தாயின்) முலைப்பாலமுதை உண்ட வாயையுடையவனுமான | என்றும் | ஒருநாளும் |
| | | பேச்சு அல்ல | பேச்சுக்களாகமாட்டா; |
| | | கேட்டாம் | (இதனை நாம் பெரியோர்களிடத்துக்) கேட்டிருக்கின்றோம். |

* * *—பரமபரிசுத்தனும் வேதங்களால் ஓதப்படுபவனும் திருவாலித் திருநகரியில் எழுந்தருளியிருப்பவனும் பூதனையின் முலையைச் சுவைத்துயிருண்டு அதற்கு மாற்று மருந்தாக அமுதுண்டவாயனுமான திருமாலை வணங்கி அவனுடைய பெருமைகளைப் பேசுவதே பேச்சாகும்; மற்றதொன்றும் பேச்சாகமாட்டாது என்றதாயிற்று.

தூயான்—அபரிசுத்திக்கு எல்லைநிலமான நம்முடைய உடலிலே உறையச் செய்தேயும் தன்னுடைய பரிசுத்தத்தன்மை குன்றாமலிருப்பவன். தானும் பரிசுத்தனாய்ப் பிறரையும் பரிசுத்தராக்கவல்லவன்.

தூயமறையான்—மறைக்குத் தூய்மையாவது "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" "ஸர்வே வேதா யத்பதமாமநந்தி" இத்யாதிப்படியே எம்பெருமானொருவனையே பிரதிபாதிக்கவற்றாயிருக்கை.

தென்னாலிமேயானை—வேதங்களிலே பரோக்ஷமாகக் கேட்டுப் போகையன்றிக்கே அர்ச்சாவதாரங்களிலே கண்ணாரக் காணலாயிருக்கை.

அவன்பெருமை பேசாதார்பேச்சு என்றும் பேச்சல்ல—அவர்கள் பேச்சோடு கடலோசையோடு ஒரு வாசியில்லையென்க. .... .... .... .... (௫)

கூடா விரணியனைக் கூருகிரால் மார்பிடந்த *
ஓடா வடலரியை உம்பரார்கோமானை *
தோடார் நறுந்துழாய் மார்வனை * ஆர்வத்தால்
பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே. (௬)

| | |
|---|---|
| கூடா | பகைவனுன |
| இரணியனை | ஹிரண்யாஸுரனுடைய |
| மார்வு | மார்பை |
| கூர் உகிரால் | கூர்மைபொருந்திய நகங்களாலே |
| இடந்த | கீண்டருளின, |
| ஓடா | (அவ்விரண்யனுக்குப்) பின்வாங்காத |
| அடல் | வீரம்பொருந்திய |
| அரியை | நரசிங்கமூர்த்தியானவனும் |
| உம்பரார் கோமானை | நித்யஸூரிகட்குத் தலைவனும் |

| | |
|---|---|
| தோடு ஆர் நறு துழாய் மார்வனை | இதழ்கள்மிக்க நறுந்துளப மாலையணிந்த திருமார்பையுடையனுமான எம்பெருமானை |
| ஆர்வத்தால் | அன்புடனே |
| பாடாதார் | பாடப்பெறாதவர்களுடைய |
| பாட்டு | பாட்டுக்களானவை |
| என்றும் | ஒரு நாளும் |
| பாட்டு அல்ல | பாட்டுக்களாகமாட்டா; |
| கேட்டாம் | (என்று நாம் பெரியோர்களிடத்தில்) கேட்டிருக்கிறோம். |

* * *—அநுகூலித்து வாழப்பெறாதே பகைவனுய்ப் பூண்ட நின்ற இரணியனை ஆயுதத்தாலன்றியே திருநகங்களாலே கிழித்தொழித்த விலக்ஷணமான நரஸிம்ஹமூர்த்தியானவனும், இவ்வவதாரத்தாலே பிரமன் முதலியோர்க்குக் குடியிருப்புக்கொடுத்துத் 'தான் அவர்களுக்கு ஸ்வாமி' என்பதை நிலைநிறுத்திக் கொண்டவனும், சிறுக்கனுன ப்ரஹ்லாதாழ்வானுக்கு விரோதியைப்போக்கி மாலையிட்டிருந்தவனுமான ஸர்வேச்வரனை ப்ரேமபரவசராய்ப் பாடுகின்றவர்களின் பாட்டுக்களே பாட்டுக்களாம்; அல்லாதாருடைய பாட்டுக்களெல்லாம் நரியூளையிடுதலோடு வாசியற்றிருக்கு மென்றவாறு.

ஓடாவடலரியை—இரணியனைக்கண்டு பின்வாங்கியோடாத நரசிங்கம்; இனி, ஓடுதல் நடையாடுதலாய், நாட்டில் நடையாடாத [விலக்ஷணமான] நரசிங்கம் என்னவுமாம். .... .... ... .... .... (ச)

மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும் *
கோய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை * மெய்ய மலையானைச் சங்கேந்தும்
கையானை * கைதொழாக் கையல்ல கண்டாமே. (ரு)

| | |
|---|---|
| மை ஆர் கடலும் | கருங்கடலையும் |
| மணி வரையும் | நீலமணிமயமான மலையையும் |
| மா முகிலும் | காளமேகத்தையும் |
| கொய் ஆர் குவளையும் | பறிக்கவேணுமென்று விரும்பத்தக்க நீலோற்பலத்தையும் |
| காயாவும் | காயாம்பூவையும் |
| போன்று | ஒத்து |
| இருண்ட | கறுத்த |
| மெய்யானை | திருமேனியையுடையவனும் |

| | |
|---|---|
| மெய்யம் மலையானை | திருமெய்யமலையில் கோயில் கொண்டிருப்பவனும் |
| சங்கு ஏந்தும் கையானை | திருச்சங்கை ஏந்திக் கொண்டிருக்கின்ற திருக்கையையுடையனுமான பெருமானை |
| தொழா | அஞ்சலிபண்ணாத |
| கை | கைகளானவை |
| கை அல்ல | கைகளேயல்ல; |
| கண்டாம் | (இதனை நாம் நன்கு) அறிவோம். |

* * *—கடல்போலே எல்லைகாண வொண்ணாததாய், மணிமலைபோலே நெஞ்சுக்கு ஆகர்ஷகமாய், காளமேகம்போலே குளிர்ந்து விடாயைத் தீர்ப்பதாய், குவளைப்பூவும் காயாமலரும்போலே வைத்தகண் வாங்காதே பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும்படியான திருமேனியையுடையவனும், இப்படிப்பட்ட திவ்ய மங்கள விக்ரஹத்தைத் திருமெய்யமலையிலே ஆச்ரிதர்க்கு முற்றூட்டாகக் கொடுத்துக் கொண்டிருப்பவனும் சங்கேந்துங் கையனுமான ஸர்வேச்வரனைத் தொழாத கைகள் கையல்ல, உலக்கையே என்றதாயிற்று.

கைதொழாக் கையல்ல—தொழாக்கை கையல்ல என்று அந்வயிப்பது. (ரு)

கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் *
முள்ளார் முளரியுமாம்பலுமுன் கண்டக்கால் *
புள்ளாயோ ரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று *
உள்ளாதா ருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே. (சு)

| | |
|---|---|
| கள் ஆர் | தேன்பொருந்திய |
| துழாயும் | திருத்துழாயையும் |
| கணவலரும் | அலரியும் |
| கூவிளையும் | பில்வபத்திரத்தையும் |
| முள் ஆர் | முட்கள் நிரம்பிய |
| முளரியும் | தாமரைப்பூவையும் |
| ஆம்பலும் | ஆம்பல்மலரையும் |
| முன் | கண்ணெதிரில் |
| கண்டக்கால் | பார்த்தால், (இவை) |

| | |
|---|---|
| புள் ஆய் ஓர் ஏனம் ஆய் புக்கு இடந்தான் பொன் அடிக்கு என்று | ஹம்ஸரூபியாய் அவதரித்தவனும் வராஹ ரூபியாயவதரித்துப் பூமியைப் பேநித்தெடுத்தவனுமான எம்பெருமானுடைய திருவடிகளுக்கு உரியவையென்று |
| உள்ளாதார் | நினையாதவர்களுடைய |
| உள்ளத்தை | நெஞ்சை |
| உள்ளம் ஆ கொள்ளோம் | நெஞ்சாகக் கொள்ள மாட்டோம். |

* * *—திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத்தக்கது' என்று அத்யவஸாயங் கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ளமாட்டோம், நஞ்சாகவே கொள்வோமென்றவாறு.

இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதீய வஸ்துக்களும் கூட்டி யெடுக்கப்பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்க வேணுமென்கிற சுத்த பாவத்துடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை; 'செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவே யிருக்கவேணுமென்கிற நியதியில்லை, ஏதேனுமொரு பூவாயிருக்கலாமென்பது தோற்றுவிக்கப்படும். திருவாய்மொழியில் [1—6—1.] "பரிவதிலீசனைப்பாடி விரிவதுமேவலுறுவீர்!, பிரிவகையின்றி நன்னீர் தூய்ப் புரிவதுவும் புகை பூவே" என்ற பாசுரத்தை ஸ்ரீபட்டர் உபந்யஸிக்கும்போது "புரிவதுவும் புகை பூவே" என்ற சப்தஸ்வாரஸ்யத்தைத் திருவுள்ளம்பற்றி 'இவ்விடத்தில் அகில்புகை என்றுவது கருமுகைப்பூ என்றுவது

சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒரு புஷ்பமும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுகையிட்டுப் புகைக்கலாம், கண்டகாலிப் பூவும் சூட்டலாம்' என்று உபந்யஸித்தாராம்; அதை நஞ்சீயர் கேட்டு "ந கண்டகாரிகா புஷ்பம் தேவாய விநிவேதயேத்" [கண்டகாலிப்பூவை எம்பெருமானுக்குச் சாத்தலாகாது] என்று சாஸ்த்ரம் மறுத்திருக்க, இப்படி அருளிச் செய்யலாமோ?' என்று கேட்டார்; அதற்கு பட்டர் அருளிச்செய்த ரஸோக்தி:-"சாஸ்த்ரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுத்தபடியன்று; அடியார்கள் அப்பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே என்று பக்தர்கள் பக்கலில் தயையினால் சாஸ்த்ரம் நிஷேதித்ததேயன்றி எம்பெருமானுக்கு ஆகாத பூ எதுவுமில்லை" என்றும். திருவாய்மொழிக்குப் பதினெண்ணாயிரமுரைத்த பரகால ஸ்வாமி இந்த ஸம்வாதத்தைக்கண்டு ரஸியாமல் திரஸ்கரித்துரைத்தது கிடக்க. "ஸதாம் ஹ்ருத்யஸ்தாநாம் நாஸாஸ்த்ரம் நைவ ச க்ரம:" [பக்தி எல்லைகடந்தால் நூல் வரம்பில்லை] என்றதையும் அருளிச்செயல்தொடையழகையும் நோக்கி ரஸப்பொருளுரைப்பதில் குதர்க்கவாதம் செய்கை விவேகிகட்குப் பணியன்று.

இப்பாட்டின் வியாக்கியானத்திலே பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வது காண்மின்:—"ஸ்நேஹமில்லாதவன் இடில் திருத்துழாயுமாகாது? ஸ்நேஹத்தோடே இடில் அலரியும் ஆகும்."

முற்காலத்தில் ஸ்ரீ ஜகந்நாதத்திலெம்பெருமான் செண்பகப்பூவை உகந்து சாத்திக்கொள்வது வழக்கமாயிருந்ததனால் சில ராஜகுமாரர்கள் எம்பெருமானுக்குச் செண்பகப்பூ ஸம்பாதித்து ஸமர்ப்பிக்கவேணுமென்று கடைவீதி யேறச் சென்றனர்; அங்குப் பூவெல்லாம் விற்றுப்போய் ஒரே ஒரு பூ மாத்திரம் மிகுந்திருந்தது. விலைக்கு வாங்கவந்த ராஜகுமாரர்கள் செல்வச் செருக்குடையவர்களாதலால் ஒவ்வொருவரும் இப்பூவை தாமே பெற்றுப் போய் ஸமர்ப்பிக்கவேணுமென்ற ஆவல்கொண்டவராகி மேன்மேலும் விலையை ஏற்றிக்கொண்டே வந்தார்கள். கடைசியாக அளவற்ற விலைகொடுத்து ஒரு ராஜபுத்திரன் அதை வாங்கிப் பெருமாளுக்குச் சாத்த, அன்றிரா அவனுடைய கனவிலே எம்பெருமான் காட்சி தந்து 'நீ இட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்கவொண்ணுததாயிருக்கிறது!' என்றருளிச் செய்தான்—என்ற இதிஹாஸமும் வியாக்கியானத்திலுள்ளது. இதனால், ஸ்நேஹபூர்வமாகப் பூவிட்டால் அது எம்பெருமானுக்கு அலப்யலாபமாயிருக்குமென்றதாயிற்று.

புள்ளாய் ஓரேனமாய்ப்புக்கிடந்தான்—ஏதேனும் பக்ஷியாகவும் மிருகமாகவும் தன்னை அமைத்துக்கொண்ட எம்பெருமானுக்கு ஆகாதது எதுவுமில்லையென்று காட்டுகிறபடி. பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்கும் ஆகாதது இல்லையிறே; அவன் ஜந்மத்தில் நியமங் கொள்ளாதாப்போலே உகந்து கொள்ளுகிற பதார்த்தங்களிலும் நியமங்கொள்ளானென்கை.

"பொன்னடிக்கென்று உள்ளாதாருள்ளத்தை" என்றதனால், கீழ்ச்சொன்ன புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு போய் ஸமர்ப்பிக்கவேணுமென்கிற நிர்ப்பந்தமுமில்லை, 'இவை எம்பெருமானுக்கு ஆம்' என்று நெஞ்சால் நினைக்குமளவும் போதும் என்பது பெறப்படும். "நினைவே அமையும்; செயல் மிகை" என்பர் பெரியவாச்சான் பிள்ளையும். ... ... .... (௬)

கனையார் கடலும் கருவிளையும் காயாவும்
அனையானை * அன்பினா லார்வத்தால் * என்றும்
சுனையார் மலரிட்டுத் தொண்டராய் நின்று *
நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல கண்டாமே. (௭)

| | | | |
|---|---|---|---|
| கனை ஆர் கடலும் | ஒலிமிக்க கடலையும் | தொண்டர் ஆய் நின்று | தொண்டர்களாயிருந்து கொண்டு |
| கருவிளையும் | கருவிளைப்பூவையும் | என்றும் | எப்போதும் |
| காயாவும் | காயாம்பூவையும் | நினையாதார் | நினைக்கப்பெறாதவர்களினுடைய |
| அனையானை | ஒத்திருக்கின்ற எம்பெருமானை | நெஞ்சு | நெஞ்சானது |
| அன்பினால் ஆர்வத்தால் | அன்போடும் ஆற்றாமையோடும் | என்றும் | ஒருநாளும் |
| சுனை ஆர் மலர் இட்டு | தடாகங்களில் நிரம்பிய பூக்களைக் கொணர்ந்து ஸமர்ப்பித்து— | நெஞ்சு அல்ல | நெஞ்சாகமாட்டாது; |
| | | கண்டாம் | (இதனை நாம் நன்கு) அறிவோம். |

* * *—கடல், கருவிளைப்பூ, காயாம்பூ என்னுமிவற்றை ஒருபுடை ஒப்பாகச் சொல்லலாம்படியான திருமேனிபடைத்த எம்பெருமான் பக்கலில் ப்ரேமவிசேஷத்தோடே, சுனைகளில் ஏற்கனவே நிறைந்துள்ள புஷ்பங்களைக் கொணர்ந்து ஸமர்ப்பித்து அடிமைத் தொழிலுக்கு இசைந்து அவனையே சிந்தித்திருக்கமாட்டாத நெஞ்சு நெஞ்சேயன்று யென்றதாயிற்று.

அன்பினால் ஆர்வத்தால்—அன்பாவது ஸ்நேஹம்; ஆர்வமாவது, பெறாவிடில் முடிந்துபோம்படியான ஆற்றாமை.

சுனை ஆர் மலர்—இவன் புதிதாகப் புஷ்பங்களை ஸ்ருஷ்டிக்கவேண்டிய அருமையில்லை; ஏற்கனவே சுனைகளில் பூக்கள் நிரம்பியுள்ளன? இசைவுதானே வேண்டுவது என்று காட்டுகிறபடி. "தாமுளரே தம்முள்ள முள்ளுளதே தாமரையின் பூவுளதே ஏத்தும் பொழுதுண்டே" என்ற பூதத்தாழ்வார் பாசுரம் இங்கு நினைக்கத்தக்கது. .... .... .... (௭)

வெறியார் கருங்கூந்தலாய்ச்சியர் வைத்த *
உறியார் நறுவெண்ணெய் தானுகந்துண்ட
சிறியானை * செங்கணெடியானைச் சிந்தித்
தறியாதார் * என்று மறியாதார் கண்டாமே. (௮)

| | | | |
|---|---|---|---|
| வெறி ஆர் | பரிமளம்மிக்க | சிறியானை | சிறியவனும் |
| கரு கூந்தல் | கரிய கூந்தலையுடைய | செம் கண் | சிவந்த திருக்கண்களை யுடையனுமான |
| ஆய்ச்சியர் | இடைச்சிகளாலே | நெடியானை | ஸர்வேச்வரனை |
| வைத்த | சேமித்துவைக்கப்பட்டதாய் | சிந்தித்து அறியாதார் | நெஞ்சாலும் நினைத்தறியாதவர்கள் |
| உறி ஆர் | உறிகளிலே பொருந்தியதாய் | என்றும் | எப்போதும் |
| நறு | மணம்மிக்கதான | அறியாதார் | அவிவேகிகளேயாவர் |
| வெண்ணெய் | வெண்ணெயை | கண்டாம் | நன்கு அறிவோம். |
| தான் உகந்து உண்ட | தான் விரும்பி யமுதுசெய்த | | |

* * *—இடைச்சிகள் உறிகளிலே சேமித்துவைத்த நறு வெண்ணெயை ஆச்ரித த்ரவ்யமாகையாலே பெறாப் பேறு பெற்றானாய் வாரியமுதுசெய்த சிறு பிள்ளையும் செந்தாமரைக் கண்ணனுமான ஸர்வேச்வரனை நினைத்தறியாதவர்கள் எத்தனையேனும் சாஸ்த்ரஜ்ஞானத்தாலே சிரியர்களாயினும் அறிவில்லாதவர்களே யாவர் என்றாராயிற்று.

"ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிறபடியே எம்பெருமானை அறியுமதுவே அறிவாதலால் "செங்கணெடியானைச் சிந்தித்தறி யாதார் என்றுமறியாதார்" எனக் குறைவில்லையென்க. .... .... (அ)

தேனோடு வண்டாலும் திருமாலிருஞ்சோலை *
தானிடமாக்கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய் *
ஆன்விடையே ழன்றடர்த்தாற் காளானாரல்லாதார் *
மானிடவரல்லரேன் றென்மனத்தே வைத்தேனே! (கூ)

| | | | |
|---|---|---|---|
| வண்டு | வண்டுகளானவை | கண்ணிக்காய் | கண்களையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்காக. |
| தேனோடு | வாயில் தேனோடே | ஆன்விடை எழ் | எழுரிஷபங்களை |
| ஆலும் | ஆரவாரிக்கின்ற | அடர்த்தாற்கு | வலியடக்கின பெருமானுக்கு |
| திருமாலிருஞ் சோலை | திருமாலிருஞ்சோலை மலையை | ஆள் ஆனார் அல்லாதார் | அடிமைப்பட்டவர்கள் தவிரமற்றையோர் |
| தான் இடம் ஆ கொண்டான் | தனக்கு இருப்பிடமாக அமைத்துக்கொண்டவனும், | மானிடவர் அல்லர் என்று | மநுஷ்யகோடியில் சேர்ந்தவர்களல்ல வென்று |
| அன்று | முன்பொருகாலத்தில் | என் மனத்து | என்னெஞ்சிலே |
| தட | விசாலமாய் | வைத்தேன் | உறுதியாகநாட்டினேன். |
| மலர் | குவளைமலர்போன்ற | | |

* * *—வண்டுகள் தேனுண்ட வாயோடே முரலப்பெற்ற திருமாலிருஞ் சோலைமலையைக் கோயிலாகக்கொண்டு வாழ்பவனும், அழகிற்சிறந்த நப்பின்னைப் பிராட்டியை மணம்புணர்ந்து கொள்ளவேண்டி, அவளது தந்தை கர்யாசுல்க

மாகக் குறித்திருந்தபடி. மிகக் கொடிய ரிஷபங்களேழையும் வலியடக்கினவனு மான எம்பெருமானுக்கு ஆட்படாதவர்கள் மநுஷ்யயோநியிற் பிறந்துவைத்தும் உணர்வின் பயன் பெறாதவர்களாகையாலே மானிடவரல்லர் என்று நான் ஸித்தாந்தம் செய்துகொண்டேன் என்கிறார்.

உணவுகளையுண்டு வயிறு நிரப்புகை, விஷயபோகங்கள் செய்கை, உறங்குகை முதலிய காரியங்கள் பசுக்களுக்கும் மானிடர்க்கும் பொதுவாகையாலே, இனி மானிடரென்கிற ஏற்றம் பெறவேண்டில் எம்பெருமானுக்கு ஆட்படுகையொன்றினால் தான் ஏற்றம் பெறவேண்டும்; அஃதில்லாதார் மானிடவரல்லர் என்னத் தட்டில்லை. "என் மனத்தே வைத்தேனே" என்கையாலே, இது எவ்விதத்தாலும் மாறமாட்டாத ஸித்தாந்தம் என்றதாம். ... .... .... .... (௯)

மெய்ந்நின்ற பாவமகல * திருமாலைக்
கைந்நின்ற வாழியான் சூழும் கழல்சூடி *
கைந்நின்ற வேற்கைக் கலியனொலிமாலை *
ஐயொன்றுமைந்து மிவைபாடி யாடுமினே. (௧௦)

| | | | |
|---|---|---|---|
| மெய் நின்ற | ப்ரக்ருதியிலே அநுபவிக்க வேண்டிநின்ற | சூடி | முடிமேற்கொள்ளுமவராய் |
| பாவம் | பாவங்கள் | கை நின்ற வேல் கை | கையும் வேற்படையுமாய் நிற்பவரான |
| அகல | ஒழிவதற்காக, | கலியன் | திருமங்கையாழ்வார் |
| கை நின்ற ஆழியான் | திருக்கையில் பொருந்திய திருவாழியையுடையனான | ஒலி | அருளிச்செய்த |
| திரு மாலை | திருமகள் கொழுநனுடைய | மாலை | சொல்மாலையாகிய |
| சூழும் கழல் | ஸர்வவ்யாபியான திருவடிகளை | ஐ ஒன்றும் ஐந்தும் இவை | இப்பத்துப்பாசுரங்களையும் |
| | | பாடி | வாயாரப்பாடி |
| | | ஆடுமின் | கீர்த்தனம்பண்ணுங்கோள். |

* * *—அடியார்களின் வினையை அகற்றுகைக்கு எப்போதும் கைகழலாநேமியானுயிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளைத் தலைமேற்புனைந்து பாவங்கள் தொலையப்பெற்ற கொற்றவேற்பரகாலன் கலியன் சொன்ன இத்திருமொழியைப் பாடியாடுங்கோளென்கிறார். பாடினால் வாக்கு ஸபலமாகும்; ஆடினால் சரீரம் ஸபலமாகும்; பாடுதலுமாடுதலும் மனப்பூர்வமாகவே உண்டாகவேண்டுதலால் அர்த்தாத் அந்தஃகரணமும் ஸபலமாகுமென்று நாட்டார்க்கு வழிகாட்டினாராயிற்று. .... .... .... .... .... .... (௧௦)

அடிவரவு:—நீணாகம், நீள்வான், தூபால், கூடா. மையார், கள்ளார், கனைவெறி, தேன், செய், மாற்றம்.

ஏழாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

## பதினோராம்பத்து—எட்டாந்திருமொழி,

# மாற்றமுளவாகிலும்.

**உரையவதாரிகை:**—அவதரித்தபோதே தொடங்கி பகவத்விஷயத்தில் பக்திபண்ணாமல் முதலிற் உலகவாழ்க்கையில் ஊன்றியவராய் அதற்கு ஏற்ற தொழில்களையே செய்துவந்தவரான இவ்வாழ்வார்க்கு எம்பெருமான் தனது திருவருளால் வலியவந்து காட்சிதந்து திருமந்திரத்தை உபதேசித்து இவரை ஆட்கொள்ள, அதனால் தெளிவடைந்து தமக்கு அப்பெருமான் செய்த திருமந்திரோபதேசமாகிய மஹோபகாரத்தை மறவாது தமது நன்றியறிவுதோன்ற அதனை முதல்திருமொழியிலே கொண்டாடிப்பேசி, அதன் பின் அந்த எம்பெருமான் தனது நிர்ஹேதுகக்ருபையினால் உலகத்தைச் சீர்திருத்தி உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு அடியவர்க்கு எளியனாய்த் தனது தலைமைதோன்ற எழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்களிலெல்லாஞ் சென்று அந்த எம்பெருமானை அநுபவிப்பவராய் வடநாடு முதல் மலைநாடு ஈறாகப் பலநாடுகளிலுமுள்ள திருமால் திருப்பதிகள் பலவற்றைக் குறித்துப் பலதிருமொழிகள் பாடி, அத்திருமாலின் அர்ச்சாவதாரங்களுக்கு அடியான ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களின் குணசேஷ்டிதங்களைக் குறித்து உள்ளங்கரைந்து சிலதிருமொழிகள் விண்ணப்பஞ்செய்து, இத்திருமொழியோடு தமது பெரிய திவ்யப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகின்றார்.

பிறவித்துன்பம் மிக்க கொடிது என்பதையும், அது அவசியம் போக்கிக்கொள்ளவேண்டியதொன்று என்பதையும், அது தம்மால் ஒழிக்கவொண்ணாதபடியுள்ளதனால் அதற்குத்தாம் மிக அஞ்சுகிறபடியையும், எம்பெருமானது திருவடிகளிற் சரணம் புகுந்தே அது தவிர்க்கக் கடவதாயிருக்கிறபடியையும் அப்பெருமானை முன்னிலைப்படுத்தி அவன் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்து 'உன்னை இடைவிடாது அநுபவிப்பதற்குத் தடையாகவுள்ள தேஹஸம்பந்தத்தை அடியேனுக்குப் போக்கியருளவேணும்' என்று அவன் திருவடிகளிலே விழுந்து வேண்டுகின்றார் இத்திருமொழியில்.

பயிர் செய்பவன் பயிர்த்தலையிலே குடிசைகட்டிக்கொண்டு அதில் இருந்து அப்பயிரைப் பாதுகாப்பதுபோல எம்பெருமான் இந்நிலவுலகத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற திவ்யதேசங்களுக்குள் தலைமைபெற்றதான திருவரங்கமும், இவ்வாழ்வாரது திருவவதாரஸ்தலத்துக்கு அணித்தான திருவாலியும் ஆகிய சோழநாட்டுத் திருப்பதிகளிரண்டும் இத்திருமொழியிலே எடுத்தாளப்பட்டுள்ளமை அறிக. .... .... .... .... *

மாற்றமுள வாகிலும் சொல்லுவன் * மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொல்? என்றின்னம் *
ஆற்றங்கரை வாழ்மரம்போ லஞ்சுகின்றேன் *
நாற்றச்சுவையூ றொலியாகிய நம்பீ! (க)

- நாற்றம் சுவை ஊறு ஒலி ஆகிய நம்பீ — கந்தம் ரஸம் ஸ்பர்சம் சப்தம் என்னும் புலன்களுக்கு உரியனான எம்பெருமானே!
- மாற்றம் உள ஆகிலும் — ('நீ அடியேனை ஆட்கொண்டருளினாயில்லை' என்று நான் உன்மேற் குறைகூறும் வார்த்தைகளெல்லாம்) மாறாக ('நீதானே ஆட்பட்டு உய்ந்தாயில்லை' என்று என்மேற்குற்றமாக நீ) சொல்லத்தக்க வார்த்தைகள் பல உள்ளனவேயாகிலும்
- சொல்லுவன் — (அவைநிற்க) யான் ஒன்று கூறுவேன்;

(அது யாதெனில்;)

- மக்கள் தோற்றம் குழி இன்னம் தோற்றுவிப்பாய்கொல் என்று — (உன்னைச்சரணமடையாத ஸாதாரண) மனிதர்கள் (கர்மவசத்தால்) பிறக்குமிடமான கர்ப்பஸ்தானத்திலே என்னை இன்னமும் பிறக்கும்படி செய்திடுவையோ என்றுகருதி
- ஆற்றங் கரை வாழ் மரம் போல் — ஆற்றின் கரையிலேயுள்ள மரம்போன்றவனாகி
- அஞ்சுகின்றேன் — (வரக்கடவதான அபாயத்தைக் குறித்து எப்பொழுதும்) பயப்படுகின்றேன்.

* * *—மாற்றமுளவாகிலுஞ் சொல்லுவன் — மாறாகக் கூறுவது மாற்றம்; மறுவார்த்தை; அதாவது எதிர்மொழி, ப்ரத்யுத்தரம். எம்பெருமானே! என்னுடைய வாதங்களுக்கெல்லாம் நீ பிரதிவாதம் கூறுப்படியான ஆற்றலுடையாய் என்பது அறிவேன்; ஆனாலும் ஒன்று சொல்லுவேன் கேளாய் என்கிறார்.

ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் ஸம்வாதம் நிகழும்வகை;—

ஜீவாத்மா—நித்யர்கள் போலவே பரமபதத்தில் எப்பொழுதும் உன்னையடுத்திருந்து நித்யாநந்தத்தை அநுபவிக்கக்கூடியவையான ஜீவகோடிகள் அவ்வியல்பைத் தொன்று தொட்டு இழந்து இப்பிரபஞ்சத்தில் இழிவடைய வேண்டுவதென்?

பரமாத்மா—இவ்வுலகத்து ஜீவகோடிகள் என்னைப் பராமுகஞ்செய்து பிரபஞ்ச விஷயங்களில் இழிந்து அங்கு ஆழங்காற்பட்டுப் புண்யபாபரூபமான கருமங்களைச் செய்து அக்கர்மபரம்பரையானது ஜந்மபரம்பரையிலே செலுத்த அவ்வழிகளால் மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்துவருந்துமிடத்தும் அப்பிறவித்துயர்க்கு அஞ்சி என்னைச் சரணமடையாமலே அங்ஙனம் அழிவுறுகின்றன; கருமங்களைச் செய்தவர்களிடத்திலே அவற்றின் பயன் சென்று சேரக்கடவதன்றோ? இதில் என்குற்றம் ஒன்றுமில்லையே;

ஜீவாத்மா—விருப்புவெறுப்புக்களுக்கு அடியான மனம் உன் அதீனமாதலால் உன்பக்கல் விருப்பங்கொண்டிலோமென்று எம்மேல் நீ குற்றஞ்சொல்லக் காரணமில்லையே; இன்னமும், கர்மஸ்வரூபத்தைப் பார்க்குமிடத்தில் தொழில்

வடிவமாதலால் உடம்பு அழியுந்தன்மையதான அது உனது நிக்ரஹாநுக்ரஹ ரூபமாய் உன் திருவுள்ளத்தில் நிலைநின்றே பயனை விளைத்தால் ஸர்வேச்வரனான நீ அதனைப் பொறுத்தருளினால் அது தீர்ந்திடுமே;—அங்ஙனஞ் செய்தருளுமிடத்து உன்னைத் தடுப்பவருண்டோ? பாதந்திரமான ஜீவகோடிகளுக்கு ஸ்வாதந்திரியமில்லையே; உடைமையைப் பாதுகாக்குங்கடமை உடையவனதன்றோ? ஆகவே, எங்களிழவுக்கு உன் அநாதரமேகாரணம்;

பரமாத்மா—நீங்கள் சேதநராதலால் நீங்களே முயற்சிசெய்து என்பக்கல் வரவேண்டாவோ? நான்முன்னமே உங்கட்கு ஜ்ஞானசக்திகளைத் தந்துள்ளேனே; அப்படியிருக்க என்மேல் வீண்பழி சுமத்துவது எதுக்கு?

இங்ஙனம் எம்பெருமானால் நல்லறிவருளப்பெற்ற ஆழ்வார்தாமும் முற்றுணர்வுடையனான எம்பெருமானும் வாதிப்ரதிவாதிகள் போன்று வேதவேதாந்தங்களைக்கொண்டு கர்மஸ்வரூபத்தையும் பரப்ரஹ்மஸ்வரூபத்தையும் ஜீவாத்மஸ்வரூபத்தையும்பற்றி நின்று பேசிக்கொண்டு சென்றால் அதற்கு ஓர் எல்லையில்லாமையாலும், அவ்வாதம் தமது பிறவித்துயர் தீர்வதற்குக் காரணமாகாதாலும் அதனை விட்டுக் காரியமே கண்ணாக மாற்றமுளவாகிலும் சொல்லுவன் என்று தொடங்கித் தம் குறையையும் வேண்டுகோளையும் விண்ணப்பஞ்செய்கிறார். "நிரையவித்து நீராடலாகா உரைப்பா, ருரையவித் தொன்றுஞ்சொல்லில்லை" என்றபடி வாதப்ரதிவாதங்கட்கு ஒரு முடிவில்லையாகையால் மாற்றமுளவாகிலும் எனப்பட்டது.

ஆற்றங்கரையிலுள்ள மரம் அந்த ஆற்றில் வெள்ளம் பெருகித் தன் வேரை அகழ்ந்திடத் தொடங்கினால் அவ்வபாயத்தைப் பரிஹரித்துக் கொள்ளவாவது அத்தீங்குக்கு இடமின்றி விலகியிருக்கவாவது அத்துயரைத் தீர்ப்பதற்குப் பிறரைத் துணையாகக் கூப்பிடவாவது மாட்டாமல் முறிந்துவிழுந்து அழிவுக்குள்ளாகும். தமது நிலைமை எப்போதும் அபாயத்துக்கு இடமாதல் பற்றியும் தமக்கு வரும் துன்பத்தைத் தாமே போக்கிக்கொள்ள மாட்டாமைபற்றியும் தமக்கு அந்த மரத்தை உவமைகூறினார். ஆற்றங்கரைமரம் எப்போதும் அபாயத்துக்கு இடமாகுமென்பதை "ஆற்றங்கரையின்மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" என்றதனாலுமறிக.

சேதநரான தமக்கு அசேதநமான மரத்தை உவமைகூறியதனால் தமக்கு உண்டான உணர்வு அஞ்சுவதற்கே காரணமாவதன்றி அபாயத்தை அகற்றுதற்குக் காரணமாகாதென்றவாறும். ஆகவே அந்த மரத்தினது நிலைமையிற்காட்டிலும் தமது நிலைமைக்கு உள்ள தாழ்வைப் புலப்படுத்தியபடி. இதுபற்றியே 'மரம்போன்றேன்' என்னாமல் 'மரம்போலஞ்சுகின்றேன்' என்றார். மரத்துக்கு அபாயமுளதேனும் அச்சமில்லை, அசேதநமாதலால்; தமக்கோ அபாயத்தோடு அச்சமுமுண்டு, சைதந்யமுள்ளமையால்—என வேறுபாடு காண்க.

எம்பெருமானுடைய நியமனத்தால் அவதரித்து அவனுடைய திருவருளால் தத்துவஞானம் உதிக்கப் பெற்றுச் சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அவனுக்கே தொண்டு பூண்டிருக்கின்ற ஆழ்வார் இங்ஙனம் அஞ்ச வேண்டுவ

இல்லை யாயினும், எம்பெருமான் உபேக்ஷித்தால் இங்கேயேகிடந்து வருந்தவும் அவன் ஆதரித்தால் அங்கேபோய்ப் பேரின்பம் பெறவுமாம்படி பொதுவாகவுள்ள இந்நிலவுலகத்து உடல்வாழ்க்கையின் தன்மையிற் கருத்து ஊன்றியதனாலும், தமக்கு உண்டான ஞானம் விரைவில் வீடுபெறும்படி தூண்டுதலாலும், நஞ்சு இல்லாத நீர்ப்பாம்பும் பாம்பென்ற மாத்திரத்தால் அச்சந்தருதல்போலக் கர்ம காரியமல்லாத தமது பிறப்பும் பிறப்பென்ற மாத்திரத்தால் அச்சந்தருதலாலும், ஸாமாந்யரான மனிதர் அஞ்சுவதுபோலவே தாமும் அஞ்சுகின்றார்; "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை அஞ்சுவ, தஞ்சலறிவார் தொழில்" அன்றோ?

நாற்றச்சுவையூறொலியாகிய நம்பி! = சப்தாதி விஷயங்களெல்லாம் எம்பெருமானுக்கு அதீனமாகவே யிருத்தலால் அவ்வொற்றுமைபற்றிய தாம் இவ்விளி. அங்ஙனமுள்ளவனான நீ, புலன்வழிச்சென்றேனென்று என்மேற்குறை சொல்லக் காரணமில்லையென்பது உட்கோள். எனவே, "ஜயக்ருத் பயநாசந:" என்கிறபடியே அச்சத்துக்குக் காரணமும் பரிஹாரமும் நீயேயென்றவாறு; உன்னிடத்தினின்றும் என்னையகற்றுகைக்குக் காரணமான சப்தாதி விஷயங்கட்கெல்லாம் நீயே நியாமகனென்றபடி.

மாற்றம் என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலால் 'உள' என்னும் பன்மைமுற்றைக்கொண்டது. பாட்டின்முடிவில் நம்பி! என்பதும் பாடம். (க)

சீற்றமுள வாகிலும் செப்புவன் * மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொலென்றஞ்சி *
காற்றத் திடைப்பட்ட கலவர்மனம்போல் *
ஆற்றத் துளங்காநிற்ப னாழிவலவா! (உ)

| | | | |
|---|---|---|---|
| ஆழி வலவா | சக்கரப்படையைப் பிரயோகித்தலில் வல்லவனே! | மக்கள் தோற்றம் குழி தோற்றுவிப்பாய் கொல் என்று அஞ்சி | மனிதர்கள் (கர்மாதீனமாகப்) பிறக்கும் பிறவியிலே என்னையும் புகுவிப்பையோ வென்று எண்ணி அச்சமுற்று |
| சீற்றம் உள ஆகிலும் | நீ கோபிக்கும்படியான குற்றங்கள் (என்னிடம்) உள்ளனவானாலும் | காற்றத்து இடை பட்ட கலவர் மனம் போல் | பெருங்காற்றில் அகப்பட்டுக் கொண்ட மரக்கலத்திலே யுள்ளாரது மனம்போல |
| செப்புவன் | (உன்னையன்றி எனக்கு வேறுகதியில்லையாகையால் உன்பக்கல் என்குறையைச்) சொல்லிக்கொள்வேன்; | ஆற்ற | மிகவும் |
| | | துளங்காநிற்பன் | நடுங்கிநிற்பேன். |

* * *—இம் 'மாற்றமுளவாகிலுஞ் சொல்லுவன்' என்று தொடங்கித் தாம் விண்ணப்பஞ் செய்தபோது 'ஆழ்வீர்! நீர் பலபிழைகளையுடையரா யிருந்தும அவற்றைபுணராமல் உம்மை நல்லவர்போலக் கொண்டு, கண்ணோட்ட மில்லாத வனைக் கூறுமாறுபோல என்னைத் 'தோற்றக்குழியின்னைத் தோற்றுவிப்பாய்கொல்' எனக் குறைசொல்லுவதென்?' என்று எம்பெருமான் தமது பிழைகளைக்

குறித்துச் சீறியதாகக்கொண்ட ஆழ்வார் 'சீற்றமுளவாகிலுஞ் செப்புவன்' என்கிறார். நீ சீற்றங்கொள்ளும்படியான பிழைகள் என்பக்கல் இல்லாமையாற் சொல்லுகிறேனல்லேன்; உன்னையன்றி எனக்கு வேறுகதியில்லாமையாலே உன்னிடமே சரண்புக்குக் கூறுகிறேனென்றபடி. எம்பெருமான் பொறுக்கவொண்ணாது திருவுள்ளத்தில் கோபங்கொள்ளும்படி நிலவுலகத்தாரிடம் நேர்கின்ற குற்றங்கள்—பகவதபசாரமும் பாகவதாபசாரமும் பிறவுமாம். எம்பெருமானுக்கே அடிமைப்பட்டதான ஆத்மவஸ்துவை எனது என்று ஸ்வதந்த்ரம் பாராட்டுதலும், அப்பெருமான் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ்செய்து தருமத்தை நிலைநிறுத்தி உலகத்தைச் சீர்திருத்துதற் பொருட்டுத் தன்ஸங்கல்பத்தினாற் கொள்ளும் திருவவதாரங்களைக் கருமவசத்தாலாகும் பிறப்போடொப்ப மதித்தலும், அவனது பிரவேசம் பெற்ற அர்ச்சாவிக்ரஹங்களைக் கல் பொன் வெள்ளி செம்பு என்று அவமதித்தலும் முதலானவை பகவதபசாரங்களாகும். அப்பெருமானடியார்களை நன்குமதியாது அவர்கள் பக்கல்செய்யும் பொல்லாங்குகள் பாகவதாபசாரங்களாகும். பிறவுயிர்களுக்கு நலிவு செய்தலும், பகவானுடைய ஆஜ்ஞாரூபமான வேதசாஸ்திரவிதிகளின்படி நடவாதிருத்தலும், சப்தாதி விஷயாந்தரங்களிலே ஊன்றி எம்பெருமான்பக்கல் பராமுகஞ் செய்தலும் முதலானவை 'பிற' எனப்படுமபசாரங்களாகும். இப்படிப்பட்ட அபசாரங்கள் இவ்விருள்தருமா ஞாலத்திலுள்ள ஆழ்வார்தமக்கும் நேரக்கூடியனவாகக் கொண்டு, இவைநிமித்தமாக அடியேன்மீது சீற்றமுண்டானாலும் வேறுபுகலிடமில்லாமையாலே, * குற்றம் பார்க்கில் சுற்றமில்லையாதலால் என்பிழைகளைப் பாராட்டாது பொறுத்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறேனென்பதாக முதலடியின் கருத்தாக்காண்க.

சீற்றமுளவாகிலுஞ்செப்புவன் என்றவிதற்கு ஸ்ரீவசநபூஷண ரீதியிலே யோஜநாபேதமான அர்த்தமுமொன்றுண்டு; சீற்றமுளவாகிலும்—('மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொல்' என்று யான் உன்மேற் குறைகூறுவதனால் உனக்குக்) கோபமுண்டாகுமானாலும், செப்புவன்—(சீற்றத்தை ஜீவிக்கவொட்டாத உன்னுடைய க்ருபையையும், சீற்றங்கொண்டு அஞ்சி வாய்மூடியிருக்கவொண்ணாதபடி கரையழிந்து செல்லுகிற ஸம்ஸார ஆர்த்தியையும், சீறியெடுத்து எறியிலும் வேறுபுகலில்லாமையாகிற அநந்ய கதித்வத்தையுங்கொண்டு) விண்ணப்பஞ் செய்கிறேன் என்பதாம். 'கீழ்ப்பண்ணின அபசாரங்களாலே சீற்றமிருந்தாலும்' என்பது பெரியவாச்சான்பிள்ளை கொண்ட பொருள்; 'இப்போது அடியேன் சொல்லப்போகிற வார்த்தையினாலே சீற்றமுண்டானாலும்' என்பது பிள்ளைலோகாசாரியர் கொண்ட பொருள். இவ்வளவே வாசி. [ஸ்ரீவசநபூஷணம் மூன்றாம் ப்ரகரணத்தின் முடிவில்—"சீற்றமுள வென்ற அநந்தரத்திலே இவ்வர்த்தத்தைத் தாமே அருளிச்செய்தாரிறே. சீற்றமுண்டென்றறிந்தாற் சொல்லும்படி யென்னென்னில்; அருளும் ஆர்த்தியும் அநந்யகதித்வமும் சொல்லப்பண்ணும். சீறினாலும் காலைக்கட்டிக் கொள்ளலாம்படியிருப்பானொரு

வனைப் பெற்றால் எல்லாம் சொல்லலாமிறே" என்றுள்ள ஸ்ரீஸூக்திகளும் அவற்றின் வியாக்கியானமும் இங்கு அறியத்தக்கன.]

"மக்கள் தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல்" என்றதன் கருத்தாவது— நீ சிறவேண்டும்படியான கருமங்களை நான்செய்து அவற்றின் பயனாகச் சிலபிறப்புக்களிலே நான் செல்லநேர்ந்தால் தடுத்து என்னை மீட்காமல் அநுமதிபண்ணி உதாஸீநர்போலே யிருந்துவிடுகிறாயோ? என்பதாம். விலக்காமையே தோற்றுவிப்பதாகக் கூறப்படுகிறது. பரமாத்மா கைவிடுதலே ஜீவாத்மாவின் பிறவித்துயர்க்கு ஹேது. கிணற்றில்விழுங் குழந்தையைத் தாய் எடாதிருந்தால் தாயே தள்ளினாள் என்கைக்குத் தட்டில்லையே.

இப்பாட்டில் தம்முடைய அச்சத்திற்கு ஆற்றங்கரை வாழ்மரத்தை த்ருஷ்டாந்தமாக அருளிச்செய்தவர் இப்பாட்டில் * காற்றத்திடைப்பட்ட மனத்தை த்ருஷ்டாந்தமாகக் கூறுகின்றார். பெருங்காற்றிலே அகப்பட்ட கலத்தினுள்ளே கிடப்பவர்களின் நெஞ்சுபோலே என்னெஞ்சும் துளங்குகின்தென்கிறார். அவர்கட்கு அச்சம் மேலிடுமேயன்றி அவ்வச்சத்தின் காரணத்தைத் தீர்க்கும் சக்தியில்லாமைபோல எனக்கும் அஞ்சுதலேயன்றி அச்சத்தின் காரணத்தைத் தவிர்க்கும் சக்தியில்லையென்பார் அவர்கள் மனத்தைத் தமக்கு உவமைகூறி 'அஞ்சித் துளங்காநிற்பன்' என்றார். அம்மரக்கலத்திலுள்ளார் பலர்க்கும் உண்டாகிற அச்சத்தினளவு அச்சம் இவரொருவர்க்குமே உண்டாயிற்றென்பது தோன்ற 'கலவர்' எனப் பன்மையாற் கூறினார். அவர்களுக்குக் கவலை உடம்பு அழிதலில் மாத்திரம்; இவர்க்குக் கவலை—உயிர் பேறுபெறாது அழிதலில், என நுண்ணிய வேறுபாடு தோன்றுமாறு 'ஆற்றத் துளங்காநிற்பன்' என்றார். அம்மரக்கலத்தாரது கலக்கத்திலும் தமது கலக்கம் மிக்கதென வெளியிட்டவாறு; ஆகலால், கலவர்மனம் இவர்க்கு ஒருபுடை யுவமையேயன்றி முற்றுவமையன்றென்க. "வந்ததே ஆழ்கலத்தன்னகலும்" "பண்ணார்களிறே போற் பாயோங்குயர்நாவாய், கண்ணார் கடன்மண்டிக் காற்றிற் கவிழுங்கால், மண்ணார் மணிப்பூணோய் மக்களுறுந் துன்பம், நண்ணாநரகத்தின் நான்காமடியன்றே" எனப் பிறநூல்களிலும் கலங்கவிழ்மக்கள் படுந்துன்பமே மிகப்பெருந் துன்பத்துக்கு எடுத்துக்காட்டப்படுதல் காண்க.

ஆழிவலவா!—சரணாகதர்களுடைய எவ்வகைக் கலக்கத்தையும் ஒழிப்பதற்கு ஏற்ற கருவியும் ஆற்றலுமுடையாய்! என்றபடி. வலவன்—வல்லவன். வலக்கையிலேயுடையவன் என்றும் பொருள் கூறலாம்.

சீற்றம்—தொழிற்பெயர்; சீறு—பகுதி: இது இங்குக் காரியவாகுபெயராய், கோபகாரணத்தின்மேல் நின்றது. உள என்ற பன்மையால் அக்குற்றமும் பலவென்க. காற்றத்திடை—காற்றிடை; அத்து—சாரியை. கலவர்—சாரியை பெறாது நின்றது; சாரியை பெறுமிடத்துக் கலத்தவர் என நிற்கும். .... (உ)

தூங்கார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து *
வாங்காயென்று சிந்தித்து நானதற்கஞ்சி *
பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போல் *
தாங்காதுள்ளம் தள்ளுமென் தாமரைக்கண்ணா! (௯)

என் தாமரை கண்ணா — செந்தாமரைபோன்ற திருக்கண்களை யுடைய எனது தலைவனே!

தூங்கு ஆர் பிறவிக்கள் — சஞ்சலம் மிக்க பிறப்புக்களிலே

இன்னம் புக பெய்து — (இதுவரைபட்டது போதாமல்) இன்னமும் புகும்படி போட்டு

வாங்காய் என்று சிந்தித்து — என்னை மீட்கா திருந்திடுவையோ? என்று கவலை கொண்டு

நான் அதற்கு அஞ்சி — நான் அப்பிறவித்துன்பத்திற்கு அச்சமுறுதலால்

பாம்போடு ஒரு கூரையிலே பயின்றாப் போல் — பாம்பினுடனே ஒருவீட்டிலே பழகி வஸிப்பதுபோல

தாங்காது உள்ளம் தள்ளும் — (பல பொல்லாங்குகட்கு இடமான உடலோடுகூடி வாழ்தலைப்) பொறுமல் என்மனம் தடுமாறு கின்றது.

* * *—கீழ் இரண்டு பாசுரங்களில் ஆழ்வார் தமது குற்றங்களையும் அங்கீகரித்து எம்பெருமான்மேற் குறையுங்கூறி அவனது ஸம்பந்தத்தை விடாது பெறும் விருப்பால் வேண்டியதற்கு இரங்கி அப்பெருமான் கண்குளிரக் கடாக்ஷித்தருளி 'ஆழ்வீர்! குற்றங்களை உண்டென்றுஞ்சொல்லி நம்மையும் நீர் வெறுப்பதேன்? நாம் செய்கிறபடி செய்கிறோமென்று பாரத்தை நம்மேல் இட்டு நீர் ஆறி இருக்கலாகாதோ?' என்று திருவுள்ளம்பற்றினதாகக்கொண்டு 'தாமரைக்கண்ணா! என் உள்ளம் நிலைநில்லாது; யான் என்செய்கேன்?' என்கிறார். இன்னமும் பலபல யோனிகளிலே என்னைப் புகும்படிசெய்து மீட்காதிருந்திடுவையோ வென்று கவலைகொண்டு அப்பிறவித் துன்பங்களை நினைந்து அஞ்சுகின்றேனாதலால், பொல்லாத பாம்புடனே ஒரு வீட்டில் பழகி வசிப்பதுபோலப் பல பொல்லாங்குகட்கு இடமான உடலோடு கூடி வாழ்வதைப் பொறுமல் என்மனம் தடுமாறுகின்றதென்கிறார். 'உள்ளந் தள்ளுமென் தாமரைக்கண்ணா!' என்கையாலே என்னுள்ளம் தடுமாறாதபடி கடாக்ஷித்தருள வேணுமென்பது தோன்றும்.

தூங்கு—முதனிலைத் தொழிற்பெயர்; தூங்குதல்—அசைதல்; சலித்தல். மனம் சஞ்சலப்படுதற்கு ஹேதுவான ஸம்ஸாரமென்றபடி. இனி, தூங்குதலாவது உறங்குதலெனக் கொண்டு, தமோகுணவசத்தால் அஜ்ஞானம் மிக்க பிறப்புக்கள் எனினுமாம்.

'பிறவிக்கண்' என்பது பழமையான பாடம்; கண்—ஏழனுருபு. அடுத்த பாசுரத்திற்கும் இது கொள்க. அஞ்சி—அஞ்ச; எச்சத்திரிபு; இங்ஙனங் கொள்ளாதபோது மேலே அந்வயியாது. கூரை—வீட்டின்மேல் வேயப்படுவது; இது சினையாகுபெயராய், சிறுவீட்டைக் குறித்தது. .... .... (௯)

உருவார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து *
திரிவாயென்று சிந்தித்தியேன் றதற்கஞ்சி *
இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பேபோல் *
உருகாநிற்கு மென்னுள்ள மூழிமுதல்வா! (௬)

ஊழி முதல்வா — பிரளயகாலத்து (உலக முழுவதையும் வயிற்றில் வைத்துப் பாதுகாக்கிற) தலைவனே!,

உரு ஆர் பிறவிக்கண் — வடிவமமைந்த பிறப்புக்களிலே

இன்னம் புக பெய்து — இன்னமும் (என்னைப்) பிரவேசிப்பித்து

திரிவாய் என்று சிந்தித்தி என்று — (கருமவசத்தால்) திரியக் கடவாய் என்று (என்னைக்குறித்து நீ) திருவுள்ளங்கொள்ளு கின்றனையோ? என்று

அதற்கு அஞ்சி — அப்பிறவிகளில் திரிதற்கு அஞ்சி,

இரு பாடு எரி கொள்ளியின் உள் எறும்பே போல் — இரண்டுபக்கத்திலும் நெருப்புப்பற்றியெரிய அவற்றின் நடுவிலே அகப்பட்டுவருந்தும் எறும்புபோல,

என் உள்ளம் உருகாநிற்கும் — என்மனம் (க்லேசத்தால்) நெகிழ்ந்து உருகிக் கொண்டேயிருக்கும். ௭

* * *—பிரளயாபத்திலே அனைத்தையும் பாதுகாக்கிற இறைவனே இந்த ஆபத்துக்கும் உதவத் தக்கவனென்று கொண்டு ஊழிமுதல்வா! என விளித்துக் கூறுகின்றார். பிரமன் முதலிய ஸகல தேவர்களுமுட்பட யாவும் அழிந்து போகின்ற கல்பாந்த காலத்திலே ஸ்ரீமந்நாராயணன் அண்டங்களையெல்லாம் தன் திருவயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தை வடிவமாய்ப் பிரளயப் பெருங்கடலிலே ஆதிசேஷனது அம்சமானதோர் ஆலிலையின்மீது பள்ளி கொண்டு அறிதுயில் செய்தருள்கின்றனனென்பது வரலாறு இங்கு அறியத்தக்கது. ஊழிமுதல்வா! இன்னமும் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து திரிவேனும்படி திருவுள்ளம்பற்றி யிருக்கின்றாயோ என்று நினைத்து அஞ்சி, இரண்டு பக்கத்திலும் நெருப்புப் பற்றியெரிகின்ற கொள்ளிக்கட்டையின் நடுவிலே அகப்பட்டு வருந்தும் எறும்புபோல என்மனம் கிலேசப்பட்டுக்கொண்டே யிருக்கின்றதென்கிறார்.

உரு ஆர் பிறவி=உடம்பும் உயிருங்கூடியதாயினும் உடம்பின் குணமான பேதைமையேமிக்கு உயிரின் குணமான உணர்வுகுன்றித் தேஹாபிமானமே மிகுந்து ஆத்மோஜ்ஜீவன வகையிற்புகாத பிறப்பு என்றபடி. பலவகைப்பட்ட வடிவங்கொண்ட பிறப்பு என்னவுமாம். அச்சத்துக்குக் காரணமா யமைந்த பிறப்பு என்றும் பொருள் கொள்ளலாம். திரிதல்—மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து இறந்து உழலுதல்.

இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பேபோல்=எந்தப்பக்கம் போனாலும் தீமையையே அடையும்படி ஜநநமரணங்களிரண்டுக்கும் நடுவே அகப்பட்டுநோவு படுகிற தன்மைக்கும் எங்கும் புகலிடமுமின்றிப் பொறுக்கவும் மாட்டாதுபடுகிற

பாட்டுக்கும் ஏற்ற உவமை. தமது எளிமைதோன்ற எறும்பை உவமைகூறினர், திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்திலுள்ள "இருதலை மின்னுகின்ற, கொள்ளிமே லெறும் பெனுள்ளம்" என்ற செய்யுள் இங்கு நினைக்கத்தக்கது. .... (௪)

கொள்ளக் குறையாத விடும்பைக்குழியில் *
தள்ளிப் புகப்பெய்திகொல்? என்றதற்கஞ்சி *
வெள்ளத் திடைப்பட்ட நரியினம்போலே *
உள்ளம் துளங்காநிற்ப னாழிமுதல்வா! (௫)

| | | | |
|---|---|---|---|
| ஊழி முதல்வா | பிரளயகாலத்தில் அத்வி தீயனாயிருப்பவனே! | அதற்கு அஞ்சி | அப்பிறவித்துயர்க்கு அஞ்சி |
| கொள்ள குறையாத இடும்பை குழியில் | அநுபவிக்க அநுபவிக்கக் குறையாதபடியுள்ள துன்பங்களை விளைப்ப தானகர்ப்பஸ்தானத்திலே | வெள்ளத்து இடை | வெள்ளத்திலே |
| தள்ளி புக பெய்தி கொல் என்று | நான் புகும்படி என்னைத் தள்ளிப் போகடுவையோ நீ என்று | பட்ட | அகப்பட்டுவருந்துகிற |
| | | நரி இனம் போலே | நரிக்கூட்டம்போலே |
| | | உள்ளம் துளங்கா நிற்பன் | மனம் நடுங்கிநிற்பேன்யான். |

* * *—இன்னமும் என்னைக் கொடிய ஸம்ஸாரத்திலே தள்ளி அகற்றி விடப்பார்க்கிறாயோவென்று பெருநீர்ப் பெருக்கிலகப்பட்ட நரியினம் போலே ஒன்றுந் தோன்றாது நிலைதளும்பிக் கிடக்கின்றேனென்கிறார்.

இவ்வளவுகாலம் அநுபவித்துக் கழிவதென ஓர் எல்லையுண்டாகில் அக்கால வரையறையை எதிர்பார்த்து அது கழியுமளவும் கிலேசப்பட்டாலும் படலாம்; அங்ஙனமன்றி, காலதத்துவமுள்ளவளவும் அநுபவித்துக்கொண் டிருந்தாலும் முதலிற் குறைவுபடாது மேன்மேல் வளர்கிற துன்பங்களைத் தருவதானபிறப்பு, என்பது முதலடியின் கருத்து.

பிறப்பில் புகுதற்குக் காரணம் ஊழ்வினையேயாயினும் அதனை எம்பெருமான் ஒழித்திடுவதற்கு ஸமர்த்தனாயிருந்தும் அங்ஙனம்ஒழித்திடாதிருத்தலே காரணமாக 'தள்ளிப்புகப்பெய்தி கோல்' என்று அவன்மேல் ஏற்றிக் கூறுகின்றார். "கிணற்றிலேவிழுகிற ப்ரஜையை வாங்காத தாயைத் தானேதள்ளினாள் என்னக் கடவதிறே" என்ற வியாக்கியான வாக்கியம் அறியத்தக்கது.

தள்ளிப்புகப்பெய்திகோல் ?='நெருப்பிலே அகப்பட்டு எரிகிறவனைத் திரிய அதுக்குள்ளே தள்ளி ஒன்றையிட்டு அமுக்குவாரைப்போலே.'

நரியினம்போலே=வெள்ளத்திலகப்பட்ட ஒருநரியின் வருத்தம் தமது கிலேசத்திற்கு ஒப்பாதற்குப் போதாதென்னுங்கருத்தால் 'நரியினம் போலே உள்ளந்துளங்கா நிற்பன்' என்கிறார். நரிகள் பலவற்றுக்குமுண்டானபயம் இவ வொருவர்க்குமே உண்டாயிற்றென்க.

**ஊழிமுதல்வா!**—முன்பு நீ பரிஹரித்த ப்ரளயாபத்தினளவல்ல நான் நோவு படுகிற ஸம்ஸாரப்ரளயம்; அங்கு ஒருவரும் அபேக்ஷியாதிருக்கப் பரிஹரித்தாய்; இங்கு நான் அபேக்ஷிக்கச் செய்தேயும் பராமுகமாயிருக்கிறாய், என்பது குறிப்பு. .... .... .... .... (ரு)

படைநின்ற பைந்தாமரையோடு * அணிநீலம்
மடைநின் றலரும் வயலாலி மணாளா! *
இடையனெறிந்த மரமே யொத்திராமே *
அடையவருளா யெனக்குன்றனருளே. (சு)

| | |
|---|---|
| படை நின்ற | உழுபடையாகிய கலப்பையைக்கொண்டு உழும்போது அதில் அகப்பட்டு அழியாமல் தப்பி யொதுங்கி நின்ற |
| பைந்தாமரையோடு | பசுமையான தாமரைக் கொடிகளும் |
| அணி நீலம் | அழகிய நீலோற்பலக் கொடிகளும் |
| மடை நின்று | (பின்பு களையாகப்பறித் தெறியப்பட்டு அங்ஙனம் எறியப்பட்ட இடமான) நீர்பாயும் மடையிலே கிடந்து |
| அலரும் | மலரப்பெற்ற |
| வயல் | கழனிகளையுடைய |
| ஆலி | திருவாலியென்னும் திருநகரியிலெழுந்தருளியிருக்கிற |
| மணாளா | மணவாளனென்னும் திருநாமமுடைய எம்பெருமானே! |
| இடையன் எறிந்த மரமே ஒத்து இராமே | (ஆடுமாடுகள் எட்டித்தழை மேயலாம்படி) இடையர்கள் (விரைந்து கையிற் கத்திகொண்டு கிளைகளை) வெட்டிச்சாய்க்கப்பெற்ற மரங்கள்போல யான் ஒருபுறம் உலராதபடி |
| அடைய | நான் உன்னையடையும்படி |
| எனக்கு | எளியவனான அடியேனுக்கு |
| உன் தன் அருள் | உனது கருணையை |
| அருளாய் | செய்தருளவேணும். |

* * *—இவ்வாழ்வார்க்கு அதிஸமீபஸ்தனான வயலாலி யெம்பெருமான் "அடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை, வற்றாநீர் வயல்சூழ் வயலாலியம்மானைப், பெற்றேன் பெற்றதுவும் பிறவாமைப் பெற்றேனே" என்றும் "அணியாலி கைதொழுது, முன்னஞ்சேர் வல்வினைகள் போக முகில் வண்ணன், பொன்னஞ்சேர் சேவடிமேற் போதணியப்பெற்றோமே" என்றும் மிக ஈடுபட்டுக் கூறும்படி மிகப் பாங்கான வழிபடுகடவுளாதலால் இங்கு அப்பெருமானை விளித்து 'எனக்கு உன்றன் அருள் அருளாய்' என்கிறார்.

விளைநிலங்களில் கலப்பைகொண்டு சால்சாலாக உழும்போது இருபுறத்தும் உழுபடை செல்ல அதற்கு அறாமல் இடையிடையே கிடக்குமிடமும் படையெனப்படும். கலப்பைச் சாலில் அகப்படாமல் தப்பிப் படையென்னும் அவ்விடத்திலே நின்ற பசுமையான தாமரைக்கொடிகளும் அழகிய நீலோற்பலக் கொடிகளும் பின்பு பயிர் செய்பவர்களால் களையாகப் பறித்துப் புறத்திலே யெறி

யப்பட்ட இடமான நீர்பாய்மடையிற் கிடந்து மலருமென அந்நாட்டின் நிலவள நீர்வளச் செழுமை கூறியவாறும். * வற்றாநீர் வயல்சூழ் வயலாலியாதலால் இங்ஙனமாதல் கூடும். "மணிகெழுநீர் மருங்கலரும் வயலாலி" "மையிலங்கு கருங்குவளை மருங்கலரும் வயலாலி" "வம்பார் பூவயலாலி" எனப் பிறவிடங்களிலும் இவ்வாழ்வார் அருளிச்செய்தல் காண்க.

மணாளன்—மணவாள னென்பதன் மரூஉ; கலியாணப்பிள்ளையென்று பொருள்படும். மணம் ஆளன் எனப் பிரியும். திருவாலியி லெம்பெருமான் அமிருதகடவல்லி நாச்சியாரை மணம்புரிந்த மணவாளத் திருக்கோலத்துடனே வந்து இவ்வாழ்வார்க்குக் காட்சிதந்து வலிய ஆட்கொண்டு மந்திரோபதேசஞ் செய்து அருள்புரிந்ததனாலும் மணவாளனெனத் திருநாமமுடையன். இவ்வாழ்வார் தம்மைத் தலைமகளாகப் பாவித்து இப்பெருமானைத் தமக்கு மணவாளனாகக் கொண்டு சில திருமொழிகள் விண்ணப்பஞ் செய்திருத்தலும் உணர்க.

பின்னடிகளின் கருத்தாவது;—ஆடுமாடுகள் எட்டித் தழைமேயலாம்படி இடையர்கள் சிலமரங்களின் கிளைகளைக் கைக்கத்திகொண்டு பாதியளவு வெட்டிச் சாயவிட்டிருத்தல் இயல்பு. அம்மரம் ஒருசார் பசுமையாய் ஒருசார் உலர்ந்து கிடக்கும்; அது போல நான் ஞானலாபத்தாலுண்டான மகிழ்ச்சியைப் பெற்றதனோடு பேறுகிடைக்கப் பெறாமையாலுண்டான வாட்டத்தையும் அடைந்திராதபடி எனக்கு அருள்செய்ய வேண்டுமென்கிறார். "நீடுபன் மலர்மாலையிட்டு நின்னிணையடி தொழுதேத்து மென் மனம்வாட நீ நினையேல்..........அணியாலியம்மானே!" என்றார் முன்னும். முழுவதும் ஆநந்தமே பெறும்படி அருளவேண்டுமென்றவாறு. வேர்பறிந்த கொடியின் மலர்களும் போட்டவிடத்திலே செவ்வி பெறும்படி செய்யும் தேசத்திலே வாழ்பவனாய் முதல் பறிந்ததற்குஞ் செவ்வி பெறுத்தவல்ல பரமசக்தியுக்தனை உனக்கு வேர்பறியாது ஒருசாருலர்ந்தது மாத்திரமாயுள்ள மரத்துக்கு முழுவதும் பசுமையுண்டாம்படி செய்தல் எளிதே; ஆகவே, அம்மரம்போல ஒருபுறம் தளிர்த்து ஒருபுறம்வாடும் எனக்கு நீ பூர்ணாநந்தத்தை விளைக்கத்தட்டில்லையென இப்பாசுரத்தின் நயமுணர்க. பலபொல்லாங்குகட்கு இடமான உடம்புடனே இவ்வுலகத்திலே யிருந்து தொண்டுசெய்தலினால் பூர்ணத்ருப்தியுண்டாகாமைபற்றி நான் பரமபதத்தில் உன்னையடையும்படி அருள்புரிய வேணுமென்று வேண்டினாராயிற்று.

'இடையனெறிந்த மரம்' என்றதொடர் ஒரு பழமொழியாய் வழங்கிவந்ததென்பது "அடையப்பயின்றார்" என்றுதொடங்கும் பழமொழிச் செய்யுளின் ஈற்றடியாக அத்தொடர் அமைந்திருத்தலால் தெரிகின்றதென்பர். இங்ஙனமே இத்திருமொழியின் முன்பின் பாசுரங்களில் வந்த 'ஆற்றங்கரை மரம்' 'காற்றிடைப்பட்ட கலவர் மனம்' 'பாம்போடொரு கூரையிற் பயிலல்' 'இருதலைக் கொள்ளியெறும்பு' 'வெள்ளத்திடைப்பட்ட நரியினம்' 'வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது' என்பனவும் முதுமொழியாதலைப் பழைய நூல்களிற் காணலாமென்ப. .... .... .... ....

'நான்' என்று மாத்திரஞ் சொன்னால் அஹங்காரமென்கிற யானென்னுஞ் செருக்குத் தோன்றுமென்று 'அடியேன் நான்' என்றார். இயற்கையில் கரும்பாயிருக்கிற நீ என் திறத்தில் வேம்பாக ஆனாலும் உன்னை நான் விடமாட்டேனென்றது போலவே, இயற்கையில் உனக்கு அடியவனாயிருக்கிற நான் அவ்வடிமை மாறப் பெற்றாலும் உன்னை விடமாட்டேனென்பதாக 'பின்னும்' என்ற சொல்லுக்குக் கருத்துரைப்பர் சிலர்.

'தேம்பலிளந்திங்கள் சிறைவிடுத்து ஐவாய்ப் பாம்பினணைப் பள்ளிகொண்டாய்' என்ற தொடர், அடுத்த பாசுரத்தில் வருகிற அரங்கநகரப்பனைக் குறித்தது. "துண்ட வெண்பிறையின் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய வண்டு வாழ் பொழில்சூழரங்கநகர் மேயவப்பன்" என்ற திருப்பாணாழ்வார் பாசுரம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சந்திரனது உட்குறையைப் போக்கின நீ என்மனக் குறையையும் போக்குவாயென்பது 'தேம்பலிளந்திங்கள் சிறைவிடுத்து' என்றதன் குறிப்பு.

'ஐவாய்ப் பாம்பினணைப் பள்ளிகொண்டாய்' என்றது உன்னை யெப்பொழுதுஞ் சேர்ந்திருக்க விரும்புகின்ற அடியார்க்கு அங்ஙனம் நினது நிரந்தர ஸம்ஶ்லேஷத்தைத் தந்தருள்வாயென்ற குறிப்பு; திருவனந்தாழ்வானைப்போலவே என்னையும் எப்பொழுதும் உன்னைவிட்டுப் பிரியாமல் உன்னிடஞ் சேர்த்துக் கொண்டருளவேணுமென்றவாறு.—கீழும் 'அடையவருளாய் எனக்குன்றனருளே' என்றார்.

எம்பெருமானது திவ்ய தேஜஸ்ஸில் தாம் ஈடுபட்டமை தோன்ற 'பரஞ்சோதி!' என விளிக்கின்றார். பரஞ்சோதி—ஸூரியன் சந்திரன் அக்நி என்னும் முச்சுடர்களின் ஒளியினும் மேம்பட்ட ஒளி. .... .... .... (எ)

அணியார் பொழில்சூழரங்க நகரப்பா! *
துணியேனினி நின்னருளல்லதெனக்கு *
மணியே! மணிமாணிக்கமே! மதுசூதா! *
பணியாயெனக் குய்யும்வகை பரஞ்சோதி! (அ)

| | |
|---|---|
| அணி ஆர் பொழில் சூழ் | அழகுமிக்க சோலைகள் சூழப்பெற்ற |
| அரங்கம் நகர் | திருவரங்கமென்னுந் திருநகரத்தில் எழுந்தருளியிருக்கின்ற |
| அப்பா | தந்தையே! |
| இனி | இனிமேல் |
| நின் அருள் அல்லது | உனது கருணையையே யன்றி மற்றொன்றை |
| எனக்கு துணியேன் | எனக்கு(த் தஞ்சமாக) நினைத்திடேன்; |
| மணியே | நீலமணிபோன்ற வடிவை யுடையவனே! |
| மணி மாணிக்கமே | சிறந்த ரத்நமான மாணிக்கம் போல மேன்மை யுடையவனே! |
| மதுசூதா | மதுவென்னும் அசுரனை யழித்தவனே! |
| பரம் சோதி | சிறந்த வொளியை யுடையவனே! |
| எனக்கு உய்யும் வகை பணியாய் | யான் (பிறவித்துயர்தீர்ந்து பரமபதம் பெற்று) உஜ்ஜீவிக்குமாறு எனக்கு ஒரு நல்வார்த்தையருளிச் செய்யவேணும். |

* *—அரங்கநகரப்பனே! ஆபத்காலத்திலுதவும் உற்ற உறவினனே நீ மிக்க குளிர்ச்சியுடையதாய் இளைப்புத் தீர்க்கவல்லதான திவ்ய தேசத்திலே அடியார்களை உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு வந்து எழுந்தருளியிருத்தலால் உனது அருளையன்றி வேறொன்றை எனக்குப் பற்றுக்கோடாகக் கொள்ளேன் யான் என்கிறார். துணிதல்—ரக்ஷகமாக நிச்சயித்தல்.

அணி ஆர் பொழில்—வரிசையாகப் பொருந்திய சோலை யெனினுமாம். சேதனர்கட்கு ஹிதங்களைச் செய்வதில் தந்தைபோலுதலால் எம்பெருமான் அப்பன் எனப்பட்டான்.

மணியே! கண்டவர் கண்குளிரும்படி நீலமணிபோன்று காண்பவரிளைப்பைத் தீர்க்கும்படியான வடிவுடையவனே! என்றபடி. மணிமாணிக்கமே—மிக்க விலையுள்ளதும் பெறுதற்கரியதுமான மாணிக்கமென்னுஞ் சிறந்த ரத்னம் போல இயற்கையில் மேன்மையுடையவனே யென்றவாறு. இவ்விரண்டும் உவமையாகு பெயர். மதுசூதனன் என்ற வடசொல்—மதுவென்ற அசுரனை அழித்தவ னென்று பொருள்படும். 'மணியே மணிமாணிக்கமே' என்றழைத்தது வடிவழகிலும் மேன்மையிலுங்கொண்ட ஈடுபாட்டினால். 'மதுசூதா' என்றழைத்தது, நீ முன்பு மதுவென்னும் அசுரனைக் களைந்தாற்போல இப்பொழுது என்க்குப் பகையான பிறவித் துயரத்தை அழித்தருள்வாயென்ற குறிப்பு.

செய்வது இன்னதென்று அறியாது சோகித்து நின்ற அர்ஜுநனைக்குறித்து 'உனது பாரமுழுவதையும் நம்மேல் ஏறிட்டு நம்மையே தஞ்சமாக நினைத்திரு; நாம் உன் விரோதிகளைப் போக்குகிறோம்; நீ சோகியாதே' என்று கீதையருளிச் செய்தாற்போல, நான் உய்யும்படி எனக்கு ஒரு நல்வார்த்தை யருளிச் செய்யவேணு மென்பார் 'எனக்கு உய்யும்வகை பணியாய்' என்கிறார். நீ பேறு தந்தருள்வது பின்பொரு ஸமயத்திலானாலும், முன்னர் 'தருவேன்' என்று சொல்லுதல் மாத்திரஞ் செய்தாலும் அதுகொண்டு ஆறியிருப்பேனென்பது உட்கோள்.

இங்ஙனம் தாம் பிரார்த்தித்ததற்கு இரங்கி அவன் ஒன்று சொல்லத்தொடங்கும்போது அவனது திருமுகமண்டலத்திலும் திருமேனியிலும் அருளினுண்டாவதொரு பெருவிளக்கத்தை யுட்கொண்டு பரஞ்சோதி யென விளித்தனரென்பர் பெரியவாச்சான்பிள்ளை. .... .... .... .... .... (அ)

நந்தாநரகத் தழுந்தாவகை * நாளும்
எந்தாய்! தொண்டரானவர்க் கின்னருள்செய்வாய்! *
சந்தோகா! தலைவனே! தாமரைக்கண்ணா! *
அந்தோ! அடியேற்கருளா யுன்னருளே. (கூ)

| | | | |
|---|---|---|---|
| நந்தா நரகத்து | அழியாததொரு நரகமாகிற பிறவித்துயரத்திலே | தொண்டர் ஆனவர்க்கு | உனது அடியவரானவர்களுக்கு |
| அழுந்தா வகை | மூழ்கிக்கிடக்க வேண்டாதபடி | இன் அருள் செய்வாய் | இனிமையான கருணையைச் செய்யுமியல்வுடையவனே! |
| நாளும் | எப்பொழுதும் | எந்தாய் | எமது தந்தையே! |

| | | | |
|---|---|---|---|
| சந்தோகா | வேதங்களையெல்லாம் அறிந்தவனே! | அந்தோ | ஐயோ! |
| தலைவனே | மேம்பட்டவனே! | அடியேற்கு | அடியேனுக்கு |
| தாமரை கண்ணா | செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களை யுடையவனே! | உன் அருள் | உனது கிருபையை |
| | | அருளாய் | செய்தருள். |

* * *—செய்த பாபங்களுக்குத் தக்கபலனாகிய கொடுந்துன்பத்தை அநுபவித்த வளவிலே நரகத்தைவிட்டு நீங்குதல் கூடுமாகையாலே அந்த யமனுடைய நரகத்துக்கு அழிவுண்டு; பிறவித்துயர்க்குக் காரணமான அவித்யை முதலியவற்றிற்கு ஒழிவில்லாமையால் அப்பிறவித் துயரம் மாறாதே அநுபவிக்கப்படுவதாதல் பற்றி 'நந்தா நரகம்' எனப்பட்டது. நரகயாதனையோ டொத்த கொடுந்துன்பமென்றபடி. விவேகிகள் ஸம்ஸாரத்தையே நரகமென்றபெயரால் வழங்குவர். இதற்கு அழிவு செய்வது எம்பெருமானருளன்றி வேறில்லையாதலால் "அழுந்தாவகை நாளும் இன்னருள் செய்வாய்" என்கிறார். அத் திருவருளைப் பெற்றுத் துயர்தீர்ந்து வீடு பெறவேண்டுவார்க்கு அப்பெருமான் திருவடிகளில் வழிபாடுசெய்தல் அவசியமென்பது தோன்ற 'தொண்டரானவர்க்கு' எனப்பட்டது.

கண்ணோட்ட முடையனாய்க் கருணை மழைபொழிய மலரவிழித்த திருக்கண்களின் ஈடுபாட்டினால் 'தாமரைக்கண்ணா!' என்கிறார். அந்தோ! என்ற இரக்கக்குறிப்பு முறையிடுதற்கண் வந்தது. [எந்தாய்! அந்தோ அடியேற்கு அருளாய்] தந்தை அரசாண்டு இன்புறாநிற்க, மைந்தன் தரித்திரனாயிருந்தாற்போல, நீ எவ்வகையாலுங் குறைவில்லாதிருக்க யான் இங்ஙனம் எளிமைப்படுவதே! என்று சிந்தித்து இரங்குகின்றனரென்க. செய்வாய் என்பதில், வகரவிடைநிலை—எதிர்கால முணர்த்தாது தன்மை யுணர்த்திற்று.

சந்தோகன்—வடசொல். சந்தஸ்—வேதம்; அதனால் கானம் பண்ணப்படுபவன்; சந்தோகன். இனி, சந்தஸ்ஸையடைந்தவனெனினுமாம். அடைதலென்னும் பொருளுடைய சொற்களுக்கெல்லாம் அறிதலென்னும் பொருளுமுண்டென்பது வடநூல் வழக்கு: இனி, எல்லா வேதங்களாலும் எடுத்து உரைக்கப்படுபவன் என்றுங் கருத்துக்கொள்ளலாம். சந்தோகமென்னும் ஸாமவேதத்தின் பகுதியை யறிந்தவனே யென்றும் சாந்தோக்யோபநிஷத்துக்கு விஷயமானவனே யென்றும் பொருள் கொள்ளவுமிடமுண்டு.

நாளும்—நாள்தோறும்; எந்நாளும்: உம்மை—முற்றுப்பொருளது. .... (௯)

குன்றமெடுத்தாநிரைகாத்தவன் றன்னை *
மன்றில் புகழ் மங்கைமன் கலிகன்றிசொல் *
ஒன்றுநின்ற வொன்பதும் வல்லவர்தம்மேல் *
என்றும் வினையாயினசாரகில்லாவே. (௧௦)

| | | | |
|---|---|---|---|
| குன்றம் எடுத்து | (கோவர்த்தன) மலையைக் குடையாகவெடுத்துப் பிடித்து | கலிகன்றி | ஆழ்வார் |
| (அது கொண்டு பெருமழையைத் தடுத்து) | | சொல் | அருளிச்செய்த |
| ஆ நிரை | பசுக்கூட்டத்தை | ஒன்று நின்ற ஒன்பதும் | இப்பத்துப் பாசுரங்களையும் |
| காத்தவன் தன்னை | பாதுகாத்தவனான எம்பெருமானைக் குறித்து | வல்லவர் தம் மேல் | ஓதியுணர்ந்தவர்களின் மேல் |
| மன்றில் புகழ் | சபைகளில் புகழப்படுபவராய் | வினை ஆயின | கருமங்கள் |
| | | என்றும் | எப்பொழுதும் |
| மங்கை மன் | திருமங்கை நாட்டுக்குத் தலைவரான | சாரகில்லா | அணுகிப் பயன் விளைக்கமாட்டா. |

* * *—தன்னைச் சார்ந்த உயிர்களை உயர்திணையோடு அஃறிணையோடு வாசியற இடையூறில்லாதபடி குறிக்கொண்டு பாதுகாத்தருள்பவனான எம்பெருமான் விஷயமாகத் திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய இத் திருமொழியை ஓதியுணருமவர்கள் எவ்வினையும் நீங்கப்பெற்று இன்புறுவர் என்று பயனுரைத்து இப்பெரிய திருமொழியைத் தலைக்கட்டியருளினாராயிற்று.

இரண்டாமடியில் 'மன்றில் புகழ்' என்ற பழையபாடம் மறைந்துபோய் 'மன்றில் மலி புகழ்' என்ற புதிய பாடமே எங்கும் பரவிநின்றாலும் அது பெரியோர்க்கு உடன்பாடன்று. இத்திருமொழியில் நேரசை முதலான பாசுரங்கள்தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பன்னிரண்டெழுத்தும், நிரையசை முதலான பாசுரங்கள்தோறும் ஒவ்வோரடியும் ஒற்றொழித்துப் பதின்மூன்றெழுத்தும் அமைந்துள்ளன வென்பதைக் கண்டறிந்தால் இப்பாட்டில் 'மலி' என்பது அதிகப்படியான பாடமென்று எளிதிற் புலனாகும்.

மன்று—பலர்கூடும் வெளியுமாம். சிலரேனும் பலரேனும் கூடுமிடங்களிலெல்லாம் அவர்களனைவராலும் பாராட்டிப் பேசப்படுகின்றது ஆழ்வாருடைய கீர்த்தி யென்றபடி. முன்பு ஐம்புலன் வழிச் சென்றிருந்தமை தவிர்ந்து பின்பு எம்பெருமானைச் சரணமடைந்து அவனருளைப் பெற்றதனாலாகிய தமது புகழையே இங்ஙனம் பாராட்டிக் கூறினராதலால் இது தற்புகழ்ச்சிக் குற்றத்தின் பாற்படாது.

ஒன்று நின்ற ஒன்பது—ஒன்றோடு கூடிநின்ற ஒன்பது. ஒன்றும், நின்ற ஒன்பதும் என்று பிரித்தலுமாம். [மங்கைமன் கலிகன்றிசொல் ஒன்று நின்ற வொன்பதும்] அரசாட்சிச் செருக்குடையராயிருந்தவர் அச்செருக்கு ஒழிந்து தமது குற்றங் குறைகள் மாத்திரமேயன்றி உலகத்தாரது கலிதோஷத்தையுங் கடியுமாறு அருளிச்செய்த திருமொழி. நல்வினையும் பிறப்பிற்குக் காரணமாதலால் அதனையும் உட்படுத்தி 'வினையாயின சாரகில்லா' என்றார்: "இருள் சேரிருவினையுஞ் சேரா இறைவன்; பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்றார் திருவள்ளுவரும். [வினையாயின சாரகில்லா] அவர்கள் இருவினையும் அற்றுப் பிற

வித் துயரகல வீடு பெறுவரென்றபடி. இத்திருமொழி வல்லவர் எம்பெருமானருளாற் பரமபதமடைவரென்ற கருத்தை 'வல்லவர்தம்மேல் என்றும் வினையாயின சாரகில்லாவே' என்று எதிர்மறைமுகத்தால் நன்குவிளக்கினர். அடியவரான தமது பிறப்பைத் தவிர்த்தருளவேணுமென்று எம்பெருமான் பக்கல் விண்ணப்பஞ்செய்து அவனை அதற்கு இணங்கும்படி செய்த திருமொழியாதலால், இதனை ஓதியுணர்பவர்க்கும் வினைசாராவென்று பயன் கூறினர். விளக்கின்முன் இருள்போலவும் காட்டுத்தீயின்முன் பஞ்சுத்துப்போலவும் இத்திருமொழியோதுதலாகிற ஞானத்துக்குமுன் வினைகள் இருந்தஇடமும் தெரியாதபடி அழிந்திடுமென்றவாறு. .... .... ... ... .... (௧௦)

அடிவரவு:—மாற்றம், சிற்றம், துங்கார், உருவார், கொள்ள, படை, வேம்பின் அணியார், நந்தா, குன்றம், கிளியினை.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரிய திருமொழி உரை
முற்றுப்பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.